பக்கங்கள்: இருபத்திநான்கு + A,B

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 வைகாசி 12 புதன்கிழமை (26.05.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 181

# யுத்தக்குற்ற ஆலோசனைக் குழு அமைப்பதில் ஐ.நா. விடாப்பிடி!

## அழுத்தங்களால் தடைப்படாது என்கிறார் பான் கீ - மூன்

நியூயோர்க், மே 26

இலங்கையில் இடம்பெற்றவை எனத் தெரிவிக்கப்படும் யுத்தக் குற்றங்கள் தொடர்பாக ஆராய்வதற்கு ஆலோசனைக் குழு ஒன்றை அமைப்பதில் ஐக்கிய நாடுகள் சபை மிகவும் உறுதியாக இருக்கின்றது என்று ஐ.நா.செயலர் பான் கீ - மூன் தெரிவித்திருக்கிறார்.

இந்த விடயத்தில் இலங்கை அரசு அழுத்தங்களைக் கொடுத்தாலும், அந்த ஆலோசனைக் குழு அமைக்கும் நடவடிக்கை தடைப்படாது என்றும் அவர் கூறியுள்ளார்.

இலங்கையில் சர்வதேச சட்டங்கள் மீறப்பட்டமைக்கு ஐ.நாவும் காரணம் என்ற சர்வதேச நெருக்கடிக் குழுவின் குற்றச்சாட்டை அவர் நிராகரித்துள்ளார்.

நியூயோர்க்கில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்த வேளை இதனைத் தெரிவித்துள்ள அவர், யுத்தக் குற்றங்களுக்குக் காரணமானவர்களை பொறுப்புக்கூறச் செய்யும் நடவடிக்கையை முன்னெடுக்குமாறு இலங்கை அரசைக் கோரியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

''இலங்கை யுத்தக் குற்றம் தொடர்பாக

(24ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய, இலங்கை கடல் எல்லைகளை அறியத் தன்னியக்க சமிக்ஞை முறை

கொழும்பு, மே 26

இந்திய, இலங்கை கடல் எல்லைகளே அறியக்கூடிய தன்னியக்க சமிக்ஞை முறையொன்றை அறிமுகப்படுத்த கடற்றொழில் மீன்பிடி அமைச்சு திட்டமிட்டுள்ளது.

சர்வதேச கடல் எல்லையை மீறி மீன்பிடித்தலில் ஈடுபடுவதால் இலங்கை இந்திய மீனவர்கள் இரு நாட்டுக் கரையோரப் பாதுகாப்புப் படையினரால் கைதுசெய்யப்படும் பிரச்சினைக்கு தீர்வுகாணும் வகையில் அமைச்சு இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

(24ஆம் பக்கம் பார்க்க)

# உள்நாட்டு ஆணைக்குழுவின் செயற்பாடுகளை சர்வதேச விசாரணைகள் பெரியளவில் பாதிக்கும்

## ஐ.நா. செயலரிடம் அமைச்சர் பீரிஸ் எடுத்துரைப்பு



நியூயோர்க், மே 26

இலங்கை தொடர்பான விவகாரங்களில் சர்வதேச மட்டத்தில் விசாரணைகளை மேற்கொள்வதும் நிபுணர்களை நியமிப்பதும் உள்நாட்டு ஆணைக்குழுவின் செயற்பாடுகளைப் பாதிக்கும். எமது நாட்டில் எதிர்மறையான அரசியல் குழப்ப நிலையையும் உண்டுபண்ணும்.

இவ்வாறு இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலர் பான் கீ - மூனிடம் நேரில் எடுத்துரைத்தார்.

பான் கீ - மூனை நியூயோர்க்கில் திங்கட்கிழமை சந்தித்தவேளை இதனைத் தெரிவித்த அவர், ஆணைக்குழுவின் திறமை குறித்து சந்தேகப்படத் தேவையில்லை என்றும் கூறினார்.

இந்தச் சந்திப்பில் வெளிவிவகார அமைச்சர், பான் கீ - மூனிடம் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டுள்ள ஆணைக்குழு வெளிப்புறச் சக்திகளின் தேவையற்ற அழுத்தங்களின்றி செயற்பட அனுமதிக்கப்படுவது அவசியம்.

இலங்கையில் கடந்த சில வாரங்களில் நிலைமை குறிப்பிடத்தக்க அளவுக்கு மாற்றமடைந்துள்ளது. வெளியுலகத் தலையீடுகளோ, குழுக்களை நியமிப்பதோ முற்றிலும் அனாவசியமான விடயம்.

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள ஆணைக்குழுவுக்கு பரந்துபட்ட அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ள மிகத்திறமைசாலிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

(24ஆம் பக்கம் பார்க்க)

## மத்திய ஆபிரிக்கா, சாட் நாடுகளுக்கு இலங்கை இராணுவத்தின் படைப்பிரிவு

கொழும்பு, மே 26

இலங்கை இராணுவத்தின் படைப்பிரிவொன்று ஐ.நா படையுடன் இணைந்து பணிபுரிவதற்காக மத்திய ஆபிரிக்க குடியரசு மற்றும் சாட் ஆகிய நாடுகளுக்கு விரைவில் புறப்பட்டுச் செல்லவுள்ளது.

மூன்று அதிகாரிகள் உட்பட மொத்தம் 61 பேர் இந்தப்படைப்பிரிவில் அங்கம் வகிக்கவுள்ளனர் எனப் பாதுகாப்பு தரப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. இலங்கை இராணுவப் பிரிவொன்று மத்திய ஆபிரிக்காவுக்குச் செல்வது இதுவே முதற் தடவையாகும்.

இலங்கை இராணுவத்தின் தொழிற்சார் தகைமை மற்றும் அதன் திறமை என்பனவற்

(24ஆம் பக்கம் பார்க்க)

# யுத்த அகதிகள் பட்டியலில் இலங்கைக்கு 7ஆவது இடம்!

கொழும்பு, மே 26

சர்வதேச ரீதியாக அதிக எண் ணிக்கையிலான மக்கள் இடம்பெயர்ந்த நாடுகளில், இலங்கை 7 ஆவது இடத்தில் இருக்கின்றது என ஐக்கிய நாடுகள் சபையால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு அறிக்கை ஒன் றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையைப் பொறுத்தவரையில் யுத்தம் காரணமாக 2 லட்சத்து 80 ஆயிரம் பேர் இடம்பெயர்ந்துள்ளனர் என ஐக்கிய நாடுகளின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன என்று அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

போரினாலும், நாட்டின் குழப்பநிலை மற்றும் உள்நாட்டுப் பிரச்சினைகள் காரணமாகவும் இடம்பெயர்ந்தவர்கள் வரிசையில் பாகிஸ்தான் முதலாவது இடத்தில் உள்ளது. கொங்கோ குடியரசு இரண்டா வது இடத்திலும், சூடான் 3 ஆவது இடத்திலும், சோமா

(24ஆம் பக்கம் பார்க்க)

# அகதியாக ஏற்கும் நாட்டுக்கு அனுப்பக் கோரி மலேசியாவில் தமிழர்கள் உண்ணாவிரதம்

கோலாலம்பூர், மே 26

அகதிகளாக ஏற்றுக்கொள்ளும் நாடுகளுக்கு அனுப்பி வைக்குமாறு கோரி மலேசியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழர்கள் 67பேர் நேற்று முதல் உண்ணாவிரதப் போராட்டமொன்றை ஆரம்பித்துள்ளனர்.

குறித்த உண்ணாவிரதத்தை கைவிடும்படி முகாம் அதிகாரிகள் வலியுறுத்தியும் அவர்களின் இந்த உண்ணாவிரதப் போராட்டம் தொடர்வார்கள் என அந்நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

மலேசிய கடல் பகுதியில் தத்தளித்துக் கொண்டிருந்த நிலையில் பெண்கள், குழந்தைகள் உட்பட இலங்கைத் தமிழர்கள் 75பேர் அந்நாட்டு கடற்படை அதிகாரிகளால் பினாங்கு கடற்கரைக்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் தங்களை அகதிகளாக ஏற்றுக்கொள்ளும் நாடுகளுக்கு அனுப்பி வைக்கும்படி மலேசிய அரசை அவர்கள் கேட்டுக்கொண்டனர்.

இந்த கோரிக்கையை முதலில் ஏற்றுக்

(24ஆம் பக்கம் பார்க்க)

# தாண்டிக்குளத்தில் பஸ் குடைசாய்ந்தது; கொழும்புக்குத் திருமண வீட்டுக்குச் சென்று திரும்பியவர் பலி!

வவுனியா, மே 26

ஏ-9 வீதியில் வவுனியா - தாண்டிக்குளம் பகுதியில் நேற்று அதிகாலை பஸ் ஒன்று குடைசாய்ந்ததில், ஒருவர் உயிரிழந்தார்; 7 பேர் படு காயமடைந்தனர்.

கொழும்பில் திருமண நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு யாழ்ப்பாணத்துக்குத் விட்டு திரும்பிக் கொண்டிருந்தவர்களுக்கே இந்த அவலம் ஏற்பட்டது. விபத்தில் மரணமானவர் அரியாலையைச் சேர்ந்தவர் என்று முற்கொண்டு கிடைத்த் தக

(24ஆம் பக்கம் பார்க்க)

# நல்லிணக்கத்தை ஏற்படுத்த இலங்கை அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்

## அமெரிக்க வெளிநாட்டு அமைச்சு அதிகாரி வலியுறுத்து

கொழும்பு, மே 26

"இலங்கையில் தேசிய நல்லிணக்கத்தை உருவாக்க மஹிந்த ராஜபக்ஷ அரசு அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்'' - என்று அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

நாட்டில் தேசிய நல்லிணக்கத்தை உருவாக்கவும் , சமூகங்களுக்கு இடையிலான பிளவுகளை இல்லாதொழிக்கவும் இலங்கை அரசு கட்டாயம் பாடுபட வேண்டும் என்று அமெரிக்க வெளிநாட்டு அமைச்சுப் பேச்சாளர் பி.ஜே.கிரொவ்லி கோரிஉள்ளார்.

ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்களின் போது மக்கள் வழங்கிய ஆதரவை சமூகங்களுக்கு இடையில் காணப்படும் முரண்பாடுகளை [illegible]

(24ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவத்துக்கும், புலிகளுக்கும் ஒரே முகவர் தொடர்பாடல் உபகரணங்களை விற்றாராம்!

கொழும்பு, மே 26

இலங்கை இராணுவத்திற்கு தொடர்பாடல் உபகரணங்களை விற்பனை செய்த ஆயுத விற்பனை முகவர் ஒருவர் அதே வகையான பொருள்களை விடுதலைப் புலிகளுக்கும் விற்பனை செய்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த உபகரணங்கள் முல்லைத்தீவு பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கண்டுபிடிக்கப்பட்டுள்ள தொலைத்தொடர்பு உபகரணங்களில் இராணுவத்தினருக்கு விற்பனை செய்த உபகரணங்களை தடை செய்யக் கூடிய மாற்று உபகரணமும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(சி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புல்லுக்குளத்தைச் சுற்றி முளைக்கிறது நடைபாதை

யாழ்ப்பாணம், மே 26

முனீஸ்வரன் வீதியில் உள்ள புல்லுக் குளத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் நடைபாதை அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

வடமாகாண ஆளுநரின் பணிப்பின் பேரிலேயே நடைபாதை அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் கூறப்படுகின்றது. இந்தக் குளத்தை நவீன வசதிகளுடன் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் துரிதகதியில் புனர்நிர் மாணம் செய்யும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

குளத்தைச் சுற்றிவரப் பாதுகாப்புக் கட்டுக்கள் கட்டப்பட்டுள்ளதோடு அதனை அண்டியவாறு நடைபாதைகளும் உருவாக்கப்பட்டு வருகின்றன. குளத்தின் கிழக்குப் புறத்தில் சிறிய மேடை ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. (எ-224)

## கண்ணீர் அஞ்சலி

மயிலிட்டி பிரதேச சபை உப அலுவலக ஊழியர் நலன்புரிச் சங்க உபதலைவர் கனகரத்தினம் ரவீந்திரன் அவர்களின் அன்புத் தாய்

### கனகரத்தினம் சிவகாமிப்பிள்ளை

அவர்கள் அமரத்துவம் அடைந்த செய்தியறிந்து கவலையடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

வலி.வடக்கு பிரதேச சபை, மயிலிட்டி உப அலுவலக ஊழியர் நலன்புரிச்சங்கம், மல்லாகம்.

(98729)


## வீடு வாடகைக்குண்டு

சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. (வாகன தரிப்பிடமும் உண்டு)

76, இலந்தைக்குளம் வீதி, மாம்பழம் சந்திக்கு அருகில், அரியாலை, யாழ்ப்பாணம். T.P.: 0774658636


## யாழ்ப்பாணம் மாநகரசபை

## அறிவித்தல்

2010 ஆம் ஆண்டுக்கான வியாபார உத்தரவுப்பத்திரம் (வாகன, மிருகவரி) உரிமம் பெறுவதற்கான விண்ணப்பம்

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குட்பட்ட சகல வர்த்தக நிலையங்கள், தனியார் கல்வி நிலையங்கள், தனியார் வைத்திய நிலையங்கள், வங்கிகள் போன்ற உயர் தொழில் நிறுவனங்கள் 2010 ஆம் ஆண்டுக்கான வியாபார உரிமக்கட்டணங்களையும் மற்றும் யாவரும் வாகன, மிருகவரி உரிம கட்டணத்தைச் செலுத்தி அவற்றுக்கான உத்தரவுப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மாநகரசபை, யாழ்ப்பாணம். (சி/567959) மாநகர ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்.


## வேலை வாய்ப்பு

எழுதுநர் (பெண்), அச்சக வேலை தெரிந்தவர் (ஆண்/பெண்) தேவை. விண்ணப்பிக்கவும்.

பரணி தொழில்நுட்ப சேவை

166, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 0718474325

## கோழிக்குஞ்சு விநியோகம்

ஒறிஜினல் (Orginal No.1 Broiler) புரொய்லர் குஞ்சு 07.06.2010 அன்று விநியோகிக்கப்படும். முற்பதிவு செய்யவும்.

எமது கிளை நிறுவனம் (சுட்டி பாம், வட்டுக்கோட்டை) மிலும் பதிவு செய்யலாம் 021 321 6290)

நல்லூர் பாம் சென்ரர், 19 முருகேசர் லேன், நல்லூர். எமது T.P.: 021 222 6944 (98619)


## 31 ஆம் நாளில் நினைவு கூருகிறோம்

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றும் திருமதி ச.தர்சினி அவர்களின் அன்பு மாமனார்

### அரியகுட்டி அரியரத்தினம்

அவர்கள் சிவபதமடைந்து 31 ஆம் நாளாகிய இன்றைய தினத்தில் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பிரதேச செயலகம், தென்மராட்சி. (சி/567961) அனைத்து உறுப்பினர்களும், நலன்புரிச்சங்கம்.

## தவறிவிட்டன

நீர்வேலி தெற்கு, நீர்வேலி எனும் முகவரியுடைய லக்ஷ்மன் சுதாகரன் என்பவரது 811524379 V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டையும், சாரதி அனுமதிப்பத்திரமும் 23.05.2010 அன்று கைதடிச்சந்திக்கும் கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலயத்துக்கும் இடையில் தவறிவிட்டன. இவற்றைக் கண்டெடுத்தவர்கள் கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயத்துக்கு அருகிலுள்ள தீபன் களஞ்சியத்திலோ அல்லது கைதடிச் சந்தியிலுள்ள டயானா சிங்க அலங்கரிப்பகத்திலோ அல்லது 0778435043 எனும் இலக்கத்துடனோ தொடர்பு கொண்டு ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

லக்ஷ்மன் சுதாகரன்

தீபன் களஞ்சியம் அருகில் கைதடி மேற்கு.

## சமய சந்நிதிகளில்

வல்வெட்டித்துறை, மே 26

வல்வெட்டி, வேலில் வீரகத்தி விநாயகப் பெருமான் ஆலயப் பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா இன்று நடைபெறும். நாளை தீர்த்தத்திருவிழாவும், மறுநாள் மாலை பூங்காவனமும் நடைபெறவுள்ளன.

* * *

கோப்பாய், மே 26

கோப்பாய் ஸ்ரீ சித்திர வேலாயுதசுவாமி கோவில் வருடாந்த தேர்த்திருவிழா இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. நாளை வியாழக்கிழமை பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழா இடம்பெறும். (ஓ-72)

## மரண அறிவித்தல்

### கனகசபை அமிர்தலிங்கம்

களபூமி, காரைநகரைச் சேர்ந்த கனகசபை அமிர்தலிங்கம் நேற்று முன்தினம் (24.05.2010) திங்கட்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - நல்லம்மா தம்பதியினரின் அன்பு மகனும் இராசசேகரம் தம்பதியினரின் மருமகனும் அன்னபூரணியின் அன்புக் கணவரும் ஜனார்த்தனன், காபலினி, ஜயராஜ், கோபிகா ஆகியோரின் அன்புத் தந்தையும் ராசமணி, நாகலிங்கம், காலஞ்சென்ற ரட்ணசிங்கம் மற்றும் தர்மகுலசிங்கம், அருள்ஜயா, சுந்தரலிங்கம், பரராஜசிங்கம், ஞானேஸ்வரி, சரோஜா, மனோன்மணி, நகுலேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் இராசபூபதி, ஞானபூபதி, இரத்தினபூபதி, இராசதுரை, சித்திரபூபதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புது றோட், காரைநகர். (98739) தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### தையலாம்பாள் சுந்தரமூர்த்தி



வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தைச் சேர்ந்த பரம்பரை தர்மகர்த்தாவும், உரிமையாளருமாகிய காலஞ்சென்ற வைத்திலிங்கச் செட்டியாரினதும், காலஞ்சென்ற கண்ணம்மாள் ஆச்சியினதும் அன்புப் புதல்வி திருமதி தையலாம்பாள் சுந்தரமூர்த்தி நேற்று (25.05.2010) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுந்தரமூர்த்தியின் அன்பு மனைவியும், அனுசியா, கண்ணன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், வைத்திலிங்கச் செட்டியார் (தர்மகர்த்தா, வண்ணை வைத்தீஸ்வரன் கோயில்), தயாமதி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், கந்தப்பா (லண்டன்), மதுரா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(98736)

வண்ணை வைத்தீஸ்வரன் கோயில். தகவல்: கந்தப்பச் செட்டியார் வைத்திலிங்கச் செட்டியார், கந்தப்பச் செட்டியார் ரமேஷ், மருமகன்.

### பாதணிகள், கால் உறைகள் மாணவர்களுக்கு அன்பளிப்பு

யாழ்ப்பாணம், மே 26

மந்துவில் றோமன் கத்தோலிக்க தமிழ்ப் பாடசாலையில் அண்மையில் இணைந்து நலன்புரிநிலையங்களிலிருந்து விடுவிக்கப்பட்ட 43 மாணவர்களுக்கு யேசு சபை அகதிகள் பணி நிறுவனத்தினர் பாதணிகளையும் கால் உறைகளையும் விநியோகித்துள்ளதாக அதிபர் சி.பவ லோஜிரன் தெரிவித்தார். (ஓ-207)

## மரண அறிவித்தல்கள்

### சுப்பிரமணியம் கமலநாதன்



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் கமலநாதன் நேற்று (25.05.2010) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - அன்னரத்தினம் தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரனும் செல்வராணியின் அன்புக் கணவரும் வர்சிகா, திருக்குமரன், கிரிகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொக்குவில் மேற்கு, கொக்குவில். (98733) தகவல்: S.சிவயோகநாதன் (சிவா - சகோதரன்).

### காசிநாதர் சின்னத்துரை

மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் தற்போது கொடிகாமத்தை வதிவிடமாகவும் கொண்ட செ க்கர் காசிநாதர் சின்னத்துரை நேற்று (25.05.2010) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அமரர் சிவயம்மாவின் அன்புக் கணவரும் அமரர் அன்னப்பிள்ளை அருணாசலத்தின் அன்புத் தம்பியும் திருநாவுக்கரசு, அமரர் யோகராசா சௌபாக்கியவதி, லீலாவதி (கொழும்பு), இராமச்சந்திரன் (டென்மார்க்) ஆகியோரின் தாய்மாமனும் சிவபாக்கியவதி, இராசம்மா, கதிர்காமநாதன், மோகனசுந்தரம், அம்பிகா, அமரர் மணி, தேவி, பாலசிங்கம், அமரர் பூபாலசிங்கம் (பரராசசிங்கம்), பாலசுந்தரம் ஆகியோரின் சிறிய தகப்பனாரும் ஆனந்தம், முத்தம்மா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.05.2010) புதன்கிழமை சிவசோதி இல்லம், கொடிகாமத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 2 மணிக்கு வேவில் மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொடிகாமம். தகவல்: அ.திருநாவுக்கரசு (ஓய்வுபெற்ற அதிபர்).

### திருமதி இராயப்பு லூர்துநாயகி

குருநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராயப்பு லூர்துநாயகி நேற்று (25.05.2010) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

28, மார்ட்டின் வீதி, யாழ்ப்பாணம். தகவல்: கு.இராயப்பு (கணவர் - கலையார்வன்), தா.விவியன் விமலராஜ் (மருமகன் - கட்டட படவரைஞர்). (98738)

### தம்பையா தயாளதேவன்



ஏழாலை வடக்கைச் சேர்ந்த தம்பையா தயாளதேவன் நேற்றுமுன்தினம் (24.05.2010) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் கமலாவதியின் (பேபி) அன்புக் கணவரும், யேசுதா, ஜெமிந்தினி, ஜெனார்த்தனன், ஜெரம்ஜா ஆகியோரின் அன்புத் தந்தையும் அமிர்தசாகரனின் அன்பு மாமனாரும் வர்சிகனின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (25.05.2010) செவ்வாய்க்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(98734) தகவல்: சீ.சந்திரகாந்தன், ப.மனோகரன், பொ.துவாரகன், க.நிக்சன் (நண்பர்கள்).

### திருமதி சிவகாமிப்பிள்ளை சின்னத்துரை

மட்டுவில் வடக்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த சிவகாமிப்பிள்ளை சின்னத்துரை நேற்று (25.05.2010) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பா - பொன்னுப்பிள்ளை தம்பதிகளின் மகளும், சின்னத்துரையின் அன்பு மனைவியும், அமிர்தாம்பிகை (ஓய்வுபெற்ற ஆசிரியை, றோயல் கல்லூரி, கொழும்பு), அன்னலக்ஷ்மி (செயலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், கோபாலன் (ஓய்வுபெற்ற கணக்காளர்), இராஜசிங்கம் (ஓய்வுபெற்ற இ.போ.சபை நடத்துநர்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் சிவக்கொழுந்து, போதநாயகம், காலஞ்சென்ற சாந்தநாயகி மற்றும் குலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.05.2010) புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் ஊரிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி. (98737) தகவல்: குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## இவர்கள் கதி இப்படியே தொடருமா?

காணாமற்போனோர் சம்பந்தப்பட்ட பிரச்சினையை விரைவில் முடிவுக்குக் கொண்டுவரவேண்டும் என்று வற்புறுத்தி நேற்றுமுன்தினம் வவுனியாவில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடைபெற்றது.

காணாமற்போனோரைத் தேடிக் கண்டறியும் குழு நடத்திய அந்தப் பேரணியில் காணாமற்போனோரினதும் மற்றும் கைதுசெய்யப்பட்டு எங்கிருக்கிறார்கள் என்ற விவரம் தெரியாதவர்களினதும் பெற்றோர், மனைவிமார், பிள்ளைகள், உறவினர்கள் என்று ஆயிரக்கணக்கில் பங்குபற்றித் தமது கோரிக்கையை முன்வைத்தனர்; நாடறிய அம்பலப் படுத்தினர்.

2005ஆம் ஆண்டிலிருந்து ஆயுதப்படையினராலும், பொலிஸாராலும் கைதுசெய்யப்பட்டதன் பின்னர் அவர்கள் குறித்து எந்தவித தகவலோ பதிவோ இல்லாமல் கடந்த ஐந்து வருடங்களாக காணாமற்போனோர் பட்டியலில் சேர்க்கப்பட்டவர்கள் குறித்த விவகாரம் இது.

இந்த வகையில் சுமார் 12,000 பேர் குறிப்பாக இளைஞர்களும் யுவதிகளும் காணாமற்போனதாக தெரிவிக்கப் படுகிறது. தமிழர்கள் மட்டுமன்றி அரசுக்கு எதிரான மாற்றுக் கருத்துடைய சிங்கள, முஸ்லிம், இளைஞர்கள், யுவதிகளும் ஏன் நடுத்தர வயதினரும் இதில் அடங்குகின்றனர். இவர்கள் குறித்த பதிவு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடமும் இல்லை.

கைதுசெய்யப்பட்டவர்கள் காணாமற்போனவர்கள் - இல்லை, இல்லை - காணாமற்போகச் செய்யப்பட்டவர்கள் இந்த நாட்டின் பிரஜைகள் என்பதனை விடவும் அவர்களும் மனிதர்கள், அவர்களுக்கு என்ன நடந்தது, அவர்கள் எங்கிருக்கிறார்கள் என்ற விவரம் தெரியாமல் மனம் நொந்துள்ள அவர்களது உறவுகளின் மனவெதும்புதலையும் உளநலப் பாதிப்புக்களையும் சற்றும் உணராத அரசையும் அதன் அதிகாரிகளையும் எந்த வகையைச் சார்ந்தவர்கள் என்று வகுப்பது?

மனித உரிமைகள் குறித்தும் மனித நேயம், மனிதாபிமானம் என்றும் வாய் நிறையப் பேசும் அரசியல்வாதிகள் ஆட்சிபீடம் ஏறியதும், தங்கள் அதிகாரத்தனத்தையும் மமதையையும் வெளிப்படுத்தி அப்பாவிகளையும் அடைத்து வைக்கும் கொடூரத்தனம் அவர்களிடம் மேலோங்கிவிடுகிறது.

ஜனநாயகம் என்ற பெயரில் அதனை மூடுபோர்வையாக்கி நடைபெறும் இந்த வகை அட்டூழியங்கள் ஏனைய நாடுகளைவிட இந்த நாட்டில் கடந்த பல ஆண்டுகளாக அதிகரித்துப் போவது 'இயல்பு நிலை' ஆகிவிட்டது. கடந்த சில வருடங்களாக அது எல்லை மீறி அதிகரித்தும் வருகிறது.

குற்றம் செய்தோரை, குற்றம் இழைத்தவர்கள் என்று கருதப்படுவோரை தக்க ஆதாரங்களுடன் நீதிமன்றத்தின் முன் நிறுத்த வேண்டும். சம்பந்தப்பட்டவர் தாம் குற்றவாளி அல்லர் என்று நிரூபிக்கும் உரிமையுடையவர். ஆனால், அத்தகைய ஜனநாயக உரிமைகள், நடைமுறைகள் எல்லாவற்றையும் காலால் மிதித்துக் கொண்டு, நீதியை நிலை நாட்டுவதற்கு எதிராக அநீதி இழைக்கப்படுவது சர்வாதிகாரமே!

தமிழ்மக்களின் உரிமைப் போராட்டம் தொடங்கப்பட்ட ஐம்பதுகளிலேயே ஜனநாயக விரோத ஆட்சிப் போக்கு இந்த நாட்டில் முகிழ்த்துவிட்டது. சட்டமறுப்பு இயக்கத்துக்கு எதிரான ஒடுக்குமுறை வடிவத்தில் ஆரம்பிக்கப்பட்ட அராஜகம் ஆகப்பிந்தி பயங்கரவாதத் தடைச் சட்டம் என்று விஸ்வரூபம் எடுத்தமை இந்த நாட்டின் வரலாறு.

அரசாங்கமும் அதிகாரிகளும் தமது இலக்குக்கு ஏற்ப, விருப்பு வெறுப்புக்கு ஏற்ப, அதனை வளைத்துப் பயன்படுத்தி அப்பாவிகளையும் அதற்குள் அடக்கி நீதியையும் மனிதாபிமானத்தையும் காலால் மிதித்துப் பல ஆண்டுகளாயிற்று. அதன் தொடர்ச்சியே இப்போதும் நீள்கிறது.

''மனிக்பாம்'' பகுதியில் நிவாரணக் கிராமங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள 11,000 தமிழ், இளைஞர், யுவதிகளின் நிலையும் இத்தருணத்தில் கவனத்தை ஈர்க்கும் ஒரு பிரச்சினையாகும். இவர்கள் வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து சென்றபோது மற்றவர்களை விடப் புறம்பான இடத்தில் தங்கவைக்கப்பட்டனர். எப்படியோ ஆரம்ப காலத்தில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அங்கு சென்றுவர முடிந்ததால் அவர்கள் குறித்த பதிவேனும் உள்ளது. அதன் பின்னர் சென்றவர்கள் பதிவுக்குள் அடங்கவில்லை என்பது தகவல்.

நிவாரணக் கிராமங்களில் தடுத்துவைக்கப்பட்டிருப்பவர்களை ஆரம்பத்தில் உறவினர்களும் சென்று பார்க்க முடிந்தது. அதன் பின்னர் அதற்கு அனுமதி மறுக்கப்பட்டது. நிவாரணக் கிராமங்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்கும் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம், அதனோடு தொடர்புள்ள சர்வதேச அரசு சார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு மட்டுமே இப்போது அங்கு செல்ல அனுமதி வழங்கப்படுகிறது.

வெளிநாட்டு ராஜதந்திரிகளும் வெளிநாட்டு ஊடகவியலாளர்களும் ''ஏற்பாடு செய்யப்பட்ட விஜயங்களை''ச் செய்ய முடிகின்றது. அவ்வளவுதான்! தமிழ் மக்களின் நாடாளுமன்றப் பிரதிநிதிகளான தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினருக்கே நிவாரணக் கிராமங்களுக்குச் செல்லக் கதவடைப்பு நடத்தப்பட்டது.

நிவாரணக் கிராமத் தமிழ் இளைஞர், யுவதிகளின் வாழ்க்கை நிலை என்ன, அவர்களை என்ன செய்ய அரசு உத்தேசித்துள்ளது, அல்லது தீர்மானித்துள்ளது. அவர்களையும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் சிறையிலடைக்கப்போகிறதா? அல்லது பழக்கதோஷத்தில் விசாரணைக்காகத் தடுத்துவைக்கப்போகிறதா?

**இந்தக் கேள்விகளுக்குப் பதில் தெரியாமல் 11,000 தமிழ் இளைஞர், யுவதிகளின் பெற்றோர்கள், நித்தம் நித்தம் ஊனுருகி, உயிர் உருகி அபலைகளாகவும் மன நலம் குன்றியவர்களாகவும் திரிவதுதானா அவர்கள் விதி? இது குறித்து அரசு தனது நிலைப்பாட்டை பகிரங்கப்படுத்தப் போவது எப்போது?**

# சேமலாப நிதி விண்ணப்பங்களை அங்கீகரிக்கும் அதிகாரம்
# அந்தந்த மாவட்டத்தொழில் ஆணையாளர்களுக்கு
## கொடுப்பனவைத் துரிதமாக வழங்கப் புதிய ஏற்பாடு

யாழ்ப்பாணம், மே 26

ஊழியர் சேமலாப நிதி தொடர்பான விண்ணப்பங்களைப் பரிசீலித்து அங்கீகரிக்கும் அதிகாரம் அந்தந்த மாவட்ட உதவித் தொழில் ஆணையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:

இதுவரை காலமும் ஊழியர் சேமலாப நிதி மீளளிப்புத் தொடர்பான விண்ணப்பங்கள் அந்தந்த மாவட்ட தொழில் அலுவலகங்களால் பெறப்பட்டு பரிசீலிக்கப்பட்டு அதன் பின்னர் கொழும்பிலுள்ள தொழில் திணைக்களத் தலைமைக் காரியாலயத்துக்கு அனுப்பப்பட்டு வந்தன.

பின்னர் அவ் விண்ணப்பங்கள் தலைமைக் காரியாலயத்தால் பரிசீலிக்கப்பட்டு குறித்த பணம் குறித்த நபருக்கு உரியதென உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் இலங்கை மத்திய வங்கிக்கு அனுப்பப்பட்டு உரியவர்களது வங்கிக் கணக்கில் சேர்க்கப்பட்டது.

எனினும் தற்போது அங்கத்தவர்களது தொகை நாளுக்குநாள் அதிகரித்து வருவதால் இப் பணிகளை அந்தந்த மாவட்ட தொழில் திணைக்களங்களில் பெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன்படி ஊழியர் சேமலாப நிதி விண்ணப்பங்களைப் பொறுப் பெடுத்தல், கணனியில் பதிதல், குறித்த ஊழியர் சேமலாப நிதியை அனுமதித்தல் போன்ற செயற்பாடுகள் அந்தந்த மாவட்டத் தொழில் திணைக்களங்களில் மேற்கொள்ளப்பட்டுப் பின்னர் ஒருங்கிணைவுத் தன்மை பேணும் பொருட்டு கொழும்பு தலைமைக்காரியாலய வலைப்பின்னலில் இணைக்கப்படும்.

பின்னர் கொழும்பு தலைமைக் காரியாலயம் அதனைப் பரிசீலித்து அன்றே பணவிடுப்பு கடிதத்தை மத்தியவங்கியிடம் சமர்ப்பிக்கக் கூடியதாக இருக்கும்.

இதன் மூலம் விண்ணப்பதாரிகள் தமது ஊழியர் சேமலாப நிதியினை விரைவாகப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (1-16)

# உலக வங்கியின் நிதி உதவியுடன் கிராம மட்டத்தில் நான்காண்டுத் திட்டங்கள்
## மக்கள் பங்களிப்போடு முன்னெடுக்கப்படும்

யாழ்ப்பாணம், மே 26

உலக வங்கியின் அனுசரணையுடன் வடக்கு, கிழக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சுக்களினால் கிராம அலுவலர் பிரிவுகளில் நான்காண்டு அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

வடக்கு, கிழக்கு உள்ளூர் சேவை மேம்பாட்டு திட்டம் (நெல்சிப்) என்னும் பெயரில் ஒவ்வொரு உள்ளூராட்சி சபைகளிலும் இத் திட்டத்தில் தலா 10 மில்லியன் ரூபா செலவில் வேலைத்திட்டங்கள் மேற் கொள்ளப் படவுள்ளன.

உள்ளூராட்சி சபைகள் ஒவ் வொரு கிராம் அலுவலர் பிரிவுகளிலும் குழுக்கள் தெரிவு செய்து அவற்றினால் இனங்காணப்பட்டு முன்னுரிமை அடிப்படையில் தெரிவுசெய்யப்படும் வேலைகளை துரித கதியில் செய்து முடிப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சாவகச்சேரி நகரசபையினர் சபை எல்லைக்குட்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளை இரண்டு கொத்தணிகளாக பிரித்து அவற்றிலிருந்து பிரதிநிதிகளைத் தெரிவுசெய்துள்ளனர்.

தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளால் முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டங்களை இன்னும் மூன்று மாதத்தில் ஆரம்பிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (1-207)

# கிளிநொச்சி, யாழ்ப்பாணத்தில் அடுத்த மாதத்தில் 6 வங்கிக் கிளைகள்

கொழும்பு, மே 26

கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணத்தில் ஆறு வங்கிக் கிளைகள் அடுத்த மாதம் 7 ஆம் திகதி திறந்து வைக்கப் படவிருக்கின்றன.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் இத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:

பிரதேச பொருளாதார நடவடிக்கைகளுக்கு உதவும் பொருட்டு ஆறு புதிய வங்கிக் கிளைகள் வட மாகாணத்தில் திறக்கப்படும். அதன் பிரகாரம் மக்கள் வங்கி, கிளிநொச்சி, மாங்குளம் மற்றும் பரந்தனில் மூன்று புதிய கிளைத் திறக்க உள்ளது. கொமர்ஷல் வங்கி மற்றும் செலான் வங்கி கிளிநொச்சியில் தலா ஒரு கிளையினை திறக்கவுள்ளன.

நேசன் ட்ரஷ்ட் வங்கி, யாழ்ப்பாணத்தில் ஒரு கிளையினைத் திறக்கவுள்ளது. இதன்படி, கிளிநொச்சியில் மூன்று புதிய வங்கிக் கிளைகளும் பரந்தன், மாங்குளம் மற்றும் யாழ்ப்பாணத்தில் தலா ஒவ்வொரு கிளையும் திறக்கப்படும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில் மேலும் புதிய கிளைகளை திறப்பதற்குத் தேவையான மத்திய வங்கியின் ஒப்புதல்களும் வழங்கப்பட்டுள்ளன - என்றுள்ளது. (1)

# இரத்மலானை புனர்வாழ்வு நிலையத்திலிருந்த சகல மாணவர்களும் பெற்றோரிடம் ஒப்படைப்பு

கொழும்பு, மே 26

இரத்மலானை இந்துக் கல்லூரியில் இயங்கிவந்த புனர்வாழ்வு நிலையத்தில் தங்கியிருந்த சகல மாணவர்களும் அவர்களின் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர். அத்துடன் அந்த நிலையம் கடந்த திங்கட்கிழமை மூடப்பட்டது.

நீதி மறுசீரமைப்பு அமைச்சின் ஏற்பாட்டில் கடந்த வருடம் ஒக்ரோபர் மாதத்தில் வன்னியிலிருந்து அழைத்து வரப்பட்ட 273 மாணவர்களுக்கு அகில இலங்கை இந்துமாமன்றம் கல்வி வசதிகள் வழங்க வேண்டும் என்ற நன் நோக்கத்தில் அவர்களை கொழும்பு இந்துக் கல்லூரி புனர்வாழ்வு மையத்தில் தங்கவைத்து விடுதி மற்றும் உணவு வசதிகள் உட்பட சகல வசதிகளுடன் பராமரித்து வந்தது.

இங்கு தங்கியிருந்த மாணவர்கள் விடுவிக்கப்பட்டு அவர்களது பெற்றோருடன் ஒப்படைக்கப்பட வேண்டும் என்றும் மாமன்றம் அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்து வந்தது.

இவர்களுள் ஒரு பகுதியினர் ஏற்கனவே விடுவிக்கப்பட்டிருந்த நிலையில், எஞ்சியிருந்த அனைவரும் கடந்த திங்கட்கிழமையன்று விடுவிக்கப்பட்டு, அவர்களது பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இவர்களுள் வசதி குறைந்த குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்களை, அவர்களது பெற்றோர்கள் விரும்பும் பட்சத்தில் இரத்மலானை கொழும்பு இந்துக் கல்லூரியில் இணைந்து கல்வி கற்பதற்கான வசதிகளுடன் அவர்களை இலவச மாணவர் விடுதியில் அனுமதித்துப் பராமரிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாகவும் மாமன்றம் உறுதியளித்துள்ளது.

கடந்த டிசம்பர் மாதத்தில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய புனர்வாழ்வு மையத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு மாமன்றம் விசேட கல்விப் பயிற்சிகளை வழங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது.

இரத்மலானை புனர்வாழ்வு மையத்திலிருந்து விடுவிக்கப்பட்ட மாணவர்களுக்கான பிரியாவிடை வைபவம் திங்கட்கிழமை மாலை புனர்வாழ்வு ஆணையாளர்பிரிகேடியர்சுதந்தரணசிங்க தலைமையில் நடைபெற்றது. (1)

## நாளை

| | |
|---|---|
| வைகாசி 13 27.05.2010 | வியாழக்கிழமை |
| திதி | : பூரணை பி.இ. 05.22 |
| நட்சத்திரம் | : விசாகம் பி.ப. 12.40 வரை |
| சுபநேரம் | : 07.22 - 08.52 |
| ராகுகாலம் | : 01.22 - 02.52 |

பூரணை விரதம்

# தாராக்குளம் மீள்குடியேற்றம் குறித்து அப்பிரதேச மக்களுடன் அமைச்சர் டக்ளஸ் ஆராய்வு

யாழ்ப்பாணம், மே 26

யாழ். நகர மத்தியில் உயர் பாதுகாப்பு வலயமாக விளங்கிய நிலையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்ட நடவடிக்கை காரணமாக பொதுமக்களின் குடியேற்றத்திற்கு விடுவிக்கப்பட்ட யாழ்.தாராகுளம் குடியேற்றத்திட்ட மக்கள் அமைச்சரைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் யாழ்.அமைச்சுப் பணிமனையில் இடம்பெற்ற மேற்படி சந்திப்பின் போது தமது கோரிக்கைகளையும் பிரச்சினைகளையும் எடுத்துரைத்த அக்குடியேற்றத்திட்ட மக்கள் பிரதிநிதிகள் தொடர்ச்சியாக பதினெட்டு வருடங்கள் தாம் அங்கு வசிக்காத நிலையில் வீட்டு உறுதிகள் இழந்த குடியேற்றத்திட்ட உரிமையாளர்களுக்கு வீட்டு உறுதிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கும் சேதமடைந்துள்ள தமது வீடுகளை புனரமைப்பதற்கும் உரிய ஏற்பாடுகளை செய்து தருமாறு கேட்டுக்கொண்டனர்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ். பிரதேச செயலாளர் மற்றும் வீடமைப்பு அதிகார சபையின் யாழ். பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் ஆகியோருடன் தொடர்பு கொண்டு விவரங்களை கேட்டறிந்து கொண்டதுடன் தாராக்குளம் குடியேற்றத்திட்ட மக்களின் கோரிக்கைகள் விரைவில் தீர்த்துவைக்கப்படும் என உறுதியளித்தார்.

இச்சந்திப்பின்போது யாழ். மாநகர சபை பிரதி முதல்வர் துரைராஜா இளங்கோவும் (றீகன்) உடனிருந்தார். (1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு:
19★07★1928

இறப்பு:
26★04★2010

## திருமதி ஆறுமுகம் தையல்நாயகி

அன்போடு எங்களை அரவணைத்து ஆனந்தித்து
பண்போடும் பாசமொடும் படிக்கவைத்துப்
பார்தன்னில்
வண்ணமுற வழிகாட்டிய உமை என்றும் நாம்
மறவோம்.

93, கலைமகள் வீதி, மக்கள், மருமக்கள்,
அரியாலை. (98732) பேரப்பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்

## சின்னட்டி செல்லமுத்து



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் உயரப்புலம், ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னட்டி செல்லமுத்து நேற்று (25.05.2010) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - வள்ளியம்மை தம்பதியினரின் அன்பு மகளும் சின்னத்தம்பி சின்னட்டியின் அன்பு மனைவியும் மனோன்மணி, தம்பையா, காலஞ்சென்றவர்களான கதிரவேலு, சின்னத்தங்கம், சுப்பையா, நல்லதம்பி, பொன்னம்பலம், வைத்திலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் இரத்தினசிங்கம், புஸ்பராணி, இராசமலர், இராஜேஸ்வரி, விமலாதேவி, நாகேஸ்வரி, கோபாலசிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும் குகனேசவதனி, காலஞ்சென்றவர்களான முத்துராசா, நல்லதம்பி மற்றும் செல்வரட்ணம், ஜெயநந்தினி ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற ஜெயராணி மற்றும் ரவீந்திரன், ஜெயசுதா, ஸ்ரீதரன், கஜனி, காலஞ்சென்ற சிவகுமார் மற்றும் சந்திரகுமார், சுரேஸ்குமார், பிரியதர்சினி, பிரதீபன், நவநீதன் (பிரான்ஸ்), சாழினி, ஜெயரூபன், முரளிதரன் (லண்டன்), தக்ஷா (லண்டன்), பிரியபாலினி, மயூரி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ரக்சன், கனுஷி (லண்டன்), தனுஜன் (லண்டன்) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.05.2010) புதன்கிழமை மு.ப. 11 மணியளவில் உயரப்புலம் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காகக் கரையாம்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உயரப்புலம், தகவல்:
ஆனைக்கோட்டை. (98730) குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் நினைவலைகள் 9ஆம் ஆண்டு

அமரர் அரியகுட்டி அரியரத்தினம்



பிறப்பு: 27.09.1934
இறப்பு: 26.04.2010

திருமதி அரியரத்தினம் கமலாதேவி



பிறப்பு: 05.10.1950
இறப்பு: 04.06.2002

கடந்த 26.04.2010 அன்று சிவ
பதமடைந்த எமது குடும்பத்தலைவரின்
வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று
(26.05.2010) புதன் கிழமை முற்பகல்
10.30 மணியளவில் எமது இல்லத்தில்
நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து
நடைபெறும் மதிய போசனத்திலும்
கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்,
நண்பர்கள் அனைவரையும் அன்புடன்
அழைக்கிறோம்.

எம் எல்லோரையும் வாழ
வைத்த எம் குல விளக்கே!
ஒன்பது ஆண்டுகள்
சென்றாலும் எம் உள்ளக்
கோயிலில் வாழ்ந்து
கொண்டிருக்கிறீர்கள்...

மானிப்பாய் வீதி,
உரும்பிராய் மேற்கு, உரும்பிராய். (78714) குடும்பத்தினர்.

# 'லைலா'வின் சீற்றத்தால் கல்லூரிக் கூரை சேதம்

கொழும்புத்துறை, மே 26

அண்மையில் வீசிய 'லைலா'வின் சீற்றத்தால் யாழ்.புனித சம்பத்தரிசியார் கல்லூரியின் மாடிக் கட்டடக் கூரைப்பகுதிகள் பலத்த சேதத்துக்குள்ளாகியுள்ளன.

பல மாடிக்கட்டடங்களைக் கொண்ட இக் கல்லூரியின் கூரைகளிலிருந்து 90 இற்கும் மேற்பட்ட கூரை 'சீற்று'கள் காற்றினால் தூக்கிவீசப்பட்டுள்ளன.

இரவு வேளையில் இந்த அனர்த்தம் இடம்பெற்றமையால் மாணவர்கள் பாதிப்பில் இருந்து தப்பிக்கொண்டதாகவும் கூரைகள் சேதமுற்றபகுதியில் உள்ள வகுப்புக்களின் கல்விச் செயற்பாடுகளில் சில இடர்கள் எதிர்நோக்கியுள்ளதாகவும் கல்லூரி அதிபர் அருட்திரு. ஜெறோ செல்வநாயகம் அடிகள் தெரிவித்தார்.

(ஒ-135)

## தவறிவிட்டது

தங்க ஆபரணம் ஒன்று கடந்த 23.05.2010 ஞாயிற்றுக்கிழமை நவாலி சென்பீற்றர் தேவாலயத்திற்கும் ஆனைக்கோட்டை பூபதி வெதுப்பகத்திற்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

இரத்தினசிங்கம் புஸ்பராணி, முருகமூர்த்தி கோயில் வீதி, நவாலி கிழக்கு, மானிப்பாய். T.P. : 0777488873

## German, Swiss மொழி வகுப்புகள்

தமிழ் மொழி பெயர்ப்புடன் நடை பெறுகின்றது.(Germanyயிலிருந்து வந்த ஆசிரியரால் கற்பிக்கப்படுகின்றது)

தொடர்புகளுக்கு - 10, Palaly Road, Jaffna. T.P. 0771604823

## சிவம் கல்வி நிலையம்

சாயி இல்லம் அருகாமை,
சூராவத்தை கிழக்கு, சுன்னாகம்.

என்னிடம் கல்வி பயின்று சிங்கள மொழி G.C.E. (O/L) பரீட்சைக்குத்தோற்றிய எல்லா மாணவர்களும் சித்தியடைந்ததையிட்டு எனது வாழ்த்துக்களையும் மன மகிழ்ச்சியையும் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சிங்கள ஆசிரியை திருமதி சிவமணி சுந்தரலிங்கம்.

உடனே உங்களிடத்திலே!

கருமை நிறமா? கரும்புள்ளியா? தோல் சுருக்கமா? உதடு வெடிப்பா? உடற்பருமனா?

கவலையை விடுங்கள்!

நீங்கள் என்றும் இளமையுடனும், சிவப்பழகுடனும் திகழ அழையுங்கள்! உங்களிடத்திலேயே உங்களுக்கான பொருள்களுடனும் இலவச ஆலோசனையுடனும் நாங்கள்!

அழையுங்கள்.

T.P.: 0777351954

# சின்னக்கடை "மினி" முகாம் நேற்று அகற்றப்பட்டது

யாழ்ப்பாணம், மே 26

யாழ்.பிரதான வீதியில் சின்னக்கடைப் பகுதியில் அமைந்திருந்த இராணுவ "மினி" முகாம் நேற்று அகற்றப்பட்டு மக்கள் பாவனைக்கு அவ்வீதி திறந்து விடப்பட்டுள்ளது.

வீதிக்கு குறுக்காக எழுப்பப்பட்டிருந்த பாதுகாப்புச் சுவர் இடிக்கப்பட்டு அகற்றப்பட்டதோடு அப்பகுதி வீடுகளில் இருந்த இராணுவத்தினர் அங்கிருந்து சென்றுள்ளனர்.

நேற்றுக்காலை இராணுவ அதிகாரி ஒருவர் இந்த வீதியை அப்பகுதி வர்த்தகர் முன்னிலையில் திறந்துவைத்தார்.

அதேவேளை 15 வருடங்களாக மூடப்பட்டிருந்த இவ் வீதி திறக்கப்பட்டுள்ளமையால் அப் பகுதியில் இராணுவத்தினர் நிலைகொண்டிருந்த வீடுகளும் உரியவர்களிடம் கையளிக்கப் படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-135)

# கண்ணீர் அஞ்சலி



எமதுபாடசாலை ஆசிரியை
திருமதி சத்தியதேவி கிருபாகரனின்
, அன்புத்தந்தை

## கந்தையா கணபதிப்பிள்ளை

அவர்கள் காலமான செய்தியறிந்து மன வேதனையடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(98723) பாடசாலைச் சமூகம்,
கொக்குவில். யா/கொக்குவில் ஸ்தான சி.சி.த.க.

# VACANCY

மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனங்களில் ஒன்றான TRADE FINANCE & INVESTMENT LTD. தனது கிளையை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்க உள்ளது.

இதற்கு பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. கிளை முகாமையாளர் (BRANCH MANAGER)
தகைமை: வங்கித் தொழிலில் அனுபவத்தைக் கொண்டிருக்க வேண்டும்.
ஆங்கிலத்தில் சரளமாக பேச, எழுதத் தெரிந்திருத்தல் வேண்டும்.

2. காசாளர் (CASHIER)/லிகிதர் (CLERK)
தகைமை: க.பொ.த. உயர் தரத்தில் கணக்கீட்டுப் பாடத்தில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
ஆங்கிலத்தில் சரளமாக பேச, எழுதத் தெரிந்திருத்தல் வேண்டும்.
வயது:- 30 வயதுக்கு உட்பட்டு இருத்தல்.

மேற்படி பதவிகளுக்கு தகுதியானவர்கள் சுயவிவரக் கோவையை 03.06.2010 இற்கு முன் கிடைக்ககூடியதாக பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

**MANAGING DIRECTOR,**
TRADE FINANCE & INVESTMENT LTD,
459, Union Palace, Colombo - 02. (சி/567958)

# மரண அறிவித்தல்கள்

## கண்மணி இரத்தினம்



யாழ்ப்பாணம், நீராவியடியைப் பிறப்பிடமாகவும், காங்கேசன்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கண்மணி இரத்தினம் 24.05.2010 திங்கட்கிழமை பிரான்ஸில் சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம் - வள்ளியம்மை தம்பதியினரின் மகளும், வைரமுத்து - செல்லமுத்து தம்பதியினரின் மருமகளும், காலஞ்சென்ற இரத்தினத்தின் (இளைப்பாறிய சிமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நாகரெத்தினம், குட்டித்தம்பி, பொன்னம்மா, நடராஜா, இராமநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற வரதராஜா மற்றும் விஜயதேவி, கமலாதேவி, பேரின்பதேவி, லீலாதேவி, பரிமளாதேவி, பத்மாதேவி, நற்குணராசா, காஞ்சனாதேவி, லதா ஆகியோரின் பாசமிகு தாயாரும், சரோஜினிதேவி, சிறீதரன், இராமமூர்த்தி, விசுவலிங்கம், குகேந்திரன், நவரட்ணராஜா, மகேந்திரன், மேனகா, சுதாகரன், தயாளதேவன் ஆகியோரின் அன்புநிறைந்த மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.05.2010) வியாழக்கிழமை பிரான்ஸில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :வி.ந. சிறீதரன் [மருமகன்]
[ஓய்வுபெற்ற அதிபர்]
46, பிறவுண் வீதி, சி. விஜயதேவி [மகள்], பேரப்பிள்ளைகள்,
நீராவியடி, யாழ்ப்பாணம். (98724) பூட்டப்பிள்ளைகள்.

## சின்னத்தம்பி சுந்தரம்



தாவடி தெற்கு, காளிகோயிலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சுந்தரம் நேற்றுமுன்தினம் (24.05.2010) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்து - நாகமுத்து தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கார்த்தி சின்னத்தம்பியின் அன்பு மனைவியும், தேவி (தங்கராசா, கட்டட ஒப்பந்தகாரர்), சிவம் (சிவராசா கட்டட ஒப்பந்தகாரர்), செல்வம் (இலங்கராசா ஆட்டோ மெக்கானிக்), றூபன் (நடராசா ஆட்டோ மெக்கானிக்), காலஞ்சென்ற மல்லிகா (புஸ்பராணி) ஆகியோரின் அன்புத் தாயாரும், பரா (பவளராணி), சிவயோகம், தர்சினி, செல்வமலர் ஆகியோரின் அன்பு மாமியும், பாக்கியம், பொன்னுத்துரை, வைரமுத்து, சிவக்கொழுந்து, தங்கரத்தினம், காலஞ்சென்றவர்களான மாணிக்கர், சுப்பையா, கந்தையா, திருப்பதம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் குஞ்சுமணி, சித்தி, சறோ, பாலசிங்கம், காலஞ்சென்றவர்களான நாகம்மா, முத்தம்மா, அன்னம்மா, பரமு, சுப்பிரமணியம், கந்தையா ஆகியோரின் அன்பு மைத்துனியும், றயன் (ரூவிதரன்), றொபின்சலா (சுவிஸ்), அனுஷா (டயிதா), கேதீஸ் (லண்டன்), சொப்னா (ரசிந்தா), கிரி (நிரோஜன் - அவுஸ்திரேலியா), கிஷோ (நிரஞ்சன்), சுதர்ஷன், சுவிந்தன், டுசி (சுதர்சினி), சசி (சுயந்தினி), சுலக்ஷினி, சுகிர்தன், சுகனியா, மதுஷன், டிலக்ஷன், யஸ்மினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ருவிராஜ் (சுவிஸ்), அபிஷன், பகிர்தனா (லண்டன்), பிரஷாந் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.05.2010) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, நண்பகல் 12 மணியளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல் தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளிகோயிலடி, தகவல்:
தாவடி தெற்கு, கொக்குவில். (78726) பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரியாலை கிழக்கில் நெற்செய்கைக்கு அனுமதி; முட்கம்பிவேலி அமைக்கும் பணி ஆரம்பம்

கொழும்புத்துறை, மே26

அரியாலைப் பிரதேசத்தில் இவ்வாண்டு பெரும்போக நெற்செய்கைக்கு அனுமதிக்கப்பட்ட பகுதியை உள்ளடக்கி முட்கம்பிவேலி அமைக்க வேண்டியுள்ளதாக அரியாலை விவசாய சம்மேளனத் தலைவர் எஸ். சபாரட்ணம் தெரிவித்துள்ளார்.

கிழக்கு அரியாலைப் பிரதேசத்தில் இடப்பெயர்வின்போது கைவிடப்பட்டு வந்த கால்நடைகள் அப்பகுதிகளில் கட்டாக்காலிகளாகத் திரிவதால் நெற்பயிர்களைப் பாதுகாக்க வேலி அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வருடம் அரியாலை கட்டடி இறக்கத்தடிவரை பயிர்ச் செய்கைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளதால் நாவற்குழி கடற்கரையிலிருந்து மணியன்தோட்டம் வரையான இரண்டு கிலோ மீற்றர் தூரத்திற்கு இவ்வாறு முட்கம்பிவேலி அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

சென்றஆண்டு அனுமதிக்கப்பட்ட நாவலடியில் உள்ள வேலியை அகற்றி கட்டடிப் பகுதியில் புதிய வேலியை அமைப்பதற்கு இப்பகுதி விவசாயிகள் தமது ஒத்துழைப்பை வழங்குமாறு விவசாய சம்மேளனத் தலைவர் கேட்டுள்ளார். (1-135)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மே26

அரச திணைக்கள அலுவலகங்களில் கடமையாற்றும் நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

பிரஸ்தாப உத்தியோகத்தர்களின் சேவைப் பிரமாணக் குறிப்புத் தொடர்பாக ஆராயப்படவுள்ளதால் அனைத்து நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்களையும் கலந்துகொள்ளுமாறு வடக்கு மாகாண அரச சேவைகள் பட்டதாரிகள் சங்கச் செயலாளர் கே.எஸ்.மயூரன் அறிவித்துள்ளார். (ஒ-207)

# சிறுவர்களின் வாழ்வைச் சீராக்க கள ஆய்வுப் பணிகள் பல பகுதிகளிலும்

நாவற்குழி, மே26

மூன்று தொடக்கம் 5 வயது வரையான பிள்ளைகளின் வாழ்வைச் சீராக்க நியமங்களை உருவாக்ககள ஆய்வுப் பணிகள் பல பகுதிகளிலும் நடத்தப்படுகின்றன.

சிறுவர் திணைக்களப் பிரதித் திட்டப் பணிப்பாளர் ஜெயந்த பீரிஸ் இதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து கொடுத்ததுடன் வழிநடத்தலிலும் ஈடுபட்டார்.

மூன்று தொடக்கம் 5 வயது வரையிலான பிள்ளைகள் தொடர்பான நியமங்களை உருவாக்குதல் தொடர்பான தகவல்களைத் திரட்டும் கள ஆய்வுப் பணியாகவே இது இடம்பெற்று வருகின்றது.

வயதுக்கேற்ற திறனைக் கொண்டிராத பிள்ளைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தி அவர்களை முன்னேற்றுவதற்குரிய நடவடிக்கைகள் எடுப்பதற்குரிய நியமங்கள் தயாரிக்கப்படவுள்ளன.

புத்தளம் மாவட்டத்தில் இவ் ஆய்வானது கற்பிட்டிப் பிரதேச செயலகப் பிரிவை கிராமம் என்ற அடிப்படையிலும், புத்தளம் பிரதேச செயலகப் பிரிவை நகரம் என்ற அடிப்படையிலும் வைத்து நடைபெற்றது.இதுபோல யாழ்.மாவட்டத்திலும் நல்லூர் பிரதேச செயலகப் பிரிவை நகரம் எனவும், வலி.தென் மேற்கு-சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவை கிராமம் என்ற அடிப்படையிலும் இந்த ஆய்வு மிக அண்மையில் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

யாழ்.மாவட்டத்திலிருந்து அநுராதபுரத்திற்கு இந்த ஆய்விற்கென ஆரம்ப பிள்ளைப்பராய அபிவிருத்தி உதவியாளர்கள் சென்று வந்துள்ளனர்.

இன்னுமொரு உத்தியோகத்தர் குழு மாத்தறை மாவட்டத்திற்கு மிக விரைவில் செல்லவுள்ளது.

நாடு முழுவதும் ஆரம்ப பிள்ளைகள் தொடர்பான ஆய்வு சமகாலத்தில் மேற்கொள்ளப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

இந்தக் கள ஆய்வு மேற்கொள்வது தொடர்பான செயலமர்வு ஒன்று இரு மாதங்களுக்கு முன்பு கொழும்பில் நடைபெற்றது.

சிறுவர்களுக்கு மகிழ்ச்சியான உலகம் ஒன்றை வழங்குவோம் என்ற அரசாங்கத்தின் எண்ணக் கருவிற்கமைய இத்திட்டம் வேகமாக முன்னெடுக்கப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (1-121)

# மாநகர குடிதண்ணீர் விநியோகம் மக்களின் கருத்துக்கள் அறியப்படும்

## யாழ்.மாநகர முதல்வர் அறிவிப்பு

நல்லூர், மே26

யாழ்.மாநகர சபையிடம் இருந்த மின் விநியோகத்தை இலங்கை மின்சாரசபை பொறுப்பேற்றுக் கொண்டபோது எவருமே அதற்கு எதிராகக் குரல் கொடுக்கவில்லை. அதனால் மாநகரசபை மின் விநியோகத்தை இழந்தது. குடிதண்ணீர் விநியோகத்திலும் இதுபோன்ற நிலை ஏற்பட மக்கள் இடமளிக்கக்கூடாது என யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்தார்.

யாழ்.மாநகரப் பகுதிக்கான குடிதண்ணீர் விநியோகத்தை நீர் வழங்கும் சபையிடம் ஒப்படைப்பதா அல்லது யாழ். மாநகர சபையே தொடர்ந்து நடத்த வேண்டுமா என்பது குறித்து பொதுமக்களின் கருத்தை அறிவதற்கான கூட்டம் நாவலர் கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.

முதல்வர் திருமதி யோகேஸ்வரி மேலும் பேசும்போது, இலங்கையின் இரண்டாவது பெரிய மாநகரசபை யாழ்.மாநகர சபையாகும். மக்களது தேவைகள், சேவைகள் குறித்த முழுமையான செயற்பாடுகளில் சபையின் செயற்பாடுகள் முக்கியமானவை. இன்று குடிதண்ணீர் வழங்கும் பணியை நீர் வழங்கு வடிகால் அமைப்புச் சபை தன்னிடம் ஒப்படைக்குமாறு கூறுகிறது. இது தொடர்பாக மக்களின் கருத்துக்கள் முக்கியமானது. இரணைமடு நீரைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அதைப் பெற்று எந்த வகையில் வழங்குவது. மாநகரசபையூடாக வழங்குவதா வடிகாலமைப்புச் சபையிடம் விடுவதா இதற்கென மேலும் மக்களிடமிருந்து கருத்துக்கள் பெறப்படும். பொதுமக்கள் இது விடயத்தில் தமது கருத்துக்களைத் தயங்காது தெரிவிக்க வேண்டும்-என்றார்.

யாழ்.மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவ, இரணைமடுவில் இருந்து தண்ணீரைப் பெற்றாலும் நீர் வழங்கு வடிகால மைப்புச் சபையால் 24 மணிநேரமும் தண்ணீர் விநியோகம் செய்ய முடியாது. விநியோகச் சேவையை வழமை போன்று மாநகர சபையே செய்வதற்குரியதாக நடவடிக்கை எடுப்பதே உகந்தது. இதில் சில பிரச்சினைகள் இருந்தாலும் மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்பதுதான் எமது கருத்தாகும் என்று கூறினார். (க-111)

## கசிப்பு வைத்திருந்த பெண்ணுக்கு நீதிமன்றம் அபராதம்

யாழ்ப்பாணம், மே26

கொக்குவில் கிழக்கு சபாபதி ஒழுங்கைப் பகுதியில் கசிப்புடன் கைது செய்யப்பட்டு யாழ். நீதிவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட பெண் ஒருவருக்கு நீதிமன்றம் 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது. அதனை செலுத்தத் தவறின் 2 மாதகால சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் நீதிமன்றம் தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளது.

கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இந்த பெண் கடந்த 12 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

வழக்குகளை விசாரணை செய்த நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா சம்பந்தபட்ட பெண்ணுக்கு 10 ஆயிரம் ரூபாவை அபராதமாக விதித்ததுடன் அதனை செலுத்தத் தவறின் 2 மாத சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டுமெனவும் உத்தரவிட்டார். (50-14)

## கந்தரனுபூதி மனனப் போட்டிகள்

சுழிபுரம்,மே.26

சுழிபுரம் பறாளை ஸ்ரீ சிவசுப்பிரமணி சுவாமி ஆலய திருவிழாவையொட்டி கந்தரநுபூதி மனனப் போட்டி வழமைபோல் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சங்காபிஷேக தினமான நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நடைபெறும் நிகழ்வில் வைத்து பரிசுகள் வழங்கப்படும். கந்தரனுபூதி நூல் இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம். (1-28)

# நீர்வேலிஅத்தியார் இந்துவில் பழைமை வாய்ந்த கட்டடம் புனரமைப்பு

நீர்வேலி, மே 26

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி வளாகத்தில் வடக்குப் பக்கமாக அமைந்துள்ள மண்டபம் திருத்தியமைக்கப்பட்டுப் புதுப்பொலிவு பெற்றுள்ளது.

சுமார் 85 வருடங்களுக்கு மேலாகப் பழைமை வாய்ந்ததும், பாடசாலைச் சரித்திரத்திலேயே பிரதான இடம்பெற்றதுமான சுமார் 125 அடி நீளமானதும் 25 அடி அகலமானதுமான இக்கட்டடம் பழுதடைந்த நிலையில் பாவிக்கப்படாதிருந்தது.

கனடாவிலிருந்து இங்கு வருகை தந்த பழைய மாணவர்களும், நலன் விரும்பிகளும் இக்கட்டடத்தின் முக்கியத்துவத்தைமக் கருத்திற்கொண்டு. திருத்தியமைக்க வேண்டுமெனத் தீர்மானித்தனர்.

கனடாவில் வாழும் பழைய மாணவர்களும், நலன்விரும்பிகளும் ''நீர்வேலி நலன்புரிச்சங்கம், கனடா'' என்ற அமைப்பின் மூலம் சுமார் 12 லட்சத்து நாற்பதினாயிரம் ரூபா செலவு செய்து இந்த மண்டபத்தைத் திருத்தியுள்ளனர்.

இக்கட்டடம் புனரமைக்கப்பட்டதால் கல்லூரியில் நிலவிவந்த வகுப்பறைப் பற்றாக்குறை ஓரளவு நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது. (1-110)




# வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி; குடாநாட்டில் தீவிரமாக முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், மே 26

யாழ்.குடாநாட்டில் வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய்க்கான தடுப்பூசி மருந்துகள் ஏற்றும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

சுகாதாரத் திணைக்களத்தினரால் இந்த விசர்நோய்க்கான தடுப்பூசி மருந்துகள் ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட பிரதேசங்களிலும் கட்டம் கட்டமாக வளர்ப்பு நாய்களுக்கு இது ஏற்றப்பட்டு வருகின்றது.

இதேவேளை தற்போதைய காலநிலை வேறுபாடு மற்றும் கடும் வெப்பம் போன்றவற்றால் நாய்கள் அதிகளவில் விசர் நோய்க்கு இலக்காகலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (04-224)

# வலிகாமம் கல்வி வலயத்தில் இரு பாடசாலைகள் புனரமைப்பு

யாழ்ப்பாணம், மே 26

வலிகாமம் வலயப் பகுதியில் உள்ள இரண்டு பாடசாலைகளின் கட்டடத் தொகுதிகளைப் புனரமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பிளவத்தை அ.மி.த.க.பாடசாலை, மாதகல் விக்னேஸ்வரா வித்தியாலயம் ஆகியவற்றின் வகுப்பறைக் கட்டடங்களே புனர் நிர்மாணம் செய்யப்படவுள்ளன.

இந்த புனர் நிர்மாணம் சம்பந்தமான கேள்விகள் கட்டட ஒப்பந்தகாரரிடம் இருந்து கோரப்பட்டுள்ளன. (1-224)



ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் ஆங்கிலமொழி மூலம் தோற்றி அகில இலங்கை ரீதியில் முதலிடம் பெற்ற சுரேந்திரலிங்கம் துவாரகனுக்கு கொக்குவில் வளர்மதி சனசமூக நிலையத்தில் அளிக்கப்பட்ட கௌரவிப்பின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நல்லூர் ப.நோ.கூ.சங்கங்களின் முன்னாள் தலைவர் பொ.கனகசபாபதி மாணவனுக்கு மாலை அணிவிப்பதையும் யாழ்ப்பாணம், கொக்குவில் இந்துக்கல்லூரிகளின் முன்னாள் அதிபர் அ.பஞ்சலிங்கம் அவருக்கு நினைவுக்கேடயம் வழங்குவதையும் மேடையில் அமர்ந்திருப்போரையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யா/இணுவில் மத்திய கல்லூரி
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

**பொதுக் கூட்டம்**

தலைவர் : திரு அ.சதானந்தன் (கல்லூரி முதல்வர்)
காலம் : 06.06.2010 ஞாயிறு பி.ப. 3 மணி
இடம் : ஆரம்பப் பிரிவு மண்டபம்

பெற்றோர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: சந்தாப்பணம் செலுத்தி உறுப்புரிமையை உறுதிப்படுத்தவும். புதிய பிரேரணைகள் 29.05.2010 இற்கு முன் தலைவரிடம் சமர்ப்பிக்கவும்.

25.05.2010 (98713) தலைவர்.



**முன்பள்ளி ஆசிரியர் வெற்றிடம்**

திருநெல்வேலி சிமாட்கிட்ஸ் - உரும்பிராய் கிட்ஸ் பார்க்

அனுபவமுள்ள மற்றும் பயிலுநராக வேலை பார்க்க விரும்பும் முன்பள்ளி ஆசிரியர்கள் முழுவிவரங்களுடனும் விண்ணப்பிக்கவும். பேச்சு, ஆங்கில அறிவு மேலதிக தகைமையாகும். தகுதியானோர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

முடிவுத் திகதி - 05.06.2010

தலைவர்
கல்வி அபிவிருத்தி நம்பிக்கை நிதியம் கிட்ஸ் பார்க்,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய். (98720)


## மானிப்பாயில் 27 பேருக்கு சுழற்சி முறையில் கடன்

யாழ்ப்பாணம்,மே 26

இருபத்தியேழு பயனாளிகளுக்கு ரூபா 10 ஆயிரம் வீதம் மானிப்பாய் மேற்கு கிராம அபிவிருத்தி சங்கத்தினால் கடன் வழங்கப் படவுள்ளது.

மானிப்பாய் மேற்கு கிராம அபிவிருத்தி சங்க தலைவர் க.முதலியார் இதற்கான நடவடிக்கை எடுத்துள்ளார்.

சுழற்சி முறையின் கீழ் இக்கடன் வழங்கப் படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(1-3 02)

## புத்தகம் கட்டுநர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம், மே26

வடக்கு, கிழக்கு மாகாண நீதிமன்றங்களில் வெற்றிடமாகவுள்ள புத்தகம் கட்டுநர் பதவிகளுக்கு தற்போது அரச சேவையில் பணியாற்றாதவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

18 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்ட க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் மொழி, கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் இந்தப் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை எதிர்வரும் ஜூன் 30 ஆம் திகதிக்கு முன்னர் ' செயலாளர், நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் அலுவலகம், தபாற்பெட்டி இல 573, புதுக்கடை, கொழும்பு -12 '' என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ - 207)

## பெத்தேல் சபையின் சுகமளிக்கும் கூட்டங்கள்

வண்ணை, மே26

பெத்தேல் சுவிஷேச நிலையத்தில் சுகமளிக்கும் கூட்டங்கள் நாளை முதல் மூன்று தினங்கள் மாலை 4 மணிக்கு நடைபெறும்.

யாழ்.இராசாவின் தோட்டம் வீதியில் அமைந்துள்ள பெத்தல் நிலையத்தில் நடைபெறும் சுகமளிக்கும் கூட்டங்களில் கலந்து கொள்ளுமாறு கேட்டுள்ளது.

(1-16)


**இணையத்துறையில் வல்லுநராகுங்கள்**

**Diploma in Web Development**

குறுகிய காலத்தில் சிறந்த வேலைவாய்ப்பை ஏற்படுத்தவல்ல தொழிற்கல்வி

ஒரு வருட கால பயிற்சிக்காலத்தைக்கொண்ட இக்கற்கை நெறியானது 900 மணித்தியால செய்முறைப்பயிற்சியுடன் கூடிய கல்விப் போதனைகளை கொண்டதாகும்.

புதிய பிரிவுகள் ஆரம்பம்

**28.05.2010**

இணையத்துறையில் உள்நாட்டு ,வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களை தட்டிச்செல்வதற்கான ஓர் அரிய வாய்ப்பு

மேலதிக விபரங்களுக்கு
021 4900900



**IIS CITY CAMPUS**
200 Sivan Pannai Road,Jaffna
T.P :-021 222 8060 Fax:-021 222 6933
Web :-iis.edu.lk Email:-iiscc@sltnet.lk


# 4ஆம் ஆண்டு நினைவு நாள்

அன்னை மடியில்
22 . 03 . 1977

இறைவன் அடியில்
26 . 05 . 2006



## அமரர் சின்னத்துரை புவிராசா (புவி)

(உரிமையாளர், சியான் ரேடர்ஸ், அச்சுவேலி - கராத்தே பயிற்சி ஆசிரியர் 3rd Dane)

எண்ணவரும் வாழ்வு தனை
எழிலுற வழி அமைத்து
வாழ்ந்து வந்த வள்ளலே!
ஆண்டுகள் நான்கு ஆனாலும்
ஆறாதையா நம் துயரம்
ஆண்டாண்டு அழுது புரண்டாலும்
மாறாதையா நம் துன்பம்
நீங்கள் சென்ற பாதை பார்க்கிறோம்
காணவில்லை உம் சுவடை
உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம் கண்ணீருடன்.....!

குடும்பத்தினர்,
சியான் ரேடர்ஸ்.

பிரதான வீதி,
அச்சுவேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குமுதினிக்கு 'நோய்' முற்றுகின்றது; புதிய படகினைத் தருவிக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், மே 26

நெடுந்தீவுக்கும் குறிகாட்டுவானுக்கும் இடையில் பயணிகளை ஏற்றி இறக்கும் சேவையில் ஈடுபடுத்தவென புதிய படகு ஒன்றைத் தருவிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

வீதி அபிவிருத்தி அதிகார சபை உயரதிகாரி ஒருவர் உதயனுக்கு இத் தகவலைத் தெரிவித்தார்.

சுமார் நூறு பேரை ஏற்றிச் செல்லக் கூடிய இந்தப் படகின் கட்டுமானப் பணிகள் தற் போது தென் பகுதியில் நடைபெற்று வருகின்றன.

இதே சமயம் தற்போது சேவையில் ஈடுபட்டு வரும் குமுதினிப்படகு வயது முதிர்ந்து காணப்படுவதாலும், அதற்கு திடீர் திடீரென நோய் ஏற்பட்டுப் பழுதடைந்து திருத்தம் செய்யப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. (எ-224)

## நெடுந்தீவில் இருந்து காலை 7 மணிக்கு குமுதினிப் படகு சேவையை ஆரம்பிக்கும்

நெடுந்தீவு, மே26

நெடுந்தீவுக்கும் குறிகாட்டுவானுக்கும்மிடையிலான பயணிகள் படகு 'குமுதினி' நெடுந்தீவில் இருந்தே தனது சேவையை ஆரம்பிக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி படகு தினமும் குறிகாட்டுவான் துறைமுகத்தில் இருந்து காலை 8 மணிக்கு நெடுந்தீவுக்குப் புறப்படக் கூடியதாகவும் பிற்பகலில் சேவை முடிந்ததும் குறிகாட்டுவானிலேயே படகை நங்கூரமிடவும் யாழ்.வீதி அபிவிருத்தி அதிகார சபை தீர்மானித்திருந்தது.

எனினும் இந்த முடிவுக்கு எதிராக நெடுந்தீவு மக்கள் முறைப்பாடு செய்ததையடுத்து குமுதினி நெடுந்தீவில் நங்கூரமிடப்பட்டு அங்கிருந்து காலை 7 மணிக்குச் சேவையை ஆரம்பிக்கும் எனவும் குறிகாட்டுவானில் இருந்து காலை 9 மணிக்கு நெடுந்தீவுக்குப் புறப்படவும்கூடிய தாக நேர மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (1-111)

## வீதி புனரமைப்பு

நல்லூர், மே 26

திருநெல்வேலி, பரவைக்குளம் வீதியைப் புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

வீதி புனரமைப்புத் தொடர்பாக குறிப்பிட்ட வீதியை சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை நேரடியாகப் பார்வையிட்டுள்ளனர். (க-111)

## வலி.மேற்குப் பிரதேசத்தில் நிவாரண விநியோகம் மீளாய்வு

சங்கானை, மே 26

தெல்லிப்பழை பிரதேச செயலகப் பிரிவிலிருந்து இடம்பெயர்ந்து வலி.மேற்குப் பிரதேசத்தில் வசித்து வருபவர்களின் உலர் நிவாரண, உதவிப்பணம் பெறும் அட்டைகள் கிராமசேவகர் பிரிவு ரீதியாக மீளாய்வு செய்யப்பட்டன.

சங்கானை வலி.மேற்குப் பிரதேச செயலகத்தில் இதற்கென நூற்றுக்கும் மேற்பட்டோர் வருகைதந்திருந்தனர். (1-29)

## பண்ணைப் பால வீதி வேலைகள் அடுத்த ஆண்டே பூர்த்தியாகும்



நல்லூர், மே26

தீவுப் பகுதியையும் யாழ். குடாநாட்டையும் இணைக்கும் பண்ணைப்பால வீதியில் பண்ணைப் பகுதியில் இருந்து ஒரு கிலோ மீற்றர் தூரம் வரையான பாதையை அகலப்படுத்தும் பணிகள் அடுத்த ஆண்டின் நடுப்பகுதியிலேயே பூர்த்தியடையும் எனக் கூறப்படுகின்றது.

தற்சமயம் பாலத்தின் மேற்குப் பகுதியில் ஒரு மீற்றர் உயரமான தடுப்பு அணை கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. தற்போது கடல் பெருக்குக் காலம் என்பதால் கட்டுமானப் பணிகளைத் துரித கதியில் செய்வதில் சிரமங்கள் இருப்பதாக கடமையில் உள்ள பணியாளர்கள் கூறினார்கள்.

பாலத்தின் இரு மருங்கிலும் 7 அடி வீதம் மொத்தமாக 14 அடிகள் இந்த வீதி அகலமாக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (க-111)




## கொடிகாமம் சந்தையில் இரவு நேரம் வெங்காயம் திருட்டு; இருவர் கைது

யாழ்ப்பாணம், மே26

கொடிகாமம் பொதுச் சந்தைப் பகுதியில் வியாபாரிகளினால் வைக்கப்பட்டிருந்த ஒரு தொகுதி வெங்காயம் இரவு வேளை திருடர்களினால் திருடப்பட்டுள்ளதாக வியாபாரிகளினால் கொடிகாமம் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சந்தேகத்தில் இருவரைப் பொலிஸார் கைது செய்து விசாரணை செய்தனர் எனவும் இது தொடர்பாக சாவகச்சேரி பிரதேசசபையிலும் வியாபாரிகளினால் முறைப்பாடு செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (1)

## கலந்துரையாடல்

அல்வாய், மே 26

அகில இலங்கை கலை இலக்கிய சங்கம் நடத்தும் கலை இலக்கிய ஆண்டு விழா பற்றிய கலந்துரையாடல் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு துன்னாலை அல்லயம்பதி வடிவேலர் மண்டபத்தில் சங்கத் தலைவர் பொன். சுகந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் கலைஞர்கள் பலரும் கலந்து கொண்டு தமது ஆக்கபூர்வமான கருத்துகளையும் பங்களிப்பினைத் தருவதோடு கலை விழாவிற்கான கலை நிகழ்வுகளை வழங்கவுள்ள கலைஞர்களும் தமது நிகழ்வு விவரங்களை அன்றைய தினம் தந்துதவுமாறு கலை இலக்கிய சங்கம் கேட்டுள்ளது.

# அவலங்களைச் சந்தித்த இன்றைய சமூகத்தினர் உளவியல் தாக்கத்திலிருந்து விடுபட நூல்கள் தேவை

## அறிமுக விழாவில் ஆறு.திருமுருகன் உரை

மருதனார்மடம், மே 26

மிகப்பெரிய அலங்களைச் சந்தித்து உளத் தாக்கங்களுக்கு முகம் கொடுத்துள்ள இன்றைய சமூகத்திற்கு உளவியல் ரீதியில் வழிகாட்டும் நூல்கள் அவசியமானவையாகும். அத்தகையதொரு பணியைச் செய்யும் நூலாகவே கோகிலா மகேந்திரனின் 'உள்ளம் பெருங்கோயில்' என்ற நூல் அமைந்துள்ளது.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் மேற்கண்டவாறு கூறினார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இராமநாதன் கல்லூரியில் இடம்பெற்ற கோகிலா மகேந்திரனின் 'உள்ளம் பெருங்கோயில்' நூல் அறிமுக விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அதிபர் திருமதி சிவமலர் சுந்தரபாரதி தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் தொடர்ந்து உரையாற்றிய ஆறு.திருமுருகன், இந் நூலிலுள்ள கட்டுரைகளின் சாராம்சம் உள்ளத்தைப் புனிதப் படுத்துவது ஆகும். போரின் அனர்த்தங்கள் உச்சமடைந்திருந்த ஒரு காலத்தில் காலத்திற்கேற்ப பணியாற்ற வேண்டும் என்ற நோக்கத்தோடு கோகிலா மகேந்திரன் சீர்மிய வழிகாட்டியாகப் பணியாற்றத் தொடங்கினார். இளையதலைமுறையினருக்கும் ஆசிரியர்களுக்கும் பயிற்சியளித்து இன்று சீர்மியத்துறையிற் பணியாற்றும் பலரை அவர் உருவாக்கியுள்ளார்.

உளவியற் கருத்துக்களை மக்களுக்கு எளிதாக விளங்கும் வகையில் எழுதும் திறமை அவரிடம் உண்டு. மேலைத்தேய - கீழைத்தேய சீர்மியக் கருத்துக்களை எழுதுவது அவரது தனித்திறமை ஆகும்-என்றார்.

இவ்விழாவிற் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு நூலின் அறிமுக உரையை நிகழ்த்திய வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், ஆம்பத்தில் சிறுகதை, நாவல், நாடகம் எனப்பல துறைகளில் முத்திரை பதித்தவர் கோகிலா மகேந்திரன். எனினும் தற்காலத்தில் உளவியற் கருத்துக்களின் தேவை உணர்ந்து எழுதி வருகின்றார்.

எமது சமூகத்தில் உளம் சார்ந்த பிரச்சினைகள் முன்னரே இருந்த போதும் இடப்பெயர்வுகளின் பின்னர்தான் அவை உச்ச நிலை அடைந்தன. இராணுவத்தினரதும் போராளிகளினதும் செயற்பாடுகள் மாணவர்களை உளம்சார்ந்த பிரச்சினைகளுக்குள் தள்ளின.

இவற்றிலிருந்து மாணவர்களை மீட்டெடுப்பதற்கு யாழ்ப்பாணத்தில் இருந்து பணியாற்றியவர்களுள் கோகிலா மகேந்திரன் முக்கியமானவர். பல பயிற்சி நிகழ்ச்சிகளையும் நடத்தியுள்ள அவர் பத்திரிகைகளில் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பாக இந்த நூலை வெளியிடுகின்றார். இலங்கைத் தொலைக்காட்சி வரலாற்றில் காலை வேளைகளில் சமயச் சிந்தனைகளைக் கூறிவந்த மரபை மாற்றி உளவியற் சிந்தனை களைக் கூறும் மரபை உருவாக்கியவர் இந்நூலாசிரியரே எனக் கூறினார்.

நூலின் ஆய்வுரையை நிகழ்த்திய கவிஞர் சோ.பத்மநாதன், நாம் இயல்பாக இருக்கின்றோம். உள நலத்தோடு இருக்கின்றோம் என்று நினைக்கும் பலர் இன்று உளநலம் இன்றி உள்ளனர். யுத்த அனர்த்தம் பலரின் உளநிலையைப் பாதிப்புக்கு உள்ளாகிவிட்டது. இவர்களில் உளநலம் அதிகளவில் பாதிக்கப்பட்டவர்கள் மட்டுமே வைத்தியரிடம் செல்கின்றனர். இந் நிலையில் எல்லோருக்கும் உள நலம் பற்றிய உண்மைகளைச் சொல்வதாக இந்த நூல் உள்ளது-என்றார்.

நூலின் முதற்பிரதியைக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனிடமிருந்து இராமநாதன் கல்லூரிப் பிரதி அதிபர் திருமதி நந்தினி சிவராஜா பெற்றுக்கொண்டார். திருமதி பகீரதி கணேசதுரையின் நெறியாள்கையில் உருவான கலைநிகழ்வு ஒன்றும் இங்கு இடம் பெற்றது. (1 - 55)

## மூளாயில் வெள்ளியன்று கண்பரிசோதனை முகாம்

யாழ்ப்பாணம், மே 26

கொழும்பு தந்தை செல்வா நற்பணி மன்றம் முதல் கட்ட நடவடிக்கையாக மூளாய் இந்து இளைஞர் மன்ற அனுசரணையுடன் அந்த மன்றத் தலைவர் செ. அனார்த்தனன் தலைமையில் மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலையில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணியளவில் கண்பரிசோதனை முகாமை நடத்தவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக அதிபர் ஸ்ரீ.விக்னேஸ்வரன் கலந்துகொள்வார். (1)




கோகிலா மகேந்திரனின் 'உள்ளம் பெருங்கோயில்' நூல் அறிமுக விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில் முதற் பிரதியை வலிகாமம் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனிடமிருந்து இராமநாதன் கல்லூரிப் பிரதி அதிபர் திருமதி நந்தினி சிவராசா பெற்றுக் கொள்வதை முதலாவது படத்திலும், வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் [illegible] அதிபர் ஆறு.திருமுருகன் ஆகியோர் உரையாற்றுவதை இரண்டாவது, மூன்றாவது படங்களிலும், நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரை இறுதிப் படத்திலும் காணலாம். (55)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர்வேலி வடக்கு
# அருள்மிகு இராஜராஜேஸ்வரி அம்மன் கோயில்




## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி



நீர்வையம்பதி அருள்மிகு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் எல்லாம் வல்ல ஆதி பராசக்தியான அம்பிகைக்குப் புதிதாக வடிவமைக்கப்பட்ட சித்திரத் தேரில் அன்னை ஆரோகணித்து வீதி உலா வருவது அறிந்து பெருமகிழ்ச்சி கொள்கின்றோம்.

அம்பிகையின் அடியார்கள் ஒன்று சேர்ந்து நல்ல முறையில் சித்திரத்தேரை உருவாக்கி அன்னையை வீதி உலா வரச் செய்த இக்கைங்கரியம் பாராட்டப்பட வேண்டியது. அம்பிகை உலாவர ஒரு தேரில்லையே என்ற குறையை நிறைவு செய்த அடியார் பெருமக்களின் முயற்சி வரவேற்கத்தக்கது.

அழகிய வடிவிலமைந்த அற்புத சித்திரத்தேரில் அம்பிகை வீதி உலாவரும் இந்நன்னாளில் அடியார்கள் அனைவருக்கும் அன்னை இராஜராஜேஸ்வரித் தாயின் பரிபூரண கிருபை கிடைக்கவேண்டு மென்று உமையவளை வழுத்தி நல்லைக் குருமணியின் பாதம் பணிந்து, உளமாரப் பிரார்த்தித்து அருளாசி வழங்குகின்றோம்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

ஆதீன குரு முதல்வர்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த
பரமாச்சாரிய சுவாமிகள்,
இரண்டாவது குருமஹாசந்நிதானம்,
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்.

## வலி.கிழக்கு பிரதேச செயலரின் வாழ்த்துச் செய்தி



இயற்கை வளம் நிறைந்த நீர்வைப் பகுதியில் நிலை கொண்டு அருளும் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் சித்திரத் தேர் வலம் வரும்காட்சி அம்பாள் அடியார்களுக்கு, எல்லையில்லாப் பெருமகிழ்வை அள்ளிவழங்குவதாகும். அடியார்கள் அனைவருக்கும் செல்வத்தையும், மகிழ்ச்சியையும்,மனநிறைவையும் வாரி வழங்கும் அன்னையை, மனதிலிருத்தி ஆகம விதிப்படி செதுக்கப்பட்ட சித்திரத் தேரில் அம்பாள் எழுந்தருளி திருவீதி உலா வருவது சிறப்பான நிகழ்வாகும். ஆலயத்தைத் தேடிவருபவர்களுக்கெல்லாம் நல்லனவற்றை வாரி வழங்கும் பெருமாட்டி அடியவர்களைத் தேடிச் சென்று அருள்பாலிப்பதாக அமையும்.

தீயன அழித்து நல்லன காக்கும் தத்துவத்தை மெய்ப்பிக்கும் அம்மனின் அருளால் நீர்வேலிப் பகுதியில் நன்மையே ஓங்கப் பிரார்த்திப்பதோடு, இவ்வருடம் பணியில் தம்மை ஈடுபடுத்திய அடியார்கள், திருத்தேர் செதுக்கியோர் அனைவரையும் பாராட்டி அன்னையின் அருள்பாலிக்க வேண்டுகிறேன்.

சீ.ஏ.மோகன்றாஸ்
பிரதேசசெயலர்,
வலி.கிழக்கு,கோப்பாய்.

## இரதோற்சவ மகிமை



சைவமக்கள் யாவருக்கும் ஆலய வழிபாடு இன்றியமையாதது. ஆலய வழிபாட்டை முறையாகச் செய்து வருபவர்கள் சிறந்த ஆன்ம லாபத்தைப் பெறுகின்றனர்.

மும்மலங்களையும் மூன்று அசுரர்களாக வேதபுராணங்கள் கற்பித்துக் கூறுகின்றன. அசுரர்கள் அழிக்கப் பரமேஸ்வரன் பூமியைத் தேராகவும், சூரிய சந்திரரைத் தேர்ச் சில்லாகவும் வேதங்களைக் குதிரையாகவும் அயனைத் தேர்ப்பாகனாகவும் மேருவை வில்லாகவும் திருமாலை அம்பாகவும் கொண்டு தேரில் ஆரோகணித்து திரிபுரத்தை அடைந்து முப்புரங்களையும் எரித்தார். தேரில் ஏறி ஆயுதங்களைக் கொண்டு யுத்த சன்னத்தராகப் புறப்பட்டுச் சென்று தனக்குள் யாவும் அடக்கம் என்பதை உலகுக்கு எடுத்துக்காட்ட அவ்வாறு அருள் புரிந்தார். ஆகவே இந்த உற்சவம் அழித்தலை (ஒடுக்குதலை) உணர்த்துவதாகின்றது.

இரதோற்சவத்தன்று தேர் முடியிலிருந்து சில்லின் அடிப் பாகம் வரையிலும் ஒரே ஸ்வரூபமாக மூன்று பிரிவாக இல் லாமல் நின்று அருள்புரிகின்றார். அதாவது முழுஸ்ரூபமும் பீட சக்தி, முழுசொரூபமும் உருவத்திருமேனி, முழுவதிலும் மறைந்து நிற்கும் சிவஸ்வ ரூபம் என்ற ஒரே பாவனையாக தரிசிக்கலாம். பிரபஞ்சம் பீடசக்தி அதில் காணப்படும் பொருள் கள் உருவத்திருமேனி அதனுள் மறைந்து நிற்பது சிவஸ்வ ரூபம் என்று சிவோஹம் பாவனை பெற்ற சிவ ஞானிக்கு யாவும் சிவ மாக எப்படித் தோன்றுமோ அதே போல இரதம் முழுவதை யும் சிவஸ்வரூபமாகப் பாவித்து தரிசிக்க வேண்டும்.

"கிரியா தத்துவநிதி"சிவஸ்ரீ .இ.நகுலேஸ்வரக் குருக்கள்
"ஸ்ரீ வித்யா உபாசகர்",பிரதம குருக்கள்.

## ஆலய வரலாறு

இந்தியா மாவண்டூரிலிருந்து வருகை தந்தவர்களின் பரம்பரையினரால் நீர்வேலி வடக்கில் இற்றைக்கு 300 வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டது இவ்வாலயம். நீர்வேலியில் முதன் முதல் ஆரம்பிக்கப்பட்ட அம்மன் ஆலயம் என்றும் பெருமைக்குரியது. இதனால் இது பழைய அம்மன் கோயிலெனவும் அழைக்கப்படுகின்றது. அன்னை இராஜராஜேஸ்வரி அருளாட்சி செய்து அடியார்களின் அல்லல் அகற்றிவருவதால் பெரும் சிறப்பு இக்கிராமத்துக்கு உண்டு.

ஆரம்பத்தில் ஒரு சிற்றாலயமாகவும் தெற்குவாசல் கோயிலாகவும் ஆரம்பிக்கப்பட்ட இவ்வாலயம் சுமார் 100 வருடங்களுக்கு முன்னர் வடக்கு வாயிலாகக் கட்டப்பட்டு வழிபாடாற்றி வந்தது.

பின்னர் 1971ஆம் ஆண்டு அம்பாளின் அறிவுறுத்தலுக்கமைய பழைய கட்டடங்கள் இடிக்கப்பட்டு மீண்டும் தெற்கு வாயில் கோயிலாகவே கட்டி 1974இல் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. அக்காலத்தில் ஆலயபரிபாலனத்தைச் செய்துவந்த சகோதரர்களான காசிப்பிள்ளை பொன்னம்பலமும், செல்லையாவும் சிவகதியடைந்தபின் அவர்களின் மருமகனான கந்தையா கணேசையாவே பரிபாலனஞ் செய்துவந்தார்.

அவரும் காலமாகிவிட்ட பின் 1998 ஆம் ஆண்டு முதல் பரிபாலன சபையே ஆலயத்தைப் பரிபாலனஞ் செய்துவருகின்றது.

2003ஆம் ஆண்டு இவ்வாலயத்துக்கு வசந்த மண்டபம், பரிவாரக் கோயிலாக பிள்ளையார், முருகன், வைரவர் ஆலயம் என்பனவும் அமைக்கப்பட்டது. மணிக்கோபுரமும் அமைக்கப்பட்டது.

2008 இல் கொட்டகை வேலைகள் செய்யப்பட்டதோடு, கொடித்தம்பமும் நாட்டப்பட்டது.

1998 இல் இருந்து 12 தினங்கள் அலங்காரத் திருவிழா நடைபெற்ற இவ்வாலயத்தில் 2008 முதல் கொடியேற்றம் நடைபெற்று மகோற்சவம் நடைபெறுவது சிறப்பானதாகும்.

மேலும் இவ்வாண்டு புதிதாக சிற்பசாஸ்திர விதிகளுக்கமையச் சித்திரத்தேர் உருவாக்கப்பட்டதோடு, தேர்த்தரிப்பிடமும் அமைக்கப்பட்டது. வெள்ளோட்டம் 24.05.2010 இல் நடைபெற்றது.

## ஆலய பரிபாலன சபைத் தலைவரின் வாழ்த்துச் செய்தி



அன்னை இராஜராஜேஸ்வரியின் அருட்செயல்கள் ஒவ்வொன்றும் அடியார்களை அதிசயிக்க வைப்பவையாகவே அமைந்துள்ளன.

இவ்வாண்டு தைப்பூசத் தினத்தன்று ஆரம்பிக்கப்பட்ட சித்திரத் தேரானது பூரணமாக வேலைகள் எல்லாம் நிறைவேற்றப்பட்டு இம்மாதம் 24ஆம் திகதி திங்கட்கிழமை வெள்ளோட்டம் செய்யப்பட்டது. அதற்கான தேர்த்தரிப்பிடம் பங்குனி உத்தர தினத்தில் அத்திவாரமிடப்பட்டு வைகாசி முதலாம் திகதியன்றே பூரணமாக நிறைவேற்றப்பட்டது.

ஆலயத்துக்காக திரிதள இராகோபுர வேலைகள் ஏப்ரல் 7ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 26 நாள்களில் பூரணமாக இந்திய சிற்பாசாரியார்களால் நிறைவேற்றப்பட்டது.

இத்திருப்பணிகள் எதிர்பாராத விதமாக இவ்வளவு விரைவாக நிறைவேறியிருப்பது அன்னையின் அருட்செயலேயாகும்.

இப்படியான அருள்மிகு அன்னை இராஜராஜேஸ்வரி இன்று புதிய சித்திரத்தேரில் ஆரோகணித்து அடியார்களைத் தேடிவந்து அருள்பாலிப்பது மிகவும் மகிழ்ச்சிக்குரியதே. இந்நன்னாளில் அன்னையின் இத்திருப்பணி வேலைகள் எல்லாம் இனிதே நிறைவேற உழைத்த சிற்பாசாரிகள், ஸ்தபதி, கட்டட சிற்பக் கலைஞர்கள், சிரமதானத் தொண்டர்கள், பரிபாலன சபையினர், திருப்பணிச் சபையினர், நிதி உதவி வழங்கிய உள்ளூர், வெளியூர் அன்பர்கள் அனைவருக்கும் அன்னையின் அருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

த.பத்மநாதன்.

## நீர்வேலி ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய புதிய சிற்ப சித்திர தேர்த்திருவிழாவுக்கு வாழ்த்துரை



மூவர்க்கும் முதற் பொருளாய் முத்தொழிற்கும் வித்தாகி நிற்கும் மகா திரிபுர சுந்தரியாகிய அம்பாள் தன்னடியார்கள் மீதுகொண்ட பேரருளால் பல்வேறு திருவுருவங்களையும் திருநாமங்களையும் பெற்று அருள்சொரிகிறாள்.

நீர்வேலியூரின் வடபாகத்தில் அருகருகே அமைந்த முப்பெரும் ஆலயங்களில் அம்மை இராஜராஜேஸ்வரி, காமாக்ஷி,காளி என்ற திருநாமங்களோடு எழுந்தருளியுள்ளாள். எனினும் பழைமையும் புதுமைச் சிறப்பும் கொண்டு "பழையம்மாள்" என்ற பெயருடன் எழுந்தருளிகாட்சி தரும் சிறப்பு இராஜராஜேஸ்வரி அம்பாளுக்கே உரியது.

தென் திசை நோக்கி தட்சணாமூர்த்தியின் ஸ்வரூபத்துடன் காட்சிதரும் இப்பிராட்டிக்கு இவ்வாண்டு திரிதளராஜ கோபுரம் அமைத்த அடியார்கள் புதிதாக திருத்தேரும் அமைத்து அன்னையை அத்தேரில் வீதியுலாச் செய்ய விரும்புவது மகிழ்ச்சிக்குரியது.

சங்கணைவைப்பதியாள் ஸ்ரீ ராஜராஜேஸ்வரிக்கு அமைக்கப் பெற்றுள்ள திருத்தேரில் அம்பாள் சிறப்பாக வீதி உலா வருவது சிறப்பானதாகும். அது குறித்து வெளிவரும் சிறப்பு மலர் செம்மையாய் அமையவும் அம்பாளின் திருவடிக்கமலங்களைப் பணிந்து பிரார்த்திக்கிறோம்.

"ஸர்வே ஜனாஹா ஸுகினோ பவந்து"

சிவஸ்ரீ.கு.தியாகராஜக் குருக்கள்.

## நீர்வேலி சமூகசோதி வழங்கிய வாழ்த்துச் செய்தி



நீர்வேலி அருள்மிகு இராஜராஜேஸ்வரி அம்பாள் புதிதாகச் செய்யப்பட்ட சித்திரத் தேரில் ஆரோகணித்து, இன்று வீதிஉலாவந்து அடியார்களுக்கு அருள் பாலிப்பது மிகவும் சிறப்பான நிகழ்வாகும்.

இவ்வாலயத்துக்கு புதிதாக இராஜகோபுரம் அமைக்கப்பட்டதும், புதிய சித்திரத்தேர் அமைக்கப்பட்டதும் எதிர்பாராத விடயமாக குறுகிய காலத்தில் நிறைவேறியுள்ளது.

இத்திருப்பணிகள் இனிது நிறைவேற உழைத்த அனைவரினதும் அயராமுயற்சிகளை வாழ்த்தி அனைவருக்கும் அன்னை இராஜராஜேஸ்வரியின் அருள் என்றும் கிடைக்கப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

த.பரராசசிங்கம்
(சமாதானநீதிவான்).

## புதிய சித்திரத்தேரை நிர்மாணித்த மயிலிட்டி சிந்துஜா கலைக்கூட முதல்வன் ஸ்தபதி வழங்கிய வாழ்த்துச் செய்தி



நீர்வேலி அன்னை இராஜராஜேஸ்வரிக்கு புதிதாகச் சித்திரத்தேர் அமைக்கும் பணியைச் செய்ததில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

புதிதாகச் செய்யப்பட்ட சித்திரத்தேரில் அன்னை ஸ்ரீ இராஜராஜேஸ்வரி இன்றுமுதன் முதலாக ஆரோகணித்து அடியார்களின் அல்லல் அகற்ற வீதி உலா வருவது மிகவும் பெருமைக்குரியதே. அன்னையின் பேரருளால் அனைவரும் சிறப்புற்று வாழ அன்னையைப் பிரார்த்தித்து அருள் வேண்டி நிற்கின்றேன்.

ஸ்தபதி த. சிறீதரன்.



மலரமைப்பு: நீர்வேலி செய்தியாளர்

## தேர்த்திருவிழா சிறப்புற அன்னையைப் பிரார்த்திக்கின்றோம்

பவானி களஞ்சியம்
இராசவீதி, நீர்வேலி.
விவசாய உள்ளீடுகள்,கட்டடப் பொருள்கள் ,பல்பொருள்கள்.

வீரன் எலெக்ரோனிக்ஸ்
கொடிகாமம் வீதி,
நெல்லியடி.

ஒளிநதி
டிஜிற்றல் வீடியோ &
போட்டோ
பருத்தித்துறைவீதி,ஆவரங்கால்.

ராஜ்மணி
பந்தல்சேவை
குறுக்குவீதி. நீர்வேலி

ஜனா ரேட்சென்ரர்
இமையாணன் கிழக்கு.
உடுப்பிட்டி.

ஜெயா சிவில்
கொன்ராக்ரர்
இமையாணன் கிழக்கு.
உடுப்பிட்டி.

பிள்ளையார் ஸ்ரோர்ஸ்
பல்பொருள் வாணிபம்
பருத்தித்துறைவீதி,
சிறுப்பிட்டி.

மயிலிட்டி சிந்துஜா
கலைக்கூடம்
தேர், மஞ்சம்,
வாகனங்கள்.

LEADING CRUSHER
WORKS
No.118, POONTHODDAM ROAD,
VAVUNIYA.

பிரசாந்தர் அரிவு ஆலை
தீராந்திகள், பலகைகள்
பெற்றுக்கொள்ளுமிடம்
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

குமரன் பல்பொருள்
வாணிபம்
இல. 06, நவீன சந்தை
நெல்லியடி.

அபிஷா நகைமாடம்
உரிமையாளர்
S.சிவபாலன்

செலான்வங்கி
நெல்லியடி.

LOVELY COOLBAR
&
RESTAURANT
NELLIADY.

செல்லமுத்தாஸ்
புடைவை மாளிகை
நெல்லியடி.

ஜெயசெந்தினி
நகைமாடம்
பிரதானவீதி, நெல்லியடி

TITANIC
RESTAURANT
NELLIADY.

பிரசாந் நகை அகம்
இல. 177A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

ஜீவராசா
தேனீர்ச்சாலை
குறுக்கு வீதி, நீர்வேலி.

மயூரி இரும்பகம்
குறுக்கு வீதி,
நீர்வேலி வடக்கு,நீர்வேலி.

அற்புத விநாயகர்
அரிவுஆலை
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

சிவா ஸ்ரோர்ஸ்,
குறுக்கு வீதி,
நீர்வேலி.

P.R.NETCAFE
CROSS ROAD.
NEERVELY.

இலட்சுமி பந்தல்சேவை
குறுக்கு வீதி,
நீர்வேலி.

சண் வர்த்தக நிலையம்

துரைகராச்

அம்பாள் களஞ்சியம்
நீர்வேலி வடக்கு
நீர்வேலி.

சிமிலன் மரக்காலை
நீர்வேலிச் சந்தி,
நீர்வேலி.

பரோ ரெக்ஸ்
பிரதான வீதி,
நெல்லியடி.

LANKA FUEL MART
POINT PEDRO ROAD,
SIRUPPIDDY,
NEERVELY.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூச்சியத்திலிருந்து மீண்டும் ஓர் ஆரம்பம்

போர் முடிந்து ஒரு வருடத்திற்குப் பின்னர் இப்போதுதான் உங்களைப் பார்க்க வந்திருக்கிறோம். இதுவரை பல தடவைகள் உங்களைச் சந்திக்க நாங்கள் முயற்சித்ததோம். ஆனால் அப்போது எல்லாம் எமக்கு அனுமதி கிடைக்கவில்லை. தேர்தலின் பின்னர் இப்போது உங்களிடம் வந்திருக்கிறோம். உங்கள் நிலைமைகளைச் சொல்லுங்கள் - என்று தொடங்குகிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன்.

வன்னியின் இறுதிப் போரில் சிக்கி பயங்கர அவலங்களைச் சந்தித்த மக்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 14 பேரும் முதல் தடவையாக ஒன்றாகச் சென்று சந்திப்பதே திட்டம். 21ஆம் திகதி பயணம் தொடங்கிய போது சுரேஷ் பிரேமச்சந்திரன், அப்பாத்துரை விநாயகமூர்த்தி ஆகியோர் தனிப்பட்ட காரணங்களால் பங்கேற்கவில்லை.

கிழக்கு மாகாணம் திருகோணமலை மாவட்டத்தில் இருந்து இரா. சம்பந்தனும்



மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து பா. அரியநேந்திரன், யோகேஸ்வரன், செல்வராசா ஆகியோரும் அம்பாறை மாவட்டத்தில் இருந்து பியசேனவும் வன்னி மாவட்டத்தில் இருந்து செல்வம் அடைக்கல நாதன், சிவசக்தி ஆனந்தன், வினோநோகராகலிங்கம், ஆகியோரும் யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து மாவை சேனாதிராசா, ஈ.சரவணபவன், சீ.சிறீதரன் ஆகியோரும் தேசியப்பட்டியலில் தெரிவான சுமந்திரனும் பங்கேற்றிருந்தனர்.

அண்மையில் மீளக்குடியமர்த்தப்பட்ட முல்லைத்தீவு மாவட்ட மக்களை முதலில் சந்தித்துப் பேசுவதற்கான திட்டத்துடன் கூட்டமைப்புக் குழுவினர் புளியங்குளத்தில் இருந்து நெடுங்கேணி செல்லும் பாதையில் தமது வாகனங்களைத் திருப்பினர்.

திட்டமிட்டு மக்களுக்கு அறிவித்து அவர்களை ஓர் இடத்தில் கூட்டி நடத்தப்படும் அரசியல் சந்திப்பாக இல்லாமல் எழுந்தமானமாக மக்களிடம் செல்லும் திட்டமே கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் இருந்தது. மக்கள் கும்பலாக இருந்த இடங்களில் அவர்களைச் சந்தித்து திடீர் கூட்டங்கள் நடத்தப்பட்டன. இதனால் கூட்டமைப்பு ஆதரவாளர்கள் என்று இல்லாமல் பலதரப்பட்ட மக்களையும் சந்திக்கும் வாய்ப்பு அவர்களுக்குக் கிட்டியது.

வாகனங்கள் மதியாமடுப் பகுதிக்குச் சென்றன. அப்பகுதியில் மீளக்குடியமர்ந்திருந்த மக்கள் 50 நாள் வேலைத் திட்டத்தின் கீழ் பாடசாலை சுற்றாடலைச் சுத்தப்படுத்தும் பணியில் ஈடுபட்டிருந்தனர். நாடாளுமன்ற உறுப்பினர்கள் உடனடியாக அவர்களைச் சென்று சந்தித்துப் பேசினர்.

### பிரச்சினைகள் பொதுத் தன்மை வாய்ந்தவை

மக்கள் தமது பிரச்சினைகள், குறைகள், தாம் எதிர்கொள்ளும் சிக்கல்கள் என்பவற்றை நாடாளுமன்ற உப்பினர்களுக்கு எடுத்துக் கூறினர். போர்க் காலத்தில் தாம் எதிர்கொண்ட அவலங்களையும் அவர்கள் விவரித்தனர்.

அனைத்துலக தொண்டு நிறுவனங்கள் வழங்கும் உதவிப் பொருள்கள் தவிர்ந்த வேறெந்த வருமானமும் அவர்களுக்கு இப்போதைக்கு இல்லை. மீளக்குடியமர்ந்து சில மாதங்களே ஆகி உள்ள நிலையில் அவர்கள் தமது வாழ்க்கையை நிலைப்படுத்தப் பெரிதும் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

செல்வச் செழிப்புடன் வாழ்ந்த அவர்களின் இன்றைய நிலை கண்டு மனம் வெதும்பிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசு மற்றும் வெளிநாடுகளுடன் பேசி விரைவில் உதவிகளைப் பெற்றுத்தர ஆவண செய்வதாக உறுதிமொழி அளித்தனர்.

**1**

அங்கிருந்து பயணித்த நாடாளுமன்ற உப்பினர்கள் நெடுங்கேணி மகா வித்தியாலயத்தை வந்தடைந்தனர். பாடசாலை மீண்டும் இயங்க ஆரம்பித்திருக்கிறது. ஆனால் வளங்கள் ஏதுமில்லை. உடைந்து சிதைந்தவை போக எஞ்சிய கட்டங்களில் வகுப்புகள் நடக்கின்றன.


30 ஆசிரியர்கள் இருந்த நிலையில் தற்போது 14 ஆசிரியர்களே கடமைக்குத் திரும்பி இருக்கிறார்கள் என் அதிபர் கூறினார். நீண்ட காலமாகவே பாடசாலையில் அறிவியல், ஆங்கில பாடங்களுக்கு ஆசிரியர்கள் இல்லாத குறையை அவர் எடுத்துக் கூறினார்.

இந்தக் குறைபாடுகளை நீக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது அவரது முக்கிய கோரிக்கையாக இருந்தது.

நெடுங்கேணிப் பகுதியில் மீளக் குடியமர்ந்திருக்கும் மக்களையும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்துப் பேசினர்.

பொதுவாக மீளக்குடியமர்ந்த மக்கள் அனைவரும் ஒரே மாதிரியான பிரச்சினைகளையே எதிர் கொண்டிருக்கின்றனர். பகுதிக்குப் பகுதி ஒவ்வொருவரது தேவைகளிலும் சிறிய வித்தியாசங்கள் இருந்த போதும் அவர்களது பிரச்சினைகள் பொதுத்தன்மை வாய்ந்ததாக இருந்தது.

அடிப்படைக் கட்டுமானங்கள் எல்லாம் அழிந்துபோயுள்ள நிலையில் மக்கள் ஒவ்வொன்றையும் மீண்டும் பூச்சியத்தில் இருந்தே ஆரம்பிக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு விவசாயத்



திற்கான வசதி இல்லை. நீர்ப்பாசனம் கிடையாது. விவசாய உள்ளீடுகளைப் பெறுவது சிரமமானதாக இருக்கிறது. முக்கியமாக நீரிறைக்கும் இயந்திரங்கள் இல்லாமல் தோட்டம் செய்வதற்கு மக்கள் திணறுகிறார்கள்.

அரசு இவற்றைக் கொடுத்து இருக்கின்ற போதும் விநியோகம் சீரானதாக இல்லை. சிலருக்கு விவசாய உள்ளீடுகள் கிடைத்துள்ளன, சிலருக்குக் கிடைக்கவில்லை.

### தடுப்புக் காவலில் உள்ளவர்களை மீட்டுத்தரக் கோரிக்கை

தடுப்புக் காவலில் உள்ளவர்களை மீட்டுத் தர நடவடிக்கை எடுக்கும்படியான கோரிக்கைகள் எல்லாக் கிராமங்களிலும் இருந்து வருகின்றன. உழைப்பாளிகளை இழந்து வருமானத்திற்கு வழி தெரியாது நிற்பவர்களின், குறிப்பாக இளம் தாய்மாரின் நிலைமை பரிதாபகரமானதாக உள்ளது.




பாடசாலைகள் அடிப்படை வளங்களை இழந்த நிலையில் மாணவர்களின் கல்வி வாய்ப்புக்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன.

கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒலுமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்குச் சென்ற போது, அங்கு தாய் தந்தையரை இழந்த மாணவர்கள் பலர் இருக்கின்றனர் என அதிபர் கூறினார். ஏனைய மாணவர்களும் போரின் தாக்கத்தால் பெரிதும் மன அழுத்தங்களுக்கு உள்ளானவர்களாக இருக்கின்றனர் என்பது அதிபரின் கணிப்பு.

அவர்களை அந்த நிலையில் இருந்து மீட்டு இயல்புநிலைக்குக் கொண்டு வருவதற்கும் கற்றல் சூழலுக்குள் அவர்களை உள்வாங்குவதற்கும் சுற்றுலா ஒன்றை ஏற்பாடு செய்ய அப்பாடசாலை ஆசிரியர்கள் திட்டமிட்டுள்ளனர். ஆனால், அதற்குத் தேவையான ஒரு லட்சம் ரூபா வரையான பணத்தைத் திரட்ட முடியாமல் போனதால் அந்தத் திட்டம் இதுவரை முழுமையடையவில்லை.

பாடசாலைக்குச் செல்ல போக்குவரத்து வசதிகள் இன்னும் ஏற்படுத்தப் படாத நிலையில் கிராமப்புற மாணவர்கள் சைக்கிள்கள் கூட இல்லாமல் துன்பப்படுகிறார்




கள். இதனால் மீளக்குடியமர்ந்த பின்னரும் பாடசாலைக்குத் திரும்பாத மாணவர்கள் கணிசமாக இருக்கிறார்கள்.

இராணுவத்தால் நேரடியான தொந்தரவுகளை இதுவரை அனுபவிக்கவில்லை என்றாலும் மனதளவில் பயம் எழுவதைத் தவிர்க்க முடியவில்லை என்கிறார்கள் பெண்கள். காடுகளுக்குச் செல்வதும், தனியே நடமாடுவதும் இப்போது தமக்குச் சாத்தியமாகவில்லை என்று குறைப்படுகிறார்கள். மலசலகூடங்கள் இடித்து அழிக்கப்பட்டும், சேதமாக்கப்பட்டும் உள்ள நிலையில் மக்கள் காடுகளுக்குச் செல்ல வேண்டி உள்ளது.

### சிவில் நிர்வாகம் கொண்டுவரக் கோரிக்கை

கிராமங்களை உடனடியாக சிவில் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரச் சொல்கிறார்கள் பெண்கள்.

விவசாய உதவிகள், மருத்துவ உதவிகள் அனைத்தும் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு உடனடியாகத் தேவைப்படுகிறது. தொண்டு நிறுவனங்களும் அரசும் வழங்கும் உதவிகள் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் போதுமானதாக இல்லை. வழமையான நிர்வாகச் சிக்கல்கள் காரணமாக கிடைக்கும் உதவிகளில்கூட சீரான நடைமுறை கிடையாது என்பது மக்களின் மிகப் பெரிய குற்றச்சாட்டாக இருக்கிறது.

ஒலுமடு பாடசாலையில் இருந்து புறப்பட்ட கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் வவுனியா வடக்கு பிரதேச செயலகத்திற்குச் சென்று பிரதேச செயலர் பரந்தாமனைச் சந்தித்துப் பேசினர். அப்பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்த மக்கள் அவர்களுக்கான உதவிகள் குறித்த புள்ளி விபரங்களை அவரிடமிருந்து கேட்டறிந்து கொண்டனர்.

**- செழியன் -**

அங்கிருந்து ஒட்டுசுட்டான் ஊடாக வற்றாப்பளை சென்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்தில் தரிசனம் முடித்து விட்டு, அப்பகுதியில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களைச் சந்தித்து குறைகளைக் கேட்டறிந்தனர்.

எல்லாப் பொருள்களையும் இழந்த நிலையில் அந்தரப்படும் தமது நிலையை மக்கள் விளக்கினர். அரசு கொடுத்த 8 பை சிமெந்தைக் கூட வைப்பதற்கு இடமில்லாத நிலை காணப்படுவதாக அவர்கள் கூறினர். இந்த நிலையில் மழையிலிருந்து சிமெந்துப் பைகளைக் காக்க அவற்றை விற்பனை செய்யும் அவலமும்கூட நடக்கிறது.

வற்றாப்பளைப் பகுதியில் உள்ளூர் மற்றும் வெளிநாட்டுத் தொண்டு நிறுவனங்கள் செயற்படுவதற்கு இன்னும் அனுமதி வழங்கப்படவில்லை. இந்த நிலையில் அந்த மக்கள் மேலும் நிர்க்கதியான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

### பட்டினிதான் கிடக்கவேண்டும்

உலக உணவுத் திட்டத்தால் வழங்கப்படும் உலர் உணவுப் பொருள் உதவி விரைவில் நிறுத்தப்பட்டுவிடும் என்ற அச்சம் எல்லா மக்களுக்கும் இருக்கிறது. அப்படியான ஒரு நிலை ஏற்பட்டால் தாம் பட்டினிதான் கிடக்க வேண்டும் என்கிறார்கள் மக்கள்.

கடந்த வருட இறுதியில் மீளக்குடியமர்ந்து விவசாயத்தில் இறங்கி இருப்பவர்கள் தமது அறுவடைகள் வந்து சேரும் வரையிலும் தற்போதுதான் மீளக்குடியமர்ந்தவர்கள் இன்னும் ஒரு வருட காலத்திற்கேனும் தமக்கு உணவுப் பொருள் உதவிகள் தொடரவேண்டும் என் வலியுத்துகிறார்கள்.

வற்றாப்பளையில் இருந்து முல்லைத்தீவு நகரத்திற்குச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள், அந்தப் பழம்பெரும் நகரம் சந்தித்திருக்கும் அழிவுகளைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தனர்.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்குச் சென்ற அவர்கள், பல்வேறு பணிகளுக்காக அங்கு காத்திருந்த மக்களைச் சந்தித்து அவர்களது சிக்கல்கள், தேவைகளை அறிந்து கொண்டனர்.

அங்கிருந்து திரும்பிய நாடாளுமன்ற உப்பினர்கள் ஏ-9 வீதியின் மேற்குப்புறம் அமைந்துள்ள வன்னிவிளாங்குளம் கிராமத்திற்குச் சென்றார்கள்.

### நாம் நிமிரும் வரை நிவாரணம் தேவை

இந்தப் பகுதியில் கடந்த வருடம் ஒக்ரோபர் மாதத்தில் மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டிருந்தார்கள். எனினும் அவர்களுக்கும் பிரச்சினைகள் தீரவில்லை. உலர் உணவுப் பொருள் நிவாரணம் இந்த வருட

(20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, ஓகஸ்ட் 2010.
General Certificate of Education (Advance Level) Examination - August 2010.

## உயிரியல் | பகுதி - I

## பல்தேர்வு வினாக்கள்

01. பின்வரும் கூற்றுக்களில் நொதியங்கள் தொடர்பானவையில் சரியானது எது?
   1) நொதியங்கள் தாக்கத்தில் மீளாது.
   2) நொதியங்கள் யாவும் தமது கட்டமைப்பில் புரதமில்லாப் பகுதியை கொண்டன.
   3) நொதிய மூலக்கூறு கீழ்படை மூலக்கூறுடன் எப்போதும் ஒத்த பருமன் உடையன.
   4) நொதிய தாக்கத்தில் ஈற்று விளைபொருள் இயல்பு மாறுவதில்லை.
   5) நொதியங்கள் கிளைக்கோசிடிக் பிணைப்பைக் கொண்டிருக்கும்.

02. நியுக்கிளிக்கமிலங்களின் சேர்க்கையமைப்பை சிறப்பாக பிரதிநிதித்துவப்படுத்துவது எது?
   1) C, H, O  2) C, H, O, N  3) C, H, O, N, P
   4) C, H, O, N, S  5) C, H, O, N, P, S

03. பச்சையவுருமணி பற்றிய பின்வரும் கூற்றுக்களில் எது தவறானது,
   1) இரட்டை மென்சவ்வினால் ஆழப்பட்டவை.
   2) ஒளித்தொகுப்பு நிறப்பொருள் தைலகோயிட் மென்சவ்வில் ஏற்படும்.
   3) பஞ்சணையில் வட்ட DNA, ரைபோசோம்கள் காணப்படும்.
   4) பொதுவாக தாவரக்கலங்களில் காணப்படும்.
   5) ஒளித்தொகுப்பில் ஒளித்தாக்கம் நடைபெறும் இடம் பஞ்சனை ஆகும்.

04. DNA தொடர்பாக பின்வரும் கூற்றுக்களில் தவறானது எது?
   1) விகாரம் ஏற்படுவதால் DNA மூலக்கூறில் கட்டமைப்பு மாற்றங்கள் காணப்படும்.
   2) DNA ஆக்கும் இரு பட்டிகையும் சர்வசமமானவை அல்ல.
   3) DNA இன் மூல ஒழுங்குக்கேற்ப இயல்புகள் வேறுபடும்.
   4) ஒரு நிறுமூர்த்தில் ஒன்றுக்கு மேற்பட்ட DNA காணப்படும்.
   5) நொதியத்தின் கட்டமைப்பை அக்கல DNA நிர்ணயிக்கும்.

05. உயிர்க்கலங்களில் ஒட்சிசன் உள்ள போது மட்டும் நடைபெறக்கூடியது பின்வருவனவற்றில் எது?
   A. கிளைக்கோப்பகுப்பு.
   B. அல்ககோலுக்குரிய நொதித்தல்.
   C. இலற்றிக்கமில நொதித்தல்.
   D. இலத்திரன் இடமாற்றுகை சங்கிலி.
   1) A மட்டும்.  2) B மட்டும்.  3) C மட்டும்.
   4) D மட்டும்.  5) A யும் D யும்.

06. இலங்கையில் உள்நாட்டுக்குரிய இனங்களிள் செழிப்பிடம் (hot spols) எனக் கருதக்கூடியவை எது/ எவை?
   A. அயன மண்டல மழைக்காடு.
   B. தம்பலகாமக் குடா.
   C. கோட்டன் சமவெளி.
   1) A மட்டும்.  2) B மட்டும்.  3) C மட்டும்.
   4) A யும் B யும்.  5) A யும் C யும்.

07. உயிர்ச் சுவட்டுப் பதிவுகளின் படி பாரிய இயற்கை இன அழிவுகள் நடைபெற்றிருக்கின்றன. முதலாவது அழிவுச் செயற்பாடு நடைபெற்ற காலப்பகுதி எது?
   1) Permian  2) Ordovician  3) Devonian
   4) Trissic  5) Cretaceous

08. இன்று வாழும் ரெப்ரீலியாக்களின் மிகவும் பழைமையானது எது?
   1) முதலை  2) ஓணான்  3) Archeopteyx
   4) பல்லி  5) ஆமை

09. உயிரிகளின் அழிவைத் தடுக்க காப்பு செய்வது மிகவும் அவசியமாகும். காப்பு செய்யும் முறைகள் சில கீழே தரப்பட்டுள்ளன.
   A. மீள இனங்களைப் புகுத்தல்.  B. ஆமை பொறிப்பகம்.
   C. சரணாலயங்கள் அமைத்தல்.  D. செயற்கை சினைப்படுத்தல்.
   E. தாவரவியல் பூங்காக்கள்.
   மேலே தரப்பட்டுள்ளவகையில் In-situ முறைகளாவன
   1) A யும் Eயும்  2) B யும் C யும்  3) A யும் C யும்
   4) A யும் B யும்  5) A யும் D யும்.

10. கீழே தரப்பட்டுள்ள இயல்புகளில் எது எதற்கு எதிரே கூறப்பட்டுள்ளன கணத்திற்கு தனித்தன்மையற்றது.

| இயல்புகள் | கணம் |
|---|---|
| 1) அழன்மொட்டு சிறைப்பை | Cnidaria |
| 2) சுலாலைக்கலம் | Platyhelminthes |
| 3) மூட்டிய கால்கள் | Arthropoda |
| 4) வறுகி | Mollusca |
| 5) குழாய்பாதம் | Annelida |

11. Flag Ship இனம் என்பது
   1) IUCN செந்தரவுப் புத்தகத்தில் பட்டியற்படுத்தப்பட்ட இனமாகும்.
   2) ஒரு நாட்டின் கலாச்சாரத்தின் அடையாளம் பெறுமதியுள்ள (Symbolic) இனங்களாகும்.
   3) சட்டத்தினால் பாதுகாக்கப்பட்ட இனங்களாகும்
   4) குறித்த சட்டத்துக்கு வரையறுக்கப்பட்ட இனமாகும்.
   5) நாடுகளில் தேசிய கொடிகளில் படம் மூலம் பிரதிநிதித்துவ இனமாகும்.


12. உயிர்ப் பல்வகைமை அழிவுச் செயற்பாடு தொடர்பில் சரியானது?
   1) உயிரின நிலவுகைக்கு அவசியமானது
   2) கூர்ப்பை விட அழிவுடையது இன எண்ணிக்கை பொதுவாக உயர்வானது.
   3) இது மனித நடவடிக்கையால் மட்டும் ஏற்படும்.
   4) கூர்ப்பு வேகத்தை மந்தமாக்கும் செயற்பாடு.
   5) இறுதியாக மொத்த அழிவுச் செயற்பாடு நகருயிர் தோற்றத்துக்கு வழிவகுத்தது.

13. எது இருமடியான கட்டமைப்பு கொண்டது
   1) Cycas விந்துப்போலி
   2) அவரையின் முளையம்
   3) Selaginella மாவித்தி
   4) Anthophyta முளையப்பை
   5) Cycas வித்தகவிழையம்.

14. பின்வரும் தாவரங்களில் காணப்படும் கட்டமைப்பு தொடர்பான தவறானது எது?
   1) கூம்பி - Selaginella
   2) இழைமுதல் - Pogonatum
   3) மும்மடியவித்தகதிழையம் - Cycas
   4) கிளையற்ற மகரந்தகுழாய் - Oryza
   5) பிரிவிலி முதல் - Nephrolepis

## SPECIAL GUIDE FOR 2010 A/L SCIENCE STUDENTS

* பின்வரும் வாழ்க்கை வட்டத்தை அடிப்படையாக கொண்டு 15,16,17 ஆகியவற்றிற்கு விடை தருக.




15. Anthophyta இன் வித்துறையை குறிப்பது.
   1) 1  2) 2  3) 3
   4) 4  5) 5

16. Pogonatum இழைமுதல்.
   1) 1  2) 2  3) 3
   4) 4  5) 5

17. Nephroleps இலை.
   1) 1  2) 2  3) 3
   4) 4  5) 5

18. இனப்பெருக்கம் தொடர்பாக பிழையானது எது?
   1) Agaricus இல் நுகவித்தி இல்லை
   2) Mucor இல் பொதுமைக்குழிய கரு காணப்படும்
   3) Pogonatum புணரித்தாவரம் வித்தித்தாவரம் சுயாதீனமானது
   4) கோணிவித்தி இலிங்கமுறை இனப்பெருக்கம் வித்தி ஆகும்.
   5) Nephrolepis ஓரினவித்தி உருவாக்கம்

19. தாவர வளர்ச்சிப் பதார்த்தம் தொடர்பான சரியான கூற்று எது?
   1) Cytokinin வித்துக்களின் உறங்கு நிலையை தடுக்கும்
   2) ABA வித்துக்களின் உறங்கு நிலையை தடுக்கும்
   3) Ethylene பழங்கள் கனிதலை நிரோதிக்கும்.
   4) Auxin தண்டின் கலப்பிரிவைத் தூண்டும்
   5) Giberallin வித்துக்களின் உறங்கு நிலையை தடுக்கும்

20. மனிதனின் பரிவககீழ் பற்றிய பிழையான கூற்று எது?
   1) மனவெழுச்சிக்கு இன்றியமையாதது
   2) ஓமோன் தொகுப்பு நடைபெறுகின்றது
   3) இதய வடிப்பு சீராக்கலில் சம்பந்தப்பட்டது
   4) முன்மூளையில் இருந்து வருவிப்பு
   5) இழிவு அனுசேபத்துடன் தொடர்பானது

21. மனிதனில் தனிச் செதிண் மேலணி இருப்பது
   1) வாய்க்குழியில்  2) சிறுநீர்ப்பையில்  3) வியர்வைச்சுரப்பி
   4) குருதிமயிர் குழாயில்  5) மேற்றோலில்

22. பின்வரும் கழித்தலங்கச் சோடியில் பிழையானது எது?
   1) பசுஞ்சுரப்பி - இறால்  2) கழிநீரகம் - மண்புழு
   3) மல்பீசியன்சிறுகுழாய் - கரப்பான்  4) எளியகழிநீரகம் - நட்சத்திரமீன்
   5) சுவாலைக் கலம் - நாடாப்புழு

23. மனித உணவுக் கால்வாய் தொடர்பாக சரியானாது எது?
   1) தசைப்படை அதிகளவு விருத்தி சிறுகுடல் பகுதியிலாகும்.
   2) விற்றமின் D இன் பிரதான உற்பத்தி பெருங்குடலாகும்.
   3) புர சமிபாடு இரைப்பையில் ஆரம்பமாகும்.
   4) சிறுகுடலின் ஆரம்ப பகுதியில் ஈரல் சுரப்பி வாய்கொள்ளும்.
   5) இரைப்பை வட்ட மடிப்புக்களைக் கெண்டிருக்கும்.

24. நரம்பு கணத்தாக்கம் தொடர்பாக பிழையானது
   1) தாக்க அழுத்தம் பெற ATP அவசியமில்லை
   2) வெளிக்காவு நரம்பு மூளை வழியேயும் செல்லும்
   3) இது நடைபெற $Nl^+$, Cl, $K^+$, $Ca^{++}$ பயன்படும்
   4) தாக்க அழுத்தத்தின் போது வெளிக்காவு நரம்புமூளை மென்சவ்வுண்மை புறமாற்றமடையும்
   5) இது மின்மாற்ற மூடாக மட்டும் நடைபெறும்

25. மனிதனில் சிரசு வில்லும் சுவாசப்பை வில்லும் முறையே
   1) 1 ஆம் 4 ஆம்  2) 1 ஆம் 3 ஆம்  3)3 ஆம் 4 ஆம்
   4) 3 ஆம் 5ஆம்  5) 3 ஆம் 6 ஆம்

26. ஒரு தனி மூலக்கூறு ஈமோகுளோபினுடன் சேரும் காபனோரொட்சைட்டு மூலக்கூறுகளின் எண்ணிக்கை
   1) ஒன்று  2) இரண்டு  3) மூன்று
   4) நான்கு  5) ஐந்து

27. மனிதனின் தலையோடு தொடர்பாக பிழையானது?
   1) நடுக்காது தலையோட்டு என்புகளால் பாதுகாக்கப்படும்
   2) பெருங்குடையத்துக்கு அருகாமையில் பிடசென்பு குமிழ் காணப்படும்.
   3) இதன் கொள்ளளவு அண்ணளவாக 1.5 லிற்றர் வரையானது.
   4) அசையக்கூடிய என்பு அனுஎன்பு, சிபுக என்பு இரண்டும்.
   5) என்புகளில் குழிகளில் அமைந்த பற்கள் காணப்படும்.

28. மனித செவியில் புவியீர்ப்பு சார்பாக தலையின் நிலையைப் பேணுதலில் தொடர்புடையது.
   1) சிறுபை  2) தோற்பை  3) கோட்டியின் அங்கம்
   4) நத்தைச்சுருள்  5) அரைவட்டக்கால்வாய்

29. மனித அச்சு முள்ளந்தண்டென்பு ஏனையவற்றிலிருந்து வேறு பிரித்தறியும் இயல்பு
   1) முள்ளென்பு நாடிக்கால்வாய்  2) இரு கவர் நரம்புமுள்
   3) பல்லுரு முளை  4) மையத்தி மூட்டுபரப்பு
   5) புடைதாங்கி பொருத்து பரப்பு

30. நாலு மணிப் பூத் தாவரத்தின் பூவின் நிறம் சிவப்பு, இளஞ்சிவப்பு,வெள்ளை என்பவற்றிற்கு நிறைவிலாட்சி உடையது. பின்வரும் கலப்புகளில் எது ஆகக்கூடிய இளஞ் சிவப்பு பூக்களைக் கொடுக்கும்.
   1) சிவப்பு x சிவப்பு  2) சிவப்பு x வெள்ளை
   3) இளஞ்சிவப்பு x வெள்ளை  4) இளஞ்சிவப்பு x இளஞ்சிவப்பு
   5) சிவப்பு x இளஞ்சிவப்பு

(15 ஆம் பக்கம் பார்க்க)

நன்றி: மேல்மாகாணக் கல்வித் திணைக்களம்
கொழும்பு தமிழ்ச் சங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மையான துறவி யார்?



உறங்காவில்லி என்ற இல்லற நெறி நின்ற வேட்டுவகுலச் சீடர் மீது தம்முடைய துறவறச் சீடர்களை விடவும் மிகுந்த அன்பு செலுத்தினார் இராமானுஜர். இது அவருடைய ஸந்நியாஸ சீடர்களுக்குப் பிடிக்கவில்லை.

ஒருமுறை ஸந்நியாஸ சீடர்கள் தம் காவியாடை கிழிந்திருந்தபோது ஒருவர் மற்றவர் மீது சந்தேகப்பட்டு, மாறி மாறி மற்றவர்களைக் குறை கூறினார்கள். உறங்காவில்லியின் பெருமையை விளக்க இதுதான் சந்தர்ப்பம் என்று இராமானுஜர் முடிவு செய்தார்.

தம்முடைய நம்பிக்கைக்குரிய திருமண் அணிந்த வைணவர்களை அழைத்து உறங்காவில்லியின் வீட்டுக்குச் சென்று, வில்லி இல்லாதபோது அவர் மனைவி பொன்னாயி உறங்கும் சமயம், அவளது வைரத்தோடு மற்றும் நகைகளைக் கழற்றி வரும்படி பணித்தார். ஒரு பக்கமாகப் படுத்திருந்த பொன்னாயி வைணவ பக்தர்கள் நகை கழற்றுவதை உணர்ந்தும் பாகவதர்கள் மீது உள்ள மரியாதையால் நடப்பது தெரியாதவள் போல் படுத்திருந்தாள். ஒருபக்கம் முழுவதும் கழற்றியபிறகு, அடுத்த பக்கம் உள்ள தோடு முதலியவற்றைக் கழற்றிக் கொள்ளட்டும் என்று பக்கம் மாறிப் படுத்தாள். அவள் விழித்துக் கொண்டதாகப் பயந்து வைணவர்கள் வெளியே ஓடிவந்து, கிடைத்த நகைகளை இராமானுஜரிடம் கொடுத்தனர். சிறிது நேரம் கழித்து வீடு திரும்பிய உறங்கா வில்லி நிகழ்ந்தது அறிந்து கொதித்துப் போனார். மனைவியை வைது, இனி உன்னுடன் வாழ முடியாது என்று கோபமாகப் புறப்பட்டுவிட்டார். என்ன கோபம்? அவர்களாகவே கழற்றிக் கொள்ள விடாமல்,திரும்பிப் படுத்ததால் வைணவர்கள் பயந்து வெளியேறி விட்டார்களே என்கிற கோபம்! 'பாகவதர்கள் தேவைக்கு உதவாமல் பாவி விரட்டி விட்டாளே' என்று மனைவியிடம் கோபம். 'நல்லது தானே நினைத்தேன்.' என்ற பொன்னாயி சொற்கள் அவருக்கு ஏறவில்லை. இராமானுஜரிடம் முறையிட இருவரும் வந்தார்கள். நகைகளை எடுத்து முன்வைத்த இராமானுஜர், தம் சந்நியாஸ சீடர்களை அழைத்தார். விலை உயர்ந்த நகைகளைப் பற்றிக் கவலைப்படாமல் பக்தர்கட்கு உதவ முடியாமல் போன வில்லியின் துக்கம். கிழிந்துபோன காவித் துணிக்காக ஒருவருடன் ஒருவர் சண்டையிட்ட சந்நியாஸிகளின் துக்கம். இரண்டையும் ஒப்பிட்டு, வில்லியின் சந்நியாஸமும் அவன் மனைவியின் சந்நியாஸமும் சந்நியாஸிகளின் சந்நியாஸத்தை விட மேலானது என்று விளக்கினார். காவிநிறம் தியாகத்தின் அடையாளம். சந்நியாஸம் மனசில் தான் இருக்க வேண்டும். துணியில் மட்டும் அல்ல!

*(சொன்னவர்: சுகி.சிவம்)*

# நம்பிக்கைதான் வாழ்க்கை

ஓர் ஊரில் புகழ்பெற்ற பாதிரியார் ஒருவர் இருந்தார். அவரைச் சந்திக்க மூன்று பெண்கள் வந்தார்கள். அதில் ஒருத்திக்குக் கண் தெரியாது. மற்றொரு பெண்ணுக்குக் கால்கள் ஊனம். மூன்றாவது பெண்ணோ கறுப்பாக அவலட்சணமாக இருந்தாள்.

முதலாமவள் ''எனக்குப் பார்வை கிடைக்க நான் என்ன செய்ய வேண்டும்'' என்றாள்.


இரண்டாமவள், ''என் கால்கள் குணமாகி நான் மற்றவர்களைப் போல நடக்க வேண்டும்'' என்றாள்.

கடைசியாக, மூன்றாவது பெண் ''நான் சிவப்பாக மாறி அழகாகத் திகழ என்ன செய்ய வேண்டும்'' என்றாள்.

பாதிரியார் இந்த மூன்று பெண்களிடமும், ''புனிதமிக்க ஜோர்டான் நதியில் நீங்கள் மூவரும் மூழ்கி எழுந்தால் உங்கள் மூவரின் குறைகளும் நீங்கிவிடும். நீங்கள் நினைத்தது போல் மாறிவிடுவீர்கள்'' என்றார்.

பாதிரியாரிடம் நன்றிகூறி விடைபெற்ற அந்த மூன்று பெண்களும் ஜோர்டான் நதிக்கரையை அடைந்தார்கள்.

பார்வையற்ற பெண்ணும், கறுப்பாய் இருந்த பெண்ணும் மனதில் மிகுந்த நம்பிக்கையுடன் ஜோர்டான் நதியில் மூழ்கி எழுந்தார்கள்.



சக்கர நாற்காலியில் இருந்த அந்த ஊனமுற்ற பெண்ணுக்கு நம்பிக்கை வரவில்லை. தயக்கத்துடன் சக்கர நாற்காலியிலேயே அமர்ந்திருந்தாள்.

அருகில் வந்த ஒருவர் மிகுந்த யோசனையுடன் அமர்ந்திருந்த அந்த ஊனமுற்ற பெண்ணைச் சக்கர நாற்காலியோடு ஜோர்டான் நதியில் இறக்கினார்.

நதியில் மூவரும் மூழ்கி எழுந்து கரை வந்து சேர்ந்தார்கள். பார்வையற்ற பெண்ணுக்குப் பார்வை கிடைத்தது. கறுப்பாய் இருந்தவள் சிகப்பாய் அழகாக மாறினாள் ஆனால் அந்த ஊனமுற்ற பெண்ணுக்குக் கால்கள் சரியாகவில்லை. மாறாக, அவளது சக்கர நாற்காலியின் சக்கரங்கள் மட்டும் புதிதாய் மாறியிருந்தன.

நம்பிக்கையும், சுயமுயற்சியும் மிகவும் முக்கியம். நம்பிக்கை இழப்பவர்கள் வாழ்க்கையில் வெற்றி பெறவே முடியாது.

*(சொன்னவர்: உளவியல் மேதை நார்மன் வின்சென்ட் பீல்)*

# மருத்துவிச்சிகளாக மாறிய சிறார்கள்

36 வயதான திருமதி சன்டர்ஸ் கலிபோர்னியாவிலுள்ள பெர்மொண்ட் வாசியாவார். இரு பிள்ளைகளின் தாயாரான அவர், தமது மூன்றாவது குழந்தையையும் பிரசவிக்கும் நிலையில் இருந்தார். அண்மையில் பிரசவத்துக்கான காலநேரத்துக்கு முன்னரே அவர் தமது மூன்றாவது குழந்தையைப் பிரசவித்திருந்தார்.



இதில் ஆச்சரியத்துக்குரிய விடயம் என்னவெனில் அவரது இல்லத்திலேயே நிகழ்ந்த இப் பிரசவத்துக்கு மருத்துவிச்சிகளாகச் செயற்பட்டோர் அவரது இரு பிள்ளைகளும் என்பதேயாகும். திடமான ஆண்கள் கூட என்ன செய்வது ஏது செய்வதென மூளை குழம்பிப்போய் திகைத்து நிற்கும் இத்தகைய சந்தர்ப்ப மொன்றில் சிறிதும் பயமின்றி திடமாகச் செயற்பட்டுள்ள இவரது சிறு பிள்ளைகள் இருவரும் இன்று அப்பிரதேசத்தின் சாதனை வீரர்களாகியுள்ளனர்.

பிரசவவேளை நெருங்கித்தமது தாயார் பிரசவ வேதனையால் குளறித்துடிக்கையில் இரத்தப் பெருக்கு நிகழ்ந்து குழந்தை வெளிவர ஆரம்பித்திருந்தது. இந்த வேளையில் அவரது ஒன்பது வயதேயான புதல்வன் 911 தொலைபேசி இலக்கத்தை அழைத்து ''அப்புலன்ஸ்'' வண்டியொன்றை அனுப்புமாறு கோரியுள்ளான்.

அந்த அழைப்பு விடுக்கப்பட்ட அதே சமயம் அவரது 11 வயதேயான புதல்வியோ தமது தாயார் நிலத்தில் சாய்ந்து படுப்பதற்கு ஒழுங்கு செய்து அந்த இடத்தையும் சுத்திகரித்து பிரசவித்த குழந்தையையும் கழுவித்துடைத்து தாயாரையும் சுத்தப்படுத்தி விட்டிருந்ததோடு 911 தொலைபேசிக் கட்டுப்பாட்டுப் பணியாளரான பெண்ணின் வழி காட்டலின் படி குழந்தையின் தொப்புள் கொடியையும் முடிச்சிட்டுத் தனது மருத்துவச்சிப் பணியை முடித்து விட்டிருந்தாள். இதன் பின்னரே சுகாதாரச் சேவைப் பணியாள்கள் கதவைத் தட்டினர்.

ஒன்பது இறாத்தல் நான்கு அவுன்ஸ் நிறையைக் கொண்டிருந்த தமது குட்டித்தம்பியையும் அரவணைத்துக் கொண்டிருக்கும் அச்சிறார்கள் இன்று உலகத்தை வென்ற பெருமிதத்துடன் மகிழ்கின்றனர்.

# எல்லாம் நன்மைக்கே!

ஒரு கிராமத்தில் மகான் ஒருவர் வசித்து வந்தார். பயங்கரமான ஒரு தொற்றுநோய் அங்கு பரவி கோழி, சேவல் அனைத்தையும் அழித்துவிடவே, மக்கள் அவரிடம் சென்று முறையிட்டனர். ''எல்லாம் நன்மைக்கே!'' என்று அவர்களை வழியனுப்பி வைத்தார் அந்த மகான்.



சில நாள்கள் கழித்து, வேறொரு கொடிய தொற்றுநோய் காரணமாக அங்கிருந்த நாய்கள் அனைத்தும் இறந்துவிட்டன. ஊர்மக்கள் மறுபடியும் மகானிடம் சென்று வருத்தப்பட்டனர். 'காவலுக்கென்று ஒரு நாய் கூட மிச்சமில்லையே என்று!'

இம்முறையும் அந்த மகான் பொறுமையுடன், ''நன்மை கருதியே கடவுள் இவ்வாறு செய்திருப்பார்!'' என்று பதிலளித்தார்.

அந்தக் காலத்தில் அடுப்பின் கனலை, அணைந்து விடாமல் இருப்பதற்காக சாம்பலால் மூடி வைத்திருப்பார்கள். என்ன ஆச்சரியம்! அந்த ஊரில் ஒரே சமயத்தில் எல்லா அடுப்புக்களும் அணைந்துவிட்டன. கலவரத்துடன் ஓடி வந்த மக்கள் அந்த மகானிடம் இதைத் தெரிவித்தனர். அதற்கு மகான், '' கடவுளின் கருணையே கருணை!'' என மொழிந்தார். பொறுமை எல்லை மீறிய நிலையில், '' சமைக்கக் கூட இயலாத நிலையில் என்ன நன்மை விளைந்துவிடப் போகிறது?'' என்ற அங்கலாய்ப்புடன் கலைந்தனர் மக்கள்.

அடுத்த நாள், ஒரு கொடுங்கோல் மன்னன் பெருஞ் சேனையுடன் அந்தக் கிராமத்தை நோக்கிப் படையெடுத்து வந்த கொண்டிருந்தான். எனினும், ஒரு நாயின் குரைப்புச் சத்தமோ, சேவலின் கூவலோ, ஏன்.. அடுப்பு எரிவதற்குச் சான்றாகப் புகைமண்டலமோ எதுவும் தென்படாதது கண்டு வியப்பில் ஆழ்ந்தான் அந்தக் கொடுங்கோலன்.

' மக்களே வசிக்காத கிராமம் போலும் இங்கு கொள்ளையிட என்ன இருக்கப்போகிறது?' என எண்ணி, தன் படையை வேறு கிராமம் நோக்கித் திருப்புமாறு ஆணையிட்டான். மக்கள் தப்பிவிட்டனர்.

மகானின் தீர்க்க தரிசனம் கண்டு ஊர்மக்கள் அவரைப் பாராட்டி வணங்கினர்.

(சுகி சிவம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் - திருநெல்வேலி அருள்மிகு

# தேர்த் திருவிழாச் சிறப்



## பிரதம, ஆலயக் குருமாரின் ஆசிச்செய்தி



விண்ணும் மண்ணும் விளங்குறக்காட்டி
அண்டமும் பிண்டமும் அமைவுறக் கூட்டி
அமைந்திடும் அண்டககைத் தேர்தனில்
விண்ணொளி ஆடல் விளங்கிடும் மாயே
போற்றி.



யாழ்ப்பாணம், திருநெல்வேலியில் பஞ்சகிருத்திய காரணியான பராபரை பத்திரகாளி என்ற திருமேனிதாங்கி வேண்டுவார்க்கு வேண்டுவன வெல்லாம் ஈந்து அருள் பாலிக்கின்றாள்.

இன்று அன்னையின் இரதோற்ஷவமாகும். யசுர்வேதம் ஸ்ரீ உருத்திரத்திலே சிவபெருமான் இரதகாரனாக வார்ணிக்கப்படுகின்றார். இரதோற்ஷவம் பிரபஞ்ச சொரூபமான தேரில் பஞ்சகிருத்திய காரணனான இறைவன் எழுந்தருளி, தமிழர்கள் மூவேறு கோட்டைகளோடு (திரிபுரம்) ஒவ்வுமை காணப்பட்ட மும்மலங்களை அழித்து மலபரிபாகம் செய்து ஆன்மாக்களை (அசுரர்கள்) ஈடேற்றும் சங்காரத்தைக் குறித்து நிற்கின்றது. எனவே பழைய தமிழரின் ஒப்புயர்வில்லா வாழ்வையும் திருப்பிக்காட்டி ஊர்கள் தோறும் கோயில்கள் தோறும் நடைபெறும் தமிழர் தேசிய விழாவும் ஆகும். எனவே மகாதிரிபுர சுந்தரியான பத்திரேஸ்வரி திருத்தேரேறி வரும் திருக்காட்சிகாண அடியவர்களுக்கு அன்னை இன்னருள் நல்குவதாகுக

மகாகணபதீஸ்வரக்குருக்கள், சுதாகரக்குருக்கள்.

## ஆலயத்தின் வரலாறு

எடுத்த காரியம் யாவினும் வெற்றி
எங்கு நோக்கினும் வெற்றிமற் றாங்கே
விடுத்த வாய்மொழிக் கெங்கணும் வெற்றி
வேண்டி னேனுக் கருளினள் காளி
தடுத்து நிற்பது தெய்வதை மேனும்
சாகு மானுட மாயினும் அஃதைப்
படுத்து மாய்ப்பாள் அருட் பெருங்காளி
பாரில் வெற்றி எனக்குறு மாறே

எனச் சக்தி உபாசகனாக மகாகவி சுப்பரமணிய பாரதி பணித்தவாறு நீர்வளமும், நில வளமும் அறிஞர் தம் ஞானவளமும் அடியார் தம் பக்தி வளமும் மிக்க யாழ்ப்பாணம், திருநெல்வேலிப் பதியில் கோயில் கொண்டருளி இருக்கும் உலக மாதாவான ஸ்ரீ பத்திரகாளி அம்பாளை அடியார்கள் போற்றித் துதித்து நல்வரங்களைப் பெற்று மகிழ்வது மிகவும் தொன்மையானதாகும்.

தெய்வம் கோயில் கொண்டருளி உள்ள தலத்தினை அண்மித்து வாழுகின்ற மக்களின் குலதெய்வமாகி தோன்றாத் துணையாக அருளிநிற்றல்; இயற்கை. அவ்வாறே திருநெல்வேலி வாழ் விஸ்வகுல மக்களின் குல தெய்வமாகத் துலங்கும் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் அவர் தம் பேரன்புக்குரிய ஆச்சி அதாவது என்றென்றும் அன்பும் ஆதரவும் அருளும் நல்கின்ற சக்தி சொரூபமான இனியதாய்! உலகியல் பந்த பாசத் தளைகளினால் சேய் தாயை மறந்து விடுவதுண்டு, எனினும் தாய் தன் சேயை என்றும் மறப்பதில்லை. எண்ணிலாத பொருட்குவை தானும், ஏற்றமும் புவியாட்சியும் ஆங்கே விண்ணில் ஆதவன் நேர்ந்திடும் ஒளியும், வெம்மையும் பெருந் திண்மையும் அறிவும் தண்ணிலாவின் அமைதியும் அருளும் எம் ஆச்சி தன் சேய்களை ஆதரவாக அரணைத்தே நிற்கின்றாள்.

ஒரே வீதியில் வலது புறத்தில் கூப்பிடு தொலைவில் தலங்காவல் பிள்ளையார் ஆலயத்தினையும் இடது புறத்தில் ஸ்ரீ கண்ணகை அம்பாள் ஆலயத்தினையும் கொண்டு நடு நாயகமாக விளங்கும் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயம் உருவாகி இற்றைக்கு நூற்று எழுபத்தாறு வருடங்கள் ஆகின்றன என அறியக் கிடக்கின்றது.

இக்கோயில் உருவானதற்கான காரணத்தை விளக்கும் ஒரு சம்பவமும் பெரியோர் வாயிலாக வழி வழியாகக் கூறப்பட்டு வருவதை இங்கு குறிப்பிடுதல் பொருத்தமா

தேவ கன்னிகை

பொழுது சாய்ந்த வேளையில் சகோதரர் இருவர் தம் குலத் தொழிலை முடித்து வீடு திரும்பும் வேளையில் அ மிகுந்த தேவ கன்னிகை ஒருத்தி அவர்கள் முன் நடனமாடியதாகவும் அதைக் கண்ணுற்ற அவர்கள் விய அதிர்ச்சியும் அச்சமும் கொண்டு அக்கன்னியை பயபக்தியுடன் வழிபட்டு அன்னைக்குக் கோயில் வைப்பதாகவும் கூறியதாகவும் அவ்வாறே அவர்கள் இன்றுவரை கம்பீரமாக நின்று கிளைவிட்டுப் பூத்துக் குலுங்குகின்ற மரத்தின் கீழ் ஒரு கல்லை எடுத்து வைத்து பிரதிஷ்டை செய்ததாகவும் மறுநாள் காலை அவர்கள் சென்று பார்க்கையில் அக்கல்லானது அவர்களது வேலைத்தலத்தில் (கம்மாலையில்) இருக்கக் கண்டு ஆச்சரியமுற்று அவ்விடத்திலேயே சிறு கொட்டிலாக கோவிலை அமைத்ததாகவும் கூறப்படுகின்றது.

இன்று அம்பாள் கோயில் கொண்டருளியுள்ள மூலஸ்தானமே அன்று அந்தக் கம்மாலை இருந்த இடமெனவும் கூறுகின்றனர்.

கம்பீரம் மிக்க ஆலயம்

பல அன்பர்கள் மனமுவந்து நன்கொடையாக ஆலயத்திற்கான காணிகளை வழங்கினார்கள். சிறு கொட்டிலில் விருப்புடன் கோயில் கொண்டருளிய அம் கம்பீரமும் கவர்ச்சியும் மிக்க ஆலயத்தில் மிளிர்வது காலத்தின் வளர்ச்சியினாலாகும். இந்த இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இருந்தே கோயில் வளர்ச்சி பெற்று வந்துள்ளதை அறிய முடிகின்றது. அந்நியர் ஆட்




# ஆறுமுகம் சிற்பாலயம்

## Arumugam Sitppalayam

Kalikovilady, Thirunelvely West, Jaffna. T.P:021- 2222892

Specialist All Kinds of Wood Carvings, Sculptures, Temple Chariots, Vaganams, Rathams and etc...



அமரர் தேர்க்கல
உங்கள் கை
தேர்க்கலை

# தனுஷா

## சிற்பாலயம்

அம்மன் வீதி, திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 0214900013, 0776047287

உரிமையாளர்:
பரஞ்சோதி சதீஸ்வரன் ஆச்சாரி

# நல்லைநாதன்

## இரும்புத் தொழிலகம்

திருநெல்வேலிச் சந்தி,
திருநெல்வேலி

# கலைவ

## கலையகம் சி

அம்மன் வீதி, திரு

உரிமையாள
குணபாலசிங்கம் சு

# திர்ஷிகா

## கலைக்கூடம்

அரசடி லேன், திருநெல்வேலி கிழக்கு,
திருநெல்வேலி.

உரிமையாளர்: நடராசா சற்குருநாதன் ஸ்தபதி
(சிற்ப பாரதி)

# ராஜன்

## சிற்பாலயம்

பிள்ளையார் வீதி,
திருநெல்வேலி மேற்கு, திருநெல்வேலி.

உரிமையாளர்:
இராசதுரை பிரபாகரன் (பிரன்)

# விநாய

## சிற்பால

தலங்காவல் பிள்ளைய
திருநெல்வே
உரிமையாளர்: எஸ்.இ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிகு பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்
# ப்பு மலர் 26.05.2010



அந்நிய மொழியும், அந்நிய மதமும், பத்தொன்பதாம் நூற்றாண்டில் சைவ மதத்தினையும் சைவத்தோடு இணைந்த தமிழ்க் கலாசாரத்தினையும் நசுக்க முனைந்திருந்த வேளை சைவாலயங்கள் புத்துயிர் பெறாதிருந்தமை ஒன்றும் ஆச்சரியமானதல்ல.

இருபதாம் நூற்றாண்டாகிய இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் இருந்த அடியார்கள் அவ்வப்பொழுது திருப்பணி வேலைகளை மேற்கொண்டு வந்துள்ளனர். இன்று கணீரென ஒலித்து அடியார்களை விழிப்புற வைக்கும் கோயில் மணி 1916ஆம் ஆண்டு சின்னத்தம்பி தனகர் என்பவரினால் செய்து கொடுக்கப்பட்டது எனவும் கோயிலுக்கு அர்ச்சகர் ஒருவர் நியமிக்கப்படு முன்னர் திரு.நாகமணி என்பவர் சைவாசார சிலராய் பூசகராகக் கடமையாற்றி வந்தார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

### பிடியரிசி

அம்பாளுக்கு அணிவிக்கப் பெற்றுள்ள ஐந்தரைக் தங்கப்பவுண் எடையுள்ள பதக்கம் ஊரில் அடியார்களை பிடியரிசி போடவைத்து அதனைச் சேகரித்து விற்ற பணத்தில் வாங்கப்பட்டது எனவும் அதன் அன்றைய விலை (1927.80 ரூபா) எனவும் அன்பர் ஒருவர் தெரிவித்தார்.

ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோயில் பரிபாலனசபை முதன் முறையாக 09.09.1920இல் ஆரம்பிக்கப்பட்டது. 01.04.1934இல் கூடிய மகாசபையில் பரிபாலன சபைக்காக பிரமாணங்கள் வகுக்கப்பட்டன. அன்று சபையில் அங்கம் வகிப்போருக்கான வருடாந்த சந்தா 16 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு ஒரு ரூபாவாகவும் 16 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இரண்டு ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

1924ஆம் ஆண்டு உள் கொட்டகையும் 1942ஆம் ஆண்டு வெளிக் கொட்டகையும் அமைக்கப்பட்டன.

இவ்வாறாகப் படிப்படியாக திருப்பணி வேலைகளுடன் வளர்ச்சி பெற்ற ஆலயத்தில் நித்திய, நைமித்திய பூசைகள் ஒழுங்காக நடைபெறவும் வருடாந்த திருவிழாக்களை நடத்தவும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன. 1971ஆம் ஆண்டு நிகழ்ந்த மகா கும்பாபிஷேகத்தினைத் தொடர்ந்து அடுத்த ஆண்டிலேயே கொடியேற்றத் திருவிழாவும் ரதோற்சவமும், தீர்த்தோற்சவமும் இடம்பெற அம்பாள் அருள் பாலித்தாள்.

### மூதாட்டியாக

பக்தர்கள் அன்போடு குறிப்பிடுகின்ற ஆச்சி என்ற பதத்துக்கு ஏற்ப சர்வாலங்கார பூஜிதையாகிய அம்பாள் வெண்ணிற ஆடையணிந்த கரியமேனி கொண்ட மூதாட்டியாகவே அடியார்களின் கனவில் தோன்றி திருவாய் மலர்கிறாள் என்று கூறக் கேட்கும்போது மிகவும் வியப்புத்தோன்றுகின்றது.

### கனவில் தோன்றி

ஒரு முறை பணப் பற்றாக்குறையினால் வருடாந்த திருவிழாவினை நடத்துவதில்லை எனத் தீர்மானித்தபோது அன்றைய தினம் இரவே அடியார் ஒருவரது கனவில் மூதாட்டி ஒருத்தி தோன்றி இம்முறை எனக்குத் திருவிழா நடத்தப் போவதில்லையா? என்று கேட்டாராம். உடனேயே அந்த அடியார் ( நிர்வாக சபை உறுப்பினர்) கண் விழித்து எழுந்து அம்பாளின் திருவாய் மொழி நினைந்து மெய் சிலிர்த்தாராம்.

அந்த அர்த்த சாமத்திலேயே அவர் வேறு ஒரு சிலரிடம் சென்று தூக்கத்தில் இருந்த அவர்களை எழுப்பி தான் கண்ட கனவைக் கூறி திருவிழா நடத்த ஏற்பாடு செய்வதாகக் குறிப்பிட்டார். திருவிழாச் செலவை தான் ஏற்றுக் கொண்டதாகவும் அவர் கூறினார்.

இதேபோன்று ஒரு சம்பவத்தினை வேறு ஒரு அடியாரும் குறிப்பிட்டதில் இருந்து அம்பாளின் உருவ ஒற்றுமையை உணர முடிகின்றது.

இந்த நிலையிலும் மகாகவி பாரதியின் மஹா சக்தி வெண்பாவினை நினைவு கூர்ந்து முடிப்பது சாலப் பொருத்தமானதாகும்.

தன்னை மறந்து சகல உலகினையும்
மன்ன நிதங் காக்கும் மஹாசக்தி - அன்னை
அவளே துணையென் றனவரதம் நெஞ்சம்
துவளா திருத்தல் சுகம்.

(இக்கட்டுரை திருமதி அன்னலட்சுமி இராசதுரை அவர்களால் 1985ஆம் ஆண்டு மஹா கும்பாபிஷேக மலரில் எழுதப்பட்டதில் இருந்து தொகுக்கப்பட்டது)



## பத்தர்கள் பாவம் தீர்ப்பாள் பத்திரகாளி

யாழ்பாடி புகழ்பெற்ற திருநாடு - மூன்று
ஆழ்கடலால் சூழ்ந்திருக்கும் தமிழ்நாடு
இங்கு திருநெல்வேலியெனும் பொற்றூராம் - அங்கு
நல்லாட்சி புரிகின்றாள் பத்திரகாளி.

வளைந்தோடும் சிற்றுளிதனிலே நுளைந்தாடும் சிற்பவர் கரமால்
விளைந்திட்ட சித்திரத் தேரில் சிறந்திட்ட சிற்பவள் இவளாம்
பவனித்து பக்தர்கள் பாவம் பறந்தோடும் அவர்கள் வீட்டு
அவளிந்த அவனிதனிலே அடையாததும் யாதும் உளதோ.

சங்கர்,
ஆலய பரிபாலன சபை.


தோற்றம் :
16.08.1938



ர் தேர்க்கலை அரசு கலாபூசணம் ஆ.ஜீவரட்ணம் அவர்கள் இவ்வுலகைவிட்டு ஒன்பது ஆண்டுகள் ஓடிமறைந்தாலும்
ங்கள் கைவண்ணத்தில் உருவான தேர்கள் ஓடும் காலமெல்லாம் உங்கள் நினைவுகள் நிலைத்து நிற்கும். ஈழத்துத்
தேர்க்கலைமரபின் திசைகாட்டியாய் வீற்றிருந்த உங்கள் கலைப்பணி இன்றும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.
வானகத்தில் இருந்து எம்மை வாழ்த்திடுக. உங்கள் வாரிசுகள் வெற்றிபெற வாழ்த்திடுக.

தேர்த்திருவிழா உபயகாரர்

*Jaya Mahal, Thirunelvely East. Jaffna.*

மறைவு :
24.05.2001

லவாணி
கம் சிற்பாலயம்
வீதி, திருநெல்வேலி.
உரிமையாளர்:
லசிங்கம் சந்திரதாசன்.

அம்பாள்
கலையகம் சிற்பாலயம்
அரசடிலேன்திருநெல்வேலி கிழக்கு,
திருநெல்வேலி.
உரிமையாளர்:
கலா பூசணம் ஆறுமுகம் கந்தசாமி

ஹரன் புடவையகம்
பலாலி வீதி, திருநெல்வேலி.

அம்பாள் ஸ்ரோர்ஸ்
பல்பொருள் வாணிபம்
பத்திரகாளி கோயிலடி, திருநெல்வேலி.

வேல்முருகன்
சைவ உணவகம்
பலாலி வீதி, திருநெல்வேலி.

ாயகர்
பாலயம்
பிள்ளையார் கோயிலடி,
நெல்வேலி.
ளர்: எஸ்.இராசரத்தினம்

காங்கேயன் கலைக்கூடம்
*Kangeyan Kalaikoodam*



காளிகோயிலடி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 0771390328
உரிமையாளர்: எம்.சங்கர்
அம்மன் வீதி, திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

தர்சினி மரத்தளபாட
இயந்திரத் தொழிற்சாலை
சகலவிதமான நுட்ப் வேலைகளுக்குச் சிறந்த இடம்
காளிகோயிலடி, சங்கானை
உரிமையாளர்: வ.திருநாவுக்கரசு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MBBS/MD

**Lugansk State Medical University**
**UKRAINE - EAST EUROPE**

Recognized by **SRI LANKA MEDICAL COUNCIL**

**With A/Ls 6 years**

Minimum : 2C + 1S in Biology, Chemistry and Physics

எமது நிறுவனத்தின் மூலம் அனுப்பப்பட்ட கொழும்பு, யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா, முல்லைதீவு, நுவரேலியா, மாத்தளை, மாணவர்கள் தற்பொழுது Ukraineல் கல்வி கற்கின்றனர்.

**www.lugmedi.com**

யாழ்ப்பாணத்தில் தொடர்புகளுக்கு:

Tel: (தமிழில்): 0777 767818/ 0779004194

**Scholars Information Center (SIC)**

இல.734, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.



## VACANCY

**Wanted Educational Advisors**

**உயர் கல்வி ஆலோசகர்கள் தேவை**

எமது நிறுவனமானது கடந்த 10 வருடங்களுக்கு மேலாக இந்தியாவில் Engineering, Microbiology, Biotechnology, Information Technology, Computer Science, Physiotherapy, Nursing, B.Com, Journalism, Hotel Management, BBM./ BBA ஆகிய Degree பாட நெறிகளுக்காக இலங்கையில் இருந்து மாணவர்களை அனுப்பி வந்துள்ளது.

எமது நிறுவனத்துடன் இணைந்து இந்தியாவில் உயர் கல்விக்காக O/L - A/L சித்தியடைந்த மாணவர்களுக்கு தகவல்கள் வழங்கும் பொருட்டு Educational Advisors பின்வரும் இடங்களில் தேவை.

- ★ மானிப்பாய்
- ★ சாவகச்சேரி
- ★ தெல்லிப்பளை
- ★ இளவாலை
- ★ பருத்தித்துறை
- ★ ஊர்காவற்றுறை
- ★ கோப்பாய்
- ★ இணுவில்
- ★ வட்டுக்கோட்டை
- ★ கொடிகாமம்

(யாழ்.குடாநாட்டின் மற்றைய இடங்களில் இருந்தும் விண்ணப்பிக்கலாம்)

ஓய்வு பெற்ற பாடசாலை அதிபர்கள்/ஆசிரியர்கள் Tutory Owners விண்ணப்பிக்கலாம்.

★ *Part Time / Freelance Basis*
★ *Attractive Incentives / Allowance will be paid*

(98645)

**Call 0777 767818**
**Scholars Information Center (SIC)**
**734, Hospital Road, Jaffna.**


# முதலாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 23 ★ 01 ★ 1935

உதிர்வு 05 ★ 06 ★ 2009



**திருமதி திருநாவுக்கரசு பராசக்தி**

திதி: சதுர்த்தசி

ஓராண்டென்ன ஓராயிரம்
ஆண்டுகளானாலும்
ஓயாது உன் நினைவு
உத்தம குலவிளக்கே!
உனை உச்சரிக்கும் உதடுகள்
உனக்காக ஏங்கும் உள்ளங்கள்
உயிருருக.....
குருவிக் கூடாய் வாழ்ந்த எம்மை
குற்றுயிராய் துடிக்கவிட்டு
கூண்டைவிட்டுப் பறந்ததேனோ....?

94/4, கச்சேரிமேட்டை வீதி, யாழ்ப்பாணம். **மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**


## வீடு, காணி விற்பனைக்கு

6 பரப்பு வெறுங்காணியும், 6 பரப்பு வீடு வளவும் (4 அறை வீடு) விற்பனைக்கு உண்டு.

**சோடாகொம்பனி லேன், மல்லாகம்.**

**T.P : 0777-877843**


### ஒற்றுமையை வலுப்படுத்த கைதடியில் நடவடிக்கை

கைதடி,மே. 26

கைதடியிலுள்ள சனசமூக நிலையங்களின் ஒற்றுமையை வலுப்படுத்தும் முயற்சியில் கைதடி தெற்கு சனசமூக நிலையம் அண்மைக் காலமாக ஈடுபட்டு வருவதனை கைதடியிலுள்ள பொது அமைப்புக்கள் பலவும் வரவேற்றுள்ளன.

கைதடிப் பிரதேசத்தில் இருக்கின்ற சனசமூக நிலையங்கள், விளையாட்டுக் கழகங்கள் என்பவற்றிடையே ஏற்படும் பிணக்குகள், மனக்கசப்புக்கள் ஆகியவற்றினை இச்சன சமூக நிலையம் முன்னின்று தீர்த்து வைப்பதுடன் ஒற்றுமையின் வலுப்பாட்டையும் விளக்கி வருவதனையும் அவதானிக்க முடிகின்றது. (க-288)

### புங்குடுதீவில் இரத்ததான நிகழ்வு

புங்குடுதீவு புனித சவேரியார் ஆலயத் திருவிழாவை முன்னிட்டு புங்குடுதீவு சவேரியார் பங்கு மக்களால் இரத்ததானம் வழங்கும் நிகழ்வு சவேரியார் ஆலயத்தில் நடைபெற்றது.

இதில் யாழ். போதனா வைத்திய சாலை இரத்த வங்கியினரால் 55 பேரிடம் இரத்தம் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சென்ற ஆண்டைவிட இவ்வாண்டு கூடுதலான மக்கள் குடும்பங்களாகச் சேர்ந்து இரத்ததானம் வழங்கினர்.

இந்து மக்களும் ஆர்வத்துடன் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்கியதாக புங்குடுதீவு புனித சவேரியார் ஆலய பங்குத் தந்தை லியோன் ஆம்ஸ்ரோங் தெரிவித்துள்ளார்.

(1-188)

### காவலரண்கள் அகற்றப்படுகின்றன

நாவற்குழியில் பனை அபிவிருத்திச் சபை நலன்புரி முகாமிற்குவெளியே யாழ்.கண்டி வீதியுடன் அமைக்கப்பட்டிருந்த இராணுவக் காவலரண்களில் பெரும் பகுதி கடந்த வாரம் அகற்றப்பட்டுள்ளது.

நலன்புரி முகாமின் கிழக்குப்புறம் அமைக்கப்பட்டிருந்த குடிசைகள் பலவும் கிடுகுகள் அகற்றப்பட்டு பிடுங்கும் நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (1-121)

## சாவகச்சேரியில் பிரிவுபசார விழா

யாழ்ப்பாணம்,மே.26

இலங்கை மின்சார சபையின் சாவகச்சேரி அலுவலகத்தில் மின்னிணைப்பாளராக (லைன்ஸ்மன்) கடமையாற்றி இளைப்பாறிச் சென்ற ஆ.நவரத்தினத்திற்கு சக உத்தியோகத்தர்களின் பிரிவுபசார விழா அலுவலக மண்டபத்தில் நடைபெற்றது.

மின் அத்தியட்சகர் அன்ரன் ஞானப்பிரகாசம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ்.பிராந்திய பிரதி பொது முகாமையாளர் அலுவலக கட்டமைப்பு பொறியியலாளர் கே.லிங்கரூபன், மனிதவள அலுவலர் கேதீஸ்வரன், சுன்னாகம் பிரதம மின் பொறியியலாளர் எஸ். ஞானகணேசன், சாவகச்சேரி அலுவலக முன்னாள் மின் அத்தியட்சகர் வே.சடாச்சரமூர்த்தி உட்படப் பலர் கலந்துகொண்டனர். (1-207)

# 17ஆம் ஆண்டு நினைவலைகள்

பிறப்பு: 01.01.1954

இறப்பு: 07.06.1993



**திருமதி நகுலராஜா நகுலேஸ்வரி** (அம்பன், குடத்தனை)

(திதி: சதுர்த்தசி 26.05.2010)

பதினேழு ஆண்டுகள்
மறைந்து சென்றாலும் உன் நினைவுகள்
என் மூச்சில் கலந்து நிற்கின்றன
உன் நினைவுடன் என்
வாழ்வினைத் தொடர்கின்றோம்.

மு.நகுலராஜா, அம்பன், குடத்தனை.

தகவல்: குடும்பத்தினர்.

[98641]

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும்

## வீட்டுக்கிருத்தியமும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்

மாந்தளிர் மேனி உந்தன்
மாங்கனி சுவையுந்தன் வாழ்வு
தீங்கினை எண்ணாத உள்ளம்
தீண்டவில்லை தீமையென்றும் எமை
மாண்பினைப் பெற்றாய் ஐயா

மாம்பழம் பெயர் கொண்டுயுயர்ந்தாய்
மானிடர் போற்ற வாழ்ந்தாய்
மாதவம் செய்தோமையா
போற்றி! போற்றி! போற்றி!

மலர்வு: 12.06.1933

உதிர்வு: 26.04.2010



கடந்த 26.04.2010 இல் இறைவனடி சேர்ந்த எமது குடும்பத்தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள்(24.05.2010) திங்கட்கிழமை கீரிமலை தீர்த்தக் கரையில் நடைபெற்றன. இன்று (26.05.2010) புதன்கிழமை காலை 9.30 மணிக்கு எமதுஇல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும்கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.

**அமரர் சின்னவன் சங்கரன் (மாம்பழம்)**

நவபுரம், கைதடி.
தொ.பே: 0774737483, 0215682045.

(98446)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உயிரியல், பகுதி I: தொடர்ச்சி......

* **31-32 வினாக்கள் பின்வருவனவற்றை அடிப்படையாக கொண்டவை.**

சோளத்தில் பச்சை நாற்றுக்கள் , மஞ்சள் நாற்றுக்கள் ஆட்சியுடையது. மாப்பொருள் வித்து வெல்ல வித்துக்கு ஆட்சியுடையது. மாப்பொருள் வித்துக்களையும் மஞ்சள் நாற்றுக்களையும் கொண்ட துாய விருத்தி செய்கின்ற தாவரம், வெல்ல வித்துக்களையும் பச்சை நாற்றுக்களையும் உடைய துாய விருத்தி செய்யும் தாவரத்துடன் கலக்கப்பட்டு $F_1$ பெறப்பட்டது.

31. $F_1$ தாவரங்கள் மாப்பொருளுடைய வித்துக்களையும் மஞ்சள் நாற்றுக்களையும் கொண்ட பெற்றோர் தாவரத்துடன் கலப்பினஞ் செய்து பெறப்பட்ட 200 தோன்றல்கள் பகுக்கப் பட்டது. இரண்டு இயல்புகளும் தன்வயத்தமாகாத தனியாக்கப் படுகின்றதெனின் பெறப்படும் தோன்றல்கள்

| | மா . ப | மா .ம | வெ . ப | வெ . ம |
|---|---|---|---|---|
| 1) | 48 | 52 | 51 | 49 |
| 2) | 110 | 38 | 40 | 12 |
| 3) | 108 | 00 | 00 | 92 |
| 4) | 74 | 26 | 25 | 75 |
| 5) | 104 | 96 | 00 | 00 |

32. இரு இயல்புகளும் முற்றாக இணைந்தது என்று கொண்டால் $F_1$ தாவரத்திற்கும் வெல்ல முடைய வித்துக்களையும் மஞ்சள் நிற நூற்றுக்களையும் கொண்ட தாவரத்திற்கும் இடையேயுள்ள கலப்பில் பகுக்கப்பட்ட 200 தோன்றல்களின் பரம்பல்,

| | மா . ப | மா .ம | வெ . ப | வெ . ம |
|---|---|---|---|---|
| 1) | 200 | 00 | 00 | 00 |
| 2) | 00 | 104 | 96 | 00 |
| 3) | 108 | 92 | 00 | 00 |
| 4) | 00 | 00 | 100 | 100 |
| 5) | 48 | 52 | 49 | 51 |

33. Klinefilters Syndrome என்பது,
   1) பெண்ணில் இலிங்க நிறமூர்த்தத்தில் x நிறமூர்த்தம் தவறுதல்.
   2) பெண்ணில் இலிங்க நிறமூர்த்தத்தில் x நிறமூர்த்தம் மேலதிகமாதல்.
   3) ஆணில் இலிங்க நிறமூர்த்தத்தில் x நிறமூர்த்தம் தவறுதல்.
   4) ஆணில் இலிங்க நிறமூர்த்தத்தில் x நிறமூர்த்தம் மேலதிகமாதல்.
   5) ஆணில் தன்னிறமூர்த்தம் மேலதிகமாதல்.

34. நிறமூர்த்தங்கள் மென்டலால் கண்டு பிடிக்கப்பட்ட பிறப்புரிமையியற் காரணிகள் போல் நடந்து கொள்கின்றது என்பது,
   1) தனிப்படுத்துகை விதி. 2) தன்வயத் தொகுப்பு விதி.
   3) தலைமுறையுரிமை நிறமூர்த்த கொள்கை. 4) கார்டி வேயின்பேக் விதி.
   5) விகாரக் கொள்கை.


35. சனத்தொகை அதிகரிப்பின் காரணமாக ஏற்படக்கூடிய சூழலியல் பிரச்சினைகளில் நகரங்களில் வாழும் மக்கள் எதிர்நோக்கும் பிரதான பிரச்சினையாவது,
   1) இயற்கை வளங்களுக்கான கேள்வி அதிகரித்தல்.
   2) சூழலின் தரம் குறைந்த ஆரோக்கிய மற்ற சூழல் உருவாதல்.
   3) மாசுக்கள் ஒன்று திரளுதலும் அவற்றை அகற்றுவதில் ஏற்படும் பிரச்சினை உச்ச நிலையை அடைதல்.
   4) குடிநீர் தட்டுப்பாடு உச்சநிலையை அடைதல்.
   5) இரைச்சல் அதிகரித்தல்.

36. மனித செயற்பாடுகளின் விளைவால் சூழலில் விடப்படும் வாயுக்களில் எது ஓசோன் படையில் பாதிப்பை ஏற்படுத்தும்,
   1) $CH_4$ 2) $CO_2$ 3) CFC
   4) $H_2O(g)$ 5) CO

37. அட்டவணையில் உள்ளத்தில் ABC இன் சரியான ஒழுங்கைத் தருக.

| சமவாயம் | சூழற் பிரச்சினை |
|---|---|
| A - CITES | X - நாட்டு குறுக்காக ஆபத்தான கழிவுகளின் அசைவு. |
| B - பேசல் | Y - ஆபத்தை எதிர்நோக்கும் விலங்கு, தாவர வியாபாரம். |
| C - ரம்சார் | Z - ஈர நிலங்களை அழித்தல். |

   1) X, Y, Z 2) Z, Y, X 3) Z, X, Y
   4) Y, X, Z 5) X, Z, Y

38. 


தரப்பட்ட படத்தை சரியாக விவரிப்பது எது,
   1) உயிர்த்திணிவுக்கூம்பகம், முதலாம் நுகரி உண்ணும் விதத்தின் அடிப்படையில் ஆனது.
   2) எண் - கூம்பகம் - நுகரிகளின் இனப்பெருக்க வேகத்தின் அடிப்படையில் ஆனது.
   3) ஒது சக்திக் கூம்பத்தை சரியாக விளக்குகிறது.
   4) தலைகீழ் எண் கூம்பகத்தில் தெள்ளு, புரட்டோசோவா ஒட்டுண்ணியாகும்.
   5) ஒரு தலை கீழ் உயிர்த்திணிவு கூம்பகத்தை விளக்குகிறது.

39. நற்போசணையாக்கத்தின் ஓர் விளைவாக கருதமுடியாது,
   1) உயிர்ப்பல்லகைமை குறைதல்.
   2) உயிர் இரசாயன ஒட்சிசன் தேவை (BOD) அதிகரிக்கும்.
   3) நீரின் கலங்கள் தன்மை அதிகரிக்கும்.
   4) சயனே பற்றீரியாக்களின் பெருக்கம் ஏற்படும்.
   5) காற்றின்றிய பிரிகையாக்கம்.

40. பின்வருவனவற்றில் உயிருள்ள நுண்ணங்கிகளைக் கொண்டிராதது பின்வருவனவற்றில் எது?
   1) கடல்நீர். 2) ஊற்று நீர். 3) போலியோ வக்சீன்.
   4) ஈர்ப்புவலி தொட்சினுரு. 5) பாச்சராக்கிய பால்.

41. அக நஞ்சுப் பொருட்களாக அமையக்கூடியது,
   1) Salmonella typhi வின் Lipopoly Saccharide
   2) Clostridium tetani இன் Protein
   3) Vibrio cholera இன் Protein
   4) Corynebacterium deph theriae இன் Portein
   5) Pseudomonao aeruginosa இன் Protein

42. இயற்கை நைதரசன் வட்டத்தின் செயற்பாடுகளில் நைதரசன் நாட்டலில் ஈடுபடக்கூடியவை,
   1) Nitrobacter உம் Azotobacter உம்
   2) Anabaena உம் Pseudomonas உம்
   3) Rhizobium உம் Azotobacter உம்
   4) Rhizobium உம் Acetobacter உம்
   5) Nitrosomonas உம் Acetobcter உம்

43. பொலிமெக்சின் (Polymyxine)
   1) பற்றீரியாவின் கலச்சுவர் தொகுப்பின் நிரோதி.
   2) பற்றீரியாவின் கலமென்சவ்வு சேதப்படுத்தல்.
   3) பங்கசுவின் கலமென்சவ்வு சேதப்படுத்தல்.
   4) பங்கசுவின் புரதத்தொகுப்பை நிரோதித்தல்.
   5) பற்றீரியாவின் புரதத்தொகுப்பை நிரோதித்தல்.

44. வளர்ப்பு ஊடகம் ஆய்வு கூடத்தில் கிருமியழித்தலுக்கு வழக்கமாக பயன்படும் முறை எது?
   1) 10 நிமிடங்களுக்கு ஊதா கடந்த ஒளி பட வைத்தல்.
   2) உயர் வெப்பநிலை குறுகிய கால முறை பயன்படுத்தல்.
   3) பற்றீரியா வடிகட்டியைப் பயன்படுத்தல்.
   4) அமுக்கவடுகலனின் 15 நிமிடங்களில் 121°C வெப்பநிலையில் வெப்பமாக்கல்.
   5) 100°C வெப்பநிலையில் கொதிக்கவைத்தல்.

45. வினாகிரி கைத்தொழில் உற்பத்தியில் பின்வரும் அங்கிகளின் எதனுடைய அனுசேபச் செயற்பாடுகள் பயன்படுத்தப்படுகின்றன.
   1) Acetobacter, Azotobacter 2) Saccharomyces, Lactobacillus
   3) Sacchoromyces, Acetobactor 4) Saccharomyces, Azotobacter
   5) Lactobacillus, Acetobacter

46. ஒட்டுண்ணி தொடர்பாக சரியான கூற்று எது?
   1) Ascaris lumbricoids - மிகப்பெரிய மனித குடல் ஒட்டுண்ணி.
   2) Wuchereria bancrofti - கலத்தக ஒட்டுண்ணி.
   3) Necator americanus - இடைவிருந்து வழங்கி மூலம் பரவும்.
   4) Plasmodium vivax - மூளை மலேரியா மூலம் இறப்பு ஏற்படுத்தும்.
   5) Entamoeba histolytica - மனித குடல் கலத்தக ஒட்டுண்ணி.

47. சேதனப்பொஸ்போற்று, சேதன் குளோரைட்டிலிருந்து வேறுபடுவது,
   1) அவை சூழலில் நநிலைபேறாக இருக்கும்.
   2) அவை கொழுப்பில் கரையும்.
   3) அவை கோலின் எசுத்தரேசை செயலின்மைப்படுத்தும்.
   4) அவை உணவுத்தொடரில் செறிவடையும்.
   5) அவை நரம்பு நாருறையில் செயற்படும்.

48. இலங்கையில் உள்ள சில தென்னைப் பீடைகளின் பொதுப்பெயரும் அவற்றின் சேத அறி குறியும் தரப்பட்டுள்ளது.
   A - செவ்விள நீள் மூஞ்சி - இளம் இலை உச்சி.
   B - தென்னங் கருவண்டு - முடி சரிதல்.
   B - தென்னை மயிர்கொட்டி - இளம் இலை சிதறிய சாம்பல் கலந்த கபிலநிறப் பொட்டு
   மேற்கூறியதில் சரியானது எவை?
   1) Aமட்டும். 2) B மட்டும். 3) C மட்டும்.
   4) A யும் C யும். 5) A யும் B யும்.

49. பின்வருவன களைகளின் பெயர் தரப்பட்டுள்ளது,
   A - Echinochlop sp
   B - Cynodon sp
   C - Cyperus sp
   பின்வரும் இயல்புகளில் சரியான இயல்பை காட்டும் தொடரினைத் தருக.
   1) துரித வளர்ச்சி, விதைகள் சிறியவை. வினைத்திறனான பரம்பல்.
   2) விதைகள் சிறியவை, வினைத்திறனான பரம்பல், துரித வளர்ச்சி.
   3) விதைகள் சிறியவை, துரித வளர்ச்சி, வினைத்திறனான பரம்பல்.
   4) வினைத்திறனான பரம்பல், துரித வளர்ச்சி, விதைகள் சிறியன.
   5) வினைத்திறளான பரம்பல், விதைகள் சிறியவை, துரித வளர்ச்சி.

50. ஒரு வகுப்பில் 40 மாணவர்கள் பெற்ற புள்ளிகளில் இடை 45, நியமவிலகல் 12 ஆகும். இப்புள்ளிகளின் செவ்வனாக பரம்பியிருந்தால் 69 இற்கு மேற்பட்ட புள்ளிகளைப்பெற்றுள்ள மாணவர்களின் எண்ணிக்கை அண்ணளவாக,
   1) 5 2) 10 3) 15
   4) 20 5) 25

* **51 தொடக்கம் 60 வரையுள்ள வினாக்கள் தரப்பட்ட அட்டவணையை அடிப்படையாக கொண்டது.**

பொழிப்பாக்கிய பணிப்புரைகள்

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| ABD சரி | ACD சரி | AB சரி | CD சரி | வேறுவிடை |

51. பின்வரும் Taxa க்களில் ஒட்டுண்ணி காணப்படுபவை,
   A. Arthropada. B. Echinodermata C. Platyhelminthes
   D. Nemotoda E. Chidaria

52. தவறான கூற்றுக்களைத் தெரிந்தெடுக்குக.
   A. இயற்கையான் தாவர வளர்ச்சிப்பதார்த்தம் MCPA ஆகும்.
   B. தாவர அங்குர நுனிகளின் IAA இனது பரம்பரை ஒளித்தாக்க மேற்படுத்தாது.
   C. தாவர அசைவுகளின் சீராக்கலில் தாவர வளர்ச்சிப்பதார்த்தம் செல்வாக்கு செலுத்தும்.
   D. சைற்றோகைகனின் ஒட்சினுடன் இடைத்தாக்கம் புரிந்து கலப்பிரிவைத்தூண்டும்.
   E. எதலீன் பூத்தவை நிரோதிக்கும்.

53. மனித இதயத்தசை தொடர்பாக சரியானவை,
   A. அவை வரிகொண்டவை. B. அவை இச்சைக்குரியவை.
   C. இவை களைப்படையாது.
   D. இவை சந்தத்துக்குரிய நீடித்த சுருக்கம் காட்டும்.
   E. அவை பொதுமைக் குழியம் கொண்டவை.

54. மனித கபச்சுரப்பி ஓமோன் தொடர்பாக சரியானவை,
   A. GHRIH, PIH என்பவை கபச்சுரப்பியில் தொழிற்படும்.
   B. இடைச்சோனை ஓமோன் சுரப்பதில்லை.
   C. பிற்சோனை ADH தொகுத்து சேமித்து வெளிவிடும்.
   D. GnRH முற்பக்க சோனையில் சுரக்கப்படும்.
   E. Oxytocin பிற்பக்க சோனையால் சுரக்கப்படுவதில்லை.

55. வைரசுக்கள் தொடர்பாக பிழையானது எவை?
   A. எல்லா வைரசுக்களும் கட்டுப்பட்ட ஒட்டுண்ணியாகும்.
   B. எல்லா வைரசுக்களும் RNA மட்டும் கொண்டவையாகும்.
   C. எல்லா வைரசுக்கும் விருந்து வழங்கியில் இனம் பெருகும்.
   D. எல்லா வைரசுக்கும் அனுசேபத் தொழில் ஆற்றமாட்டாது.
   E. பற்றீரியம் விழுங்கி சுயாதீனமாக இனப்பெருக்கம்.

56. மனிதனின் பரிவு நரம்புத்தொகுதி ஏவல் பற்றி பிழையானது,
   A. கண்மணியை ஒடுக்குகின்றது.
   B. கண்ணீர் உற்பத்தியை தூண்டுகிறது.
   C. இதய வடிப்பின் வீதத்தை அதிகரிக்கச் செய்யும்.
   D. சுற்றுச்சுருக்கை மந்தமாக்குகின்றது.
   E. சுவாசக் குழாயை விரிவாக்கும்.

57. பின்வரும் அங்கிகளில் இரசாயன தற்போசணி எது?
   A. Anabaena B. Chlamydomonas C. Nitrobacter
   D. Nitrosomonos E. Aspergillus

58. தொழிற்சாலை கழிவு நீர் பரிகரிப்பு பற்றிய பின்வருவனவற்றில் சரியானது எது?
   A. முதல் பரிகரிப்பில் எல்லா நுண்ணங்கிகளுக்கும் அளிக்கப்படும்.
   B. துணை பரிகரிப்பில் நுண்ணங்கிகளில் செயற்பாடு நடைபெறுவதில்லை.
   C. சுறுசுறுப்பான சேற்று முறையில் இயந்திரத்தில் காற்று சேர்க்கப்படும்.
   D. சிறு தாரையாக வடிய விடுதலில் பாறைப்படுக்கையில் நீர் விசிறப்படும்.
   E. முழுச் செயன் முறையிலும் 25% - 35% சேதனப்பொருள் அகற்றப்படும்.

59. பின்வரும் பீடைகளில் எது Lepidoptera வுக்குரியது,
   A. கபிலத்தத்தி. B. தென்னோலை சுரங்கமறுப்பான்.
   C. மஞ்சள் தண்டு கோதி. D. தென்னை மயிர்க்கொட்டி.
   E. கருவண்டு.

60. விகாரங்கள் தொடர்பான பின்வரும் கூற்றுக்களில் சரியானவை,
   A. பெரும்பாலான விகாரங்கள் பின்னிடைவாக தோற்றம் பெறுகின்றன.
   B. DNA இன் நைதரசன் மூலத்தின் மாற்றத்தால் விகாரம் உண்டாகலாம்.
   C. விகாரங்களை X கதிர்களால் ஏற்படுத்த முடியாது.
   D. கலத்தில் நிறமூர்த்த மொத்த எண்ணிக்கையில் ஏற்படும் மாற்றம் விகாரத்தை உண்டு
   E. ஒடுக்கற் பிரிவு நிகழ்வால் ஒரு போதும் விகாரம் ஏற்பட முடியாது.

(நிறைவுற்றது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் ஆலய

## தேர்த் திருவிழாச் சிறப்பு மலர் - 26.05.2010



### இன்றைய நாள் பொன்னான நாள்

இசை வளமும், கலைவளமும் ஒருங்கே சிறந்து விளங்கும் அள வையம் பதியிலே சரித்திரப் புகழ்பெற்று அற்புதங்கள் நிறைந்து விளங்கும் வினைகளைத் தீர்க்கும் விநாயகப் பெருமான் இன்று தேரேறி வருகின்றார். அழுது, தொழுது நிற்கும் அடியார்களின் அல்லல் களைந்து, இன்னல் போக்கி, துன்பம் துடைக்கும் கும்பழாவளையான் சித்திரத்தேரிலே பக்தர்களுக்கு அருட்காட்சி அளிக்கின்றார்.

இன்றைய தேர்த்திருவிழா ஒரு பொன்னான நன்னாள். மஹோற்சவத்திலே ரதோற்சவம் அழித்தலைக் குறிப்பதாகும். ஆகவே எம்பெருமான் அகந்தையை அழித்து அசுரத்தன்த்தை ஒடுக்கி ஆணவத்தை அடக்கி வினைகள் தீர்ப்பவனாக தேரேறிப் புறப்பட்டு விட்டார். தேரேறிச் சிங்காரப் பவனி வரும் சிங்காரக் காட்சி சிந்தையைக் குளிரவைக்கும் சிறந்ததொரு காட்சியாகும். விநாயகப் பெருமான் அழகிய தேரிலே ஆரோகணித்து வரும் காட்சி பக்திபூர்வமானது. ''நம்பினார் கெடுவதில்லை நான்கு மறைத் தீர்ப்பு'' என்றபடி அருளை அள்ளிச் சொரியும் அற் புத ஆலயம் கும்பழாவளைப் பிள்ளையார் ஆலயம் ஆகும். இனிமேல் நல்லதே நடக்கப் போகிறது தீயவை அழியப் போகின்றன. அவனது எல்லையில்லா பேர ருட் கருணை பக்தர் குழாமுக்கு கிடைக்க வேண்டுமென்று அவருடைய பாதார விந்தங்களைப் பணிந்து உளமாரப் பிரார்த்தித்து வாழ்த்தி, போற்றி துதித்து நல் லாசிகளை வழங்குகின்றேன்.

ம.பத்மநாதன், தர்மகர்த்தா சபைத் தலைவர்.

### ஆசியுரை

ஆலயங்கள் சிவாகமங்களில் சொல லப்பட்டவாறே அமைக்கப்பெற்று விளங்குகின்றன. அங்கே நடைபெறு கின்ற கிரியைகள், உற்சவங்கள் அனைத் தும் ஆகம விதிப்படியே நடைபெற வேண்டும். ஐந்து நாள்களுக்கு மேல் விரிவாகச் செய்யப்படும் உற்சவங்கள் மஹோற்சவம் என அழைக்கப்படும். ஆண்டுக்கு ஒரு முறை நிகழும் விரி வான தொரு மஹோற்சவம் ப்ரம்மோற் ஸவம் எனப்படும். உற்சவம் என்பதன் விளக்கம்

உத்-சப்தபாஷிதம் } உத்ஸவம்
ஸவம்- ஸிருஷ்டி }

எனவே உற்சவம் என்பது சிருஷ்டி யைக் குறிக்கும். இது பஞ்சகிருத்தியங் களில் ஒன்றாகும். காமிக ஆகமப்படி உற்சவம் என்பது வருஷ யாகம் தொடங்கி பக்தோற்ஸவம் வரை பதினெட்டு அங்கங்களைக் கொண்டது.

ஆலயம் என்றாலே அது ஆன்மா வசப்படுகின்ற இடம் என்பது பொருள். அருள்மிக ஸ்ரீசந்திரசேகர ஹேரம்ப மஹா கணபதியாக வீற்றிருக்கக் கூடிய கும் பழாவளை எம்பெருமான் அளவெட்டி யில் வீற்றிருந்து சகல மக்களை அவர் தம் ஆன்மாக்களையும் தன்வசப்படுத்தி யுள்ளார். அவர்களுக்கு கணபதியாக இருந்து அருள்மழை பொழிகின்றார். அவர் களின் தலைவனாக வீற்றிருக்கிறார்.

கண+பதி=கணபதி

கணம் என்றால் கூட்டம் என்பது பொருள். பதி என்றால் தலைவன். கூட்டத் தின் தலைவன். எனவே அளவைவாழ் மக்கள் மிகச் சிறப்பாக இந்த மஹோற் சவத்தை அவனருளாலே அவன்தாள் வணங்கி நடத்திக் கொண்டிருக்கிறார் கள். இங்கே பதினொரு நாள்கள் உற் சவம் நடைபெறுகிறது. காரண ஆகமப்படி பதி னொருநாள் உற்சவத்தின் பலன் புத்தி ஆகும்.



இன்று ரதோற்சவம் வெகு சிறப்பாக நடைபெறு கிறது. இது சம்ஹா ரத்தைக் குறிக்கும். அதாவது ஆணவ குணத்தை சம்ஹாரம் புரியும் விக்னக் ருது விக்ஹருது இதி விக்னேஸ்வரஹ; இடர்களைத் தருபவனும் அவனே. அதனை பின் நீக்குபவனும் அவனே. எனவே எல்லாம் வல்ல எம்பெருமான் கும் பழாவளை ஸ்ரீசந்திரசேகரஹேரம்ப மஹா கணபதி உங்கள் அனைவரையும் ரக்ஷிப்பா ராக.

''சர்வே ஜனாஹா சுகினோ பவந்து''

ஸ்ரீலஸ்ரீ விஸ்வேஸ்வர சிவாச்சாரியார்,
ஆலய பிரதம சிவாச்சாரியார்.

### ஆலயத் தல மகிமையும் வரலாறும்

"வாழ்வதுஞ் சிற்பகலாய்வதுஞ் சிற்சில வாட் டும்பிணி.
ஆழ்வதுன் துன்பக்கடல் என்று நைந்தனனாகி நின்னைத்
தாழ்வது வேண்டிற் நடுத்தருள் வாயெனத்தாவி வந்தேன்
ஆழ்வது வேண்டு மருட் கும்பழாவளை யங்குசனே''

ஈழமண்டலத்தின் வடபாகமாய் உள்ள யாழ்ப்பாணப் பகுதியைச் சேர்ந்த அளவை மா மத்தியஸ் தலமாயுள்ள கும்பழாவளைப்பகுதியில் எழுந்தருளியிருக்கும் விக்னேஸ்வர ஆலய வரலாற்றை மெய்யடியார்களின் பக்தி வளர்ச்சியின் பொருட்டு காலங்கண்ட முதியோர்கள் வாய்கேட்டறிந்தபடி வரலாற்றினை எழுதுவதில் பெருமையடைகிறேன்.

பூர்வீகத்திலே மாருதப்புரவீக வல்லி என்னும் பெய ருடைய சோழவரசியளங்கன்னிகை குதிரை முகம் உடையவளாய் குஷ்டரோக நோய்வாய்ப்பட்டமையால் அக்குதிரை முகமும் குஷ்டரோகமும் நீங்குவதற்கு பற்பல சிகிச்சைகளும் தெய்வ வழிபாடும் செய்தும் தீராமைகண்டு மனம் நொந்து தவசிரேஷ்டர் ஒருவரின் வாக்குப்படி யாழ்ப்பாணத்தின் வடகரையில் உள்ள கீரிமலை என்னும் புண்ணிய தீர்த்தத்தில் கந்தசுவாமி யாரை நினைத்து ஸ்நானம் செய்து ஒரே திசையில் மாவிட்டபுரம் முதலாக தென்திசை நோக்கி ஐந்து கோயிலிலே கந்தசுவாமி விக்கிரக ஸ்தாபனாராதனை செய்யும்படி கூறினார். அதற்கிணங்க ஐந்து கோயில்களை அமைத்தும் தனது நோயும் குதிரை முகமும் பிறர் பார்வைக்கு நீங்கப் பெற்றும் தனது சொந்த நினைவுக்கும் பார்வைக்கும் நீங்கப் பெறாததாக இருந்தது. இதன் காரணத்தை ஆராய்ந்தறிந்த இடத்து கந்தசுவாமி வழிபாட்டுக்கு முன் விக்னேஸ்வர ஆராதனை எனத் தவப்பெரியோர் கூறக் கேட்ட ''குமாரத்தி தன் பிழைக்கும் மனம் நொந்து விக்னேஸ்வரரைத் தியானித்து மெய்யருள் பாலிக்கும் பெருமானே அறியாமையால் செய்த பிழையை மன்னித்து என்மேல் இரக்கம் அருளுக! யான் செய்த பிழைக்குப் பிராயச்சித்தமாக உமது பிரதிரூபத்தை ஏழு ஸ்தலங்களில் பிரதிட்டை செய்து வழிபடுவேன்'' என்று வாக்குறுதி பண்ணிக் கொல்லங்கலட்டி முதலாக தென் திசை நோக்கி ஒரே நிரையில் ஏழு ஸ்தலங்களில் விக்னேஸ்வரப் பிரதிஷ்டை செய்வித்தாள். அத்தலங்களாவன கொல்லங்கலட்டி, வறுத்தலை, அளகொல்லை, கும்பழாவளை, பெருமாக்கடவை ஆலங்குழாய், கல்வளை என்பனவாகும்.

இவைகளுள் மத்திய ஸ்தலமாயுள்ள கும்பழாவளையில் விக்னேஸ்வர அர்ச்சனை முடியவே இராஜகுமாரத்தியின் குதிரைமுகச்சாயை அவளது சொந்தப் பார்வைக்கும் முற்றாய் நீங்கியதா யிற்று. இத்திவ்விய சரித்திர உண்மைஇக்கும் பழாவளையின் முன் னுள்ள சோலைக்கு மாவிழி திட்டி (மா+இழி+திட்டி) எனவும், இத்தலத்தின் தென்கிழக்கு மூலையிலிருக்கின்ற வயல் (இது முன்பு குளமாயிருந்தது) ''குமாரத்தி குளம்'' எனவும் அழைக்கப்பட்டது. குதிரைமுகம் நீங்கிய பின் கும்பழாவளைக்கு அடுத்ததாக ஸ்தாபித்த தென்தலத்துக்குப் ''பெருமாக்கடவை'' எனவும் அழைக்கபட்டது.

இந்த அரசிளங்கன்னிகைக்கு அனுக்கிரகித்தது மாத்திரமன்றி கும்பழாவளை விக்னேஸ் வரப் பெருமான் மெய்யடியார்களுக்கு அருள் பொழிந்து வினைகள் தீர்த்து செய்த அற்புதங் கள் எத்தனையோ உள. அவைகள் ஒவ் வொன்றையும் எடுத்துக் கூறுவோமாயின் எண்ணிலடங்கா. இந்த அற்புதங்கள் யாவற்றையும் பல புலவர்கள் கும்பழாவளை விநாயகர் தோத்திரத்திரட்டு என்னும் நூலில் அச்சேற்றுவித்து பேணிப் பாதுகாக்கப்பட்டுள்ளது என்பதைக் கூறி வைக்க விரும்புகிறோம்.

தர்மகர்த்தா சபையினர்.


கணனி அச்சு, லெமினேற்றிங், போட்டோகொப்பி, சகல சிம் காட்விற்பனையாளர், யாழ்.கொழும்பு சொகுசுவாகனசேவை
**கஜமுகன்**
பல்பொருள் விற்பனை நிலையம்
பிரதான வீதி, அளவெட்டி.
தொ.பே:021 2240155,021 2240312.

**றமணன் VIDEO சென்ரர்**
VIDEO எடிற்றிங்,
வெளிப்புற
படப்பிடிப்புக்கள்.
பிரதான வீதி,
அளவெட்டி.

உணவு சிற்றுண்டி வகைகள், குளிர்பான வகைகள் அனைத்தையும் பெற்றுக்கொள்ள
**விநாயகர் சைவ உணவகம்**
கூட்டுறவாளர் வீதி,
அளவெட்டி.

ஐஸ்கிறீம் வகைகள், குளிர்பானங்கள் அனைத்தையும் ஒடருக்குப் பெற்றுக்கொள்ள
**ஸ்ரீ காளி**
கிறீம் ஹவுஸ்
கட்டுவன் றோட்,
மல்லாகம்.

சகலவிதமான தொலைபேசி மீள்நிரப்பு அட்டைகளும் பெற்றுக்கொள்ள
**விமல் போட்டோ அன் வீடியோ**
அல்பம் வடிவமைப்பாளர்கள்
அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.
தொ.பே:0776305183, 0213218042.

**அம்பாள் ஸ்ரோர்ஸ்**
பல்பொருள் வாணிபம்
[illegible]

உள்நாட்டு வெளிநாட்டு இன்ரநெற் - பக்ஸ் போட்டோ பிரதிகள் அனைத்துக்கும் அத்துடன் கிறைண்டிங் மில்சேவை
**சுகப் பிரதா**
தொலைத் தொடர்பு சேவை
கும்பழாவளை வீதி, அளவெட்டி
தொ.பே: 021 321 3322, 0213219808.

**விநாயகர்**
தொலைத் தொடர்பகம்
யாழ்.கொழும்பு
உள்ளூர் வான்சேவை
தொ.பே: 021 2240204, 0777174162.
அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.

**தனலக்சுமி களஞ்சியம் & லக்சனா பான்சி கவுஸ்**
பல்பொருள் வாணிபம்
கூட்டுறவாளர் வீதி, அளவெட்டி மத்தி.

ஐஸ்கிறீம் வகைகள், குளிர்பானங்கள் அனைத்தையும் பெற்றுக்கொள்ள
**அம்பிகா**
கிறீம் ஹவுஸ்
மலைவேம்படி,
அளவெட்டி மேற்கு,அளவெட்டி.

**கபிலா**
நகைத் தொழிலகம்.
சங்கானை வீதி,
மாகியப்பிட்டி, அளவெட்டி.

**சிவதயா றேடர்ஸ்**
சங்கானை வீதி, அளவெட்டி.

**பாசுசன் ஸ்ரோர்ஸ்**
புதினப்பத்திரிகை முகவர்
தபால்கந்தோரடி, சண்டிலிப்பாய் வடக்கு.

**விநாயகர்**
களஞ்சியம் அன்
தொலைத் தொடர்பு சேவை
கூட்டுறவாளர் வீதி,
அளவெட்டி.

**கதிர்காமசிங்கம் அன் சன்**
பல்பொருள் அழகு
சாதனப்பொருள்கள்
விற்பனையாளர்
அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.

சுத்தமான பால், தயிர், நெய், கேக் வகைகள், ஓடருக்குப் பெற்றுக்கொள்ள
**ஜனா பாம்**
இல.7, மத்திய சந்தை,
மல்லாகம்.

**ரூபன்**
பல்பொருள் வாணிபம்
K.R
நிரு மெடிக்கல் கிளினிக்
தினமும் M.B.B.S. டாக்டர்களினால்
4.30-7.00 pm வரை நோயாளர்களைப்
பார்வையிடுவார்கள்.
அளவெட்டி.

**பிள்ளையார் களஞ்சியம்**
பல்பொருள் வாணிபம்
கும்பழாவளை வீதி, அளவெட்டி.

**கோகுலன்**
பந்தல் சேவை
சங்கானை வீதி, அளவெட்டி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன வசதிகளுடன் செயற்கை கை

அதிகரிக்கும் விபத்துகளால் ஏராளமானவர்கள் உடல் உறுப்புகளை இழக்கிறார்கள். வேறுசில பயங்கர வியாதிகளாலும் உடல் உறுப்புகள் செயலிழக்கலாம். இதுபோல திடீர் சம்பவங்களால் கை, கால்களை இழந்தவர்கள் வாழ்வே திசைமாறிவிடும்.

செயற்கை கை, கால்கள் பொருத்திக் கொள்ளும் வசதி இருக்கிறது. ஆனாலும் அவை இயற்கையான கை, கால்கள்போல செயற்படாது. பெயரளவில் ஒரு அங்கமாகவே இருக்கும்.

இந்தக் குறையைக் களைந்து விபத்தில் கைகளை இழந்தவர்களுக்கு மீண்டும் மறுவாழ்வு அளிக்கும் விதத்தில் நவீன வசதிகள் நிறைந்த செயற்கை கை உருவாக்கப்பட்டுள்ளது. இதுவரை உள்ள மற்ற செயற்கைக் கைகளைவிட இது கொஞ்சம் நவீனமானது. குறிப்பாக புளூடூத் தொழில்நுட்பம் முலமாக செயற்படக்கூடியது. இதன் உதவியால் எந்த விதமான பொருள்களையும் இயற்கைக் கைகளைப் போலவே பற்றிப்பிடித்து தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள முடியும். ஐந்து விரல்களையும் தனித்தனியாக இயல்பான விரல்கள்போல இயக்க முடியும். இதன் உதவியுடன் 90 கிலோ எடையைக் கையாள முடியும் என்பது இதன் தனிச்சிறப்பு.



ஸ்கொட்லாந்தைச் சேர்ந்த டச் பயோனிக்ஸ் நிறுவனம் இந்த செயற்கை கையை வடிவமைத்துள்ளது. இதற்கு லிம்ப் ஹேண்ட் என்று பெயரிடப்பட்டுள்ளது. 2007 ஆம் ஆண்டே வடிவமைக்கப்பட்ட இந்த செயற்கை கை தற்போது விற்பனைக்கு வந்துள்ளது. விபத்தில் கையை இழந்த தீயணைப்பு வீரர் ஐயன் ரெய்டு என்பவருக்கு இந்த செயற்கைக் கை முதன் முறையாக பொருத்தப்பட்டது. கை துண்டிக்கப்பட்டதால் இழந்த உணர்வுகளை மீண்டும் பெற்றிருப்பதாகவும், அனைத்து வேலைகளையும் தடையின்றிச் செய்ய முடிவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அங்கவீனம் அடைந்தவர்களுக்கு அளவற்ற பயன்தரக் கூடியது இந்தசெயற்கைக் கை!

றஜி, குடாரியன்.



# சாண எரிவாயுவில் ஓடும் ரெயில்

வேகமாக தீர்ந்து வரும் பெட்ரோல், டீசல் மாற்று எரிபொருள் தேவையை அதிகரித்திருக்கிறது. இதன் எதிரொலியாக காட்டாமணக்கில் இருந்து பயோடீசல் உட்பட பலவிதமான மாற்று எரிபொருள்கள் தயாரிக்கப்பட்டு பயன்படுத்தப்படுகிறது. இதில் ஒரு முன்னோடி நிகழ்வாக மாட்டுச் சாண எரிவாயுவைக் கொண்டு முதல் முதலாக ரெயில் இயக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவில் உள்ள ஒக்லகோமா - போர்ட் வொர்த் நகரங்களுக்கு இடையே இந்த ரெயில் இயக்கப்படுகிறது. ஒரு ஆண்டு காலத்துக்கு பயணிகள் ரெயிலாக இயக்க திட்டமிடப்பட்டுள்ள அந்த ரெயில் சமீபத்தில் சோதனை ஓட்டமாக விடப்பட்டது. முதற்கட்ட ஆய்வில் 20 சதவீத எரிவாயுவும் 80 சதவீத டீசலும் சேர்த்து இயக்கிப் பார்க்கப்பட்டது. அதன்பிறகு அதிகப்படியான எரிவாயு சேர்த்து தற்போது ரெயில் சோதனை ஓட்டம் நடத்தப்பட்டுள்ளது. இந்த ரெயிலுக்கு 'ஹார்ட்லேண்ட் பிளையர்' என்று பெயரிடப்பட்டுள்ளது. பொதுவாக உயிரி எரிபொருளைப் பயன்படுத்தும்போது என்ஜினுக்குள் அழுத்தம் அதிகரித்து பாதிப்புகள் ஏற்படும். எனவே சில மாற்றங்களுடன் இந்த என்ஜின் தயாரிக்கப்பட்டு உள்ளது. தேசிய அளவில் முதல் முதலாக சாண எரிவாயுவில் இயங்கும் வகையில் ரெயில் விடப்பட்டுள்ளது என்று அங்குள்ள ரெயில்வே துறை தெரிவித்துள்ளது.



# டயனோசரஸ் அழிவுக்கு புதுக்காரணம்



உருவத்தில் பெரிய, ராட்சத விலங்கினம் டைனோசரஸ். பல லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு வசித்த இந்த விலங்கு இனம் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டது. இதற்கு காரணம் விண்வெளியில் இருந்து பூமியில் விழுந்த விண்கற்கள் என்று கூறப்பட்டது

இந்த நிலையில், டைனோசரஸ் அழிவுக்குக் காரணம் விண்கற்கள் அல்ல என்று தெரியவந்துள்ளது. பூமியில் ஏற்பட்ட தட்ப வெப்ப மாறுதல்கள் காரணமாகவே டைனோசரஸ்கள் அழிந்தன என்கிறார்கள்.

நோர்வே நாட்டில் உள்ள ஸ்வெல்பார்டு என்ற இடத்தில் சமீபத்தில் டைனோசரஸ் புதைபடிமங்கள் கிடைத்தன. இந்த படிமங்களை டாக்டர் கிரிகோரி பரைஸ் தலைமையிலான குழு ஆய்வு செய்தது. அப்போது தான் டயனோசரஸ் அழிவுக்கு தட்ப வெப்ப மாற்றம்தான் காரணம் என்பது தெரியவந்தது.

சுமார் 13 கோடி ஆண்டுகளுக்கு முன்பு பூமியின் தட்ப வெப்ப நிலையில் பெரிய அளவில் மாற்றங்கள் ஏற்பட்டது. இந்த மாற்றம் படிப்படியாக உருவானது. பூமி சூடாவது நாளுக்கு நாள் அதிகரித்துவருகிறது என்று நாம் இப்போது கூறுவது போன்ற நிலை அப்போது காணப்பட்டது. இதன்காரணமாக வட துருவத்தில் பனிமலைகள் உருகி அதன் குளிர்ந்த தண்ணீர் கடலில் கலப்பது அதிகரித்தது.

இதைத்தொடர்ந்து கடலில் வெப்பம் வெகுவாக குறைந்தது. 4 டிகிரி செல்சியஸ் முதல் 13 டிகிரி செல்சியஸ் வரை வெப்பம் குறைந்ததால் கடலில் மட்டுமின்றி பூமியிலும் வெப்ப மாறுதல்கள் உருவானது. இதனால் கடல் மற்றும் பூமியில் வாழ்ந்த உயிரினங்கள் பாதிக்கப்பட்டு உயிரிழந்தன. இப்படித்தான் டைனோசரஸ் இனமே அழிந்தது. இந்த அழிவும் ஒரேநாளில் நடக்கவில்லை. படிப்படியாக அழிவு தொடர்ந்து முற்றிலும் அந்த இனமே இல்லாமல் போய்விட்டது.

இதுஎல்லாவற்றையும்விட டாக்டர் கிரிகோரி இன்னொன்றையும் சொல்லி மிரட்டுகிறார். அது-

டைனோசரஸ் அழிவு தொடங்கும்போது எந்த மாதிரியான தட்ப வெப்ப சூழ்நிலை இருந்ததோ, அதுபோன்ற ஒரு நிலை இப்போது தொடங்கி உள்ளது. இந்த நிலை நீடிக்கும்போது பல லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்டது போன்ற ஒரு அழிவை மனித இனம் சந்திக்க வேண்டியிருக்கும்.

# பாதை மாறும் பயணங்கள்

நாங்கள்
வாழ்வின்
சக்கரங்களில்
வறுமையாய்
ஒட்டிப்போன
சகதிகள்
***
சுட்டெரிக்கும் வெயில்
சுடு புழுதிக் காற்று
வெட்ட வெளிகள்
ஒவ்வொன்றும்
எங்களிடம்
ஒன்றிவிட்ட
ஒவ்வாமைகள்
***
கண்ணீர் செந்நீர்
வியர்வை .... எல்லாமே
உறைந்து போகின்றன
எங்கள் மடிகளில்
மரணங்களாக...
***
அமாவாசைகள்
அர்த்தமில்லாமல்
போனதால்
எங்கள் கண்ணீரே
விடிவிளக்காகிப் போனது
***
உறக்கம் தொலைந்து
போக... மீண்டும்
கலக்கம்
கறுப்புடைதரித்துக் கொள்ளும்
***
மங்கலம் மறைந்துபோன
சுவடுகளில் அமங்கலம்
கன்னை அடையாளப்
படுத்திக் கொள்ளும்
***
எங்கள் பயணப் பாதைகளில்
இருள் மண்டிக் கிடக்கின்றது
இருந்தும்
பயணிக்கின்றோம்
பயணத்தின்...
திசைகளை மாற்றியபடி...

க.நாகேஸ்வரா
சண்டிலிப்பாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோயில்

## தேர்த் திருவிழாச் சிறப்பு மலர் - 26.05.2010



### மஹோற்சவ குருவின் ஆசிச்செய்தி

கலியுக வரதனாகிய வள்ளி தெய்வசேனா சமேத ஸ்ரீ கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி சித்திரத் தேர் ஏறிவரும் இந்நாளில் இந்த புவனத்தில் வாழும் மக்கள் எல்லோரும் சகல சௌபக்கியங்களும் பெற்று நல்வாழ்வு வாழ முருகப்பெருமானை பிரார்த்தித்து எனது



நல் ஆசிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

''ஸர்வே ஜனா சுகினோ பவந்து ஸம்ஸ்த சன் மங்களா பவந்து''

சிவ ஸ்ரீ க.சிவதாசக்குருக்கள்
பிரதமகுரு, ஸ்ரீ கிருபாகர சிவசுப்பிரமணிய கோயில்.



### தேர் ஊர ஊர் ஏறும்

*''அவனருளாலே அவன் தாள் வணங்கி''*

சகல செல்வங்களும் நிறையப் பெற்ற ஈழ மணித்திருநாட்டின் வடபால் அமைந்திருக்கும் யாழ்ப்பாண நல் நகரில் சைவமும் தமிழும் தழைத்தோங்கி வளரும் கொக்குவில் ஊரில் முருகப்பெருமான் வள்ளி தேவசேனா சமேதரராக வீற்றிருந்து அடியவர்களுக்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கும் புதுக் கோயில் என்ற சிவஸ்ரீ கிருபாகர சிவசுப்பிரமணியர் ஆலயம்.

இவ்வாலயம் பழைமையான வரலாற்றைக்கொண்டு விளங்கும் திருத்தலமாகும். அடியார்களின் முயற்சியினால் பொலிவுபெற்று விளங்குவதோடு நித்திய, நைமித்திய வழிபாடுகளும் நடைபெற்று வருகின்றது. ஆலயங்களில் மக்கள் நடத்திவரும் வழிபாடுகளில்குறைகள் ஏற்படும்போது அதனை நிவர்த்தி செய்வதன் நோக்கமாக மஹோற்சவம் நடைபெறுகின்றது. மஹோற்சவம் படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் என்ற பஞ்ச கிருத்தியங்களில் அழித்தல் தொழிலை உணர்த்தி நிற்பது தேர்த் திருவிழாவாகும். இவ்வாலயத்தில் ஆரம்ப காலங்களில் கட்டுத் தேராக இருந்து பின்னர் ஊர்மக்கள் ஒன்றுகூடி சித்திரத் தேரை அமைத்துக் கொண்டனர்.

சூரிய, சந்திரரை சில்லாகவும் நான்கு வேதங்களை குதிரையாகவும் பிரம்மனை சாரதியாகவும் கொண்டு சித்திரத் தேர் அமைந்துள்ளது. இத்தேரினை அடியவர்கள் ஒன்று கூடி வடம் பற்றி இழுக்கும் காட்சி அற்புதமானது. ஒன்று கூடின் உண்டு வாழ்வு என்ற கூற்றினை விளங்குவதாக அமைந்திருக்கும் இத்தேர்த் திருவிழாவில் கல்லூரியும் பங்கு கொள்வது கல்லூரிச் சமூகம் செய்த பெரும் பாக்கியம். தேரோடும் வீதியில் நாம் தினமும் சஞ்சரிப்பது முருகப்பெருமானின் கருணை என்றே கூறலாம். கிருபாகர சிவசுப்பிரமணியர் வள்ளி, தெய்வானை சமேதரராகத் தேரில் அமர்ந்து வரும் காட்சி அற்புதமானது. ஆடி அசைந்து மணிகள் ஒலியெழுப்ப முருகனின் திவ்விய தரிசனத்தை ''செங்கோடனை கண்டு தொழ நாலாயிரம் கண் படைத்திலனே அந்தநான்முகனே'' என்று அருணகிரியர் வேண்டுவது போல அழகும் இளமையும் பொங்க முருகப்பெருமான் வரும் ரதம் தனித்துவமானது. வெவ்வினையை வேரறுக்க வல்ல முருகப் பெருமான் ரதத்திலே வீற்றிருந்து அனைத்து அடியவர்களுக்கும் அருள்புரிய வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

*''மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்''*

*திரு.அ.அகிலதாஸ், அதிபர், கொக்குவில் இந்துக்கல்லூரி.*

**ஹரிணி**
இன்ரநெற் கபே
*Harini Internet Cafe*
Browsing, Video Calls, Printing, Scaning.
*K.K.S. Road, Kokuvil Junction.*

**சீலன் அலுமினிய பிற்றிங்**
*Seelan Aluminium Fitting*
DOHA, DUBAI இல்10 வருட அனுபவமுள்ளவர்...
*No: 54, K.K.S. Road, Kokuvil Junction.*
Tel:021 4902561, 0778050918, 0789119220.

**எரிக்கனேஷ்**
மூக்குக் கண்ணாடி அகமும் பல் கட்டுமிடமும்
554, 566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P: 2486
கிளைகள்: பழைய பொலிஸ் நிலையம் முன்பாக, இல.80, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம். இல. 91, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி, கொக்குவில்.

**எவன் ஸ்ருடியோ அன் வீடியோ படப் பிடிப்பாளரும், ஆனந்தா பிறிண்டேஸ் அச்சுப் பதிப்பகம், ஆனந்தா படமாடம்.**
அனைத்து நிகழ்வுகளுக்கும் திருமண, பூப்புனித நீராட்டு விழா காட்சிகள் விரும்பிய டிசைன்களில் செய்துகொடுக்கப்படும்.
கே.கே.எஸ்.வீதி, கொக்குவில்.

**Techno Park**
இந்தியா உட்பட ஐரோப்பிய நாடுகளுக்கு 3/= முகம்பார்த்துக் கதைப்பதற்கு 50/= மட்டுமே
கே.கே.எஸ். றோட், கொக்குவில்.
T.திலீபன்

மங்களகரமான நிகழ்வுகளை உங்கள் எண்ணம் போல் செய்திட
**திருமுருகன் திருமண மண்டபமும் கதிரைகளும் பல்பொருள் அங்காடியும்**
தொ.பே: 0217201523,0776660211
கரந்தன் வீதி, நீர்வேலி.

உள்ளூர், வெளியூர் தொலைத் தொடர்புகள், இன்ரநெற்கபே வசதிகள், போட்டோ பிரதிகள் யாவும் ஒருங்கே பெற்றுக்கொள்ள
**கணேசன்**
தொலைத் தொடர்பகம்
கிருபாகர சுப்பிரமணிய கோயிலடி
கே.கே.எஸ்.றோட், கொக்குவில்.

**பரணி**
**கிறீம் ஹவுஸ்**
பூந்திலட்டு, கேக் வகைகள், சிற்றுண்டி உணவு வகைகள், பீடா என்பன ஓடருக்குப் பெற்றுக்கொள்ளலாம்.
கே.கே.எஸ்.றோட், கொக்குவில் சந்தி, கொக்குவில்.

**சண்ஜெ**
**உணவகம்**
கொக்குவில் சந்தி, கொக்குவில்.
414, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**Works & Study in UK**
துரித கதியில் Student Visa பெறுவதற்கான வழி காட்டல், College & Universites அனுமதி (Cas Letter) பெற்றுக்கொடுத்தல், Form fill up செய்தல், Financial Sponsor Ship செய்தல் மற்றும் (Free English Classes)
தொடர்பு: 0779218444, 0113042949

**வீடு விற்பனைக்கு**
சுன்னாகம், ஐயனார் வீதியில் 5 ¾ பரப்பளவில் சுற்று மதிலுடன் கூடிய வீடு விற்பனைக் குண்டு. தொடர்புகளுக்கு 0772936694

**மணமகள் தேவை**
1983ஆம் ஆண்டு பிறந்த, 28 வயது, விசாக நட்சத்திரம், புத்தளம் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்பிக்கும் ஆசிரியருக்கு நடன ஆசிரியத் தொழிலில் உள்ள மணப்பெண் தேவை.
தொடர்புகளுக்கு: திருமதி கருணாகரன், திருப்பதி ஆச்சிரமம், பெரியபுல வளவு, புகையிரத வீதி, தெல்லிப்பழை கிழக்கு, தெல்லிப்பழை. தொ.பே. 0774711873

**யா/தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயம்**
**பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம்**

காலம் : 28.05.2010 வெள்ளிக்கிழமை
நேரம் : மு.ப. 10 மணி
இடம் : பாடசாலை மண்டபம்

பழைய மாணவர் சங்கத்தில் உறுப்பினர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டு புதிய நிர்வாகக் குழு தெரிவு செய்யப் பட இருப்பதால் பழைய மாணவர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளவும்.

- செயலாளர்

(96616)

## கொவிசெத

உத்தியோகப்பூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 756
சீட்டிழுப்பு திகதி 24.05.2010

எழுத்து: E
வெற்றி இலக்கங்கள்: 14 58 60 61

| | பொருத்தங்கள் | பரிசுத்தொகை | வெல்லப்பட்டோர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில வழுத்துடன் 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 17,267,261.60 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000,000/= | 02 |
| 2ம் பரிசு | ஆங்கில வழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 20,000/= | 08 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000/= | 286 |
| 4ம் பரிசு | ஆங்கில வழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000/= | 532 |
| 5ம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 50/= | 13299 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் ஒரு இலக்கம் சரியாயின் | ரூ. 40/= | 7570 |
| 7ம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20/= | 189430 |
| 8ம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20/= | 29851 |

இம்முறை வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 10,617,370.00

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூபா. 17,267,261.60

வெற்றிப் பெறும் சீட்டுகள் மோதங்களுக்குள் மட்டுமே செல்லுப்படியாகும். ஐந்து இலட்சமோ இதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவுதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

**தேசிய லொத்தர் சபை**
234/ 2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர தேவைக்கு: 2473360
இணையதளம்: www.nlb.lk

### வாழைக்குலை சங்கத்துக்கு ஐ.நா. லொறி அன்பளிப்பு

கோப்பாய்,மே 26

வலி.கிழக்கு வாழைக்குலை உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச் சங்கத்தின் செயற்பாட்டிற்கென ஐ.நா. அபிவிருத்தித் திட்ட அமைப்பின் அனுசரணையில் வழங்கப்பட்ட பார ஊர்தி சீரமைக்கும் பணி பூர்த்தியடைந்துள்ளது.

இதன் மூலம் விரைவில் இந்தப் பாரஊர்தி மூலம் வாழைக்குலைகளை சங்கத்தினர் நேரடியாக பல்வேறு பகுதிகளிற்கும் சந்தைப்படுத்தும்வாய்ப்புகிடைக்கவுள்ளது.

இப்பாரஊர்தி 2006இல் மேற்படி சங்கத்திற்கு வழங்கப்பட்டபோதும் அப்போது ஏற்பட்ட யுத்த அனர்த்தத்தினால் வவுனியா பிரதேசத்தில் தரித்து நின்றமை குறிப்பிடத்தக்கது (172)

### நீங்காத நினைவில்
## 20ஆம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வி
**நர்மதா கனகரட்ணராஜா**
(நடன ஆசிரியை, யா/மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை)
திதி: சதுர்த்தசி (26.05.2010)

மலர்வு: 26.03.1964 (மண்ணில் அறிமுகம்)
உதிர்வு: 07.06.1990 (தெய்வத்துள் சங்கமம்)

எங்கள் அன்பின் திருவுருவே! பாசதீபமே!
ஆசையின் மணிவிளக்கே! பாசத்தின் பிறப்பிடமே!
குடும்பத்தின் ஒளிவிளக்கே! எங்கள் குடும்பத்தில்
முதல் சொத்தாக பிறந்த முத்தான முத்தே!
எம்மை எல்லாம் ஆறாத்துயரில் விட்டுவிட்டு
மீளாத்துயில் கொண்ட எம் அன்புச் செல்வமே!
எத்தனையோ உறவுகள் இருந்தாலும்
'அம்மா' என்று சொல்ல உன் உயிர்
இல்லையம்மா! ஆண்டுகள் இருபது சென்றாலும்
உன் நினைவுகள் எம் நெஞ்சை விட்டகலாதம்மா!

உன் பிரிவால் துயருறும்:
அம்மா, மாமாமார், மாமிமார், சித்தப்பா, சித்திமார், தம்பிமார், தங்கைமார்.

*சந்தையடி, மானிப்பாய்.* (98584)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவட்ட செயலகத்தின் கூடைப்பந்தாட்டம்;
# யாழ்- நல்லூர் அணிகள் இறுதியாட்டத்தில்!


நல்லூர் பிரதேச ஆண்கள் அணி.


யாழ்.பிரதேச ஆண்கள் அணி.


நல்லூர் பிரதேச பெண்கள் அணி.


யாழ்.பிரதேச பெண்கள் அணி.

யாழ்ப்பாணம்,மே 26

யாழ். மாவட்ட பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையில் நடத்தப்பட்ட கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டங்கள் எதிர் வரும் 31 ஆம் திகதி திங்கட்கிழமை நடை பெறவுள்ளன.

வடமாகாண விளையாட்டுத் திணைக் களத்தின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட செயலகத்தின் விளையாட்டுப்பிரிவு வின் ஏற்பாட்டில் இச்சுற்றுப்போட்டி நடைபெற்று வரு கின்றது.

வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையின் கூடைப்பந்தாட்டத் திடலில் நடைபெறவுள்ள இந்த ஆட்டத்தில் முதலில் இடம்பெறும் பெண்களுக்கான இறுதியாட்டத்தில் யாழ்.பிரதேச செயலக அணியை எதிர்த்து நல்லூர் பிரதேச செயலக அணி மோதவுள்ளது.

தொடர்ந்து நடைபெறும் ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் நல்லூர் பிரதேச செயலக அணியை எதிர்த்து யாழ். பிரதேச செயலக அணி மோதவுள்ளது.

இந்நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (6-23)

## திருகோணமலை கூடைப்பந்தாட்ட அணியை 7 புள்ளிகளால் வென்றது சென்றலைட்ஸ் வி.க.

வலி. வடக்கு,மே 26

யாழ்ப்பாணம் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் திருகோணமலை மாவட்ட கூடைப்பந்தாட்ட தெரிவு அணிக்கும் இடையே நடைபெற்ற கூடைப்பந்தாட்டப் போட்டியில் சென்றலைட்ஸ் விளை யாட்டுக்கழகம் 07 புள்ளிகளால் வெற்றிபெற்றது.




யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட மைதானத்தில் நடைபெற்ற சிநேகபூர்வ ஆட்டத்தில் இரு அணிகளும் மோதின.

இரு அணிகளும் கடுமையாகப் போராடிய போதிலும் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் இறுதிவரை முன்னிலையில் காணப் பட்டது.

ஆட்ட இறுதியில் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் 68:61 புள்ளிகள் என்ற அடிப்படையில் திருகோணமலை மாவட்ட அணியை வெற்றிபெற்றது. (6-23-86)


## நாளைய ஆட்டங்கள்

வலி. வடக்கு,மே 26

ஜொலிஸ்ரார் வெற்றிக் கிண்ணத்திற்காக யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார் விளையாட் டுக் கழகம் ஈ. எஸ். பி. நிறுவனத்தின் ஆதரவுடன் நடத்தும் 30 ஓவர்களுக்கு மட்டுப் படுத்திய கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் நாளை வியாழக்கிழமை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:

காலை 8.30 மணிக்கு இடம்பெறும் காலிறுதி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார் வி.கவை எதிர்த்து வண்ணார் பண்ணை காமாட்சி அம்பாள் வி.க.மோதுகின்றது. பிற்பகல் ஒரு மணிக்கு வடமராட்சி ஈகிள் வி.கவை எதிர்த்து அரியாலை மத்தி வி.க. மோதுகின்றது. (6-86)





யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கு இடையே யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற தடகளப் போட்டியின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

பெண்களுக்கான தடைதாண்டலை முதலாவது படத்திலும், ஆண்களுக்கான குண்டு போடுதலில் பங்குபற்றிய வீரர்களை இரண்டாவது படத்திலும் பெண்களுக்கான 100மீற்றர் ஓட்ட நிகழ்வில் பங்குபற்றிய வீராங்கனைகளை இறுதிப்படத்திலும் காணலாம். (படங்கள்: தமிழினியன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி திரவியம் திருநாவுக்கரசு

தோற்றம் 09★06★1934

மறைவு 26★05★1994

அம்மா உங்களது அன்புமொழி அழகான
புன்சிரிப்பு எம் அகம் தன்னில் என்றும்
நினைவிருக்கும் தாயே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய வெல்வில் முருகனை வேண்டுகிறோம்.

முருகமூர்த்தி வீதி, சங்கானை. (98590) குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு 28★12★1927

மறைவு 26★04★2010

### திருமதி கணேசு சிவஞானம்மா (தவமணி)

திதி: சித்திரை பூர்வபக்க திரயோதசி

அன்னையாய் நீ கிடைப்பதற்கு ஆண்டாண்டு தவம் செய்தோம்
இம்மையில் நீபட்ட கடனுக்கு ஈடு இணை உண்டோ அம்மா
உந்தனுக்கு காலன் வந்தானா என்று ஊராரும் ஏங்கி நிற்க
என்றுமே நீ சொர்க்கத்தில் தான் ஏங்குகின்றோம்
பிள்ளைகள் நாம்

மகீகள் தந்தாய் மாலையிட்டு நாண் பூட்ட
மிதமிஞ்சிய பாசம் வைத்து மீதமாயும் அன்பு தந்தாய்
முற்பிறப்பில் செய்தபலன் மூத்தவளே நீ எமக்கு மாமியானாய்
மென்மையான உன் ஆத்மா மேன்மையுற பிரார்த்திக்கிறோம்
மருமக்கள் நாம்

அன்னையை விட அதிகமாய் பாசம் வைத்த ஆச்சியே
இறுதிவரை உன்னை நினைப்போம் நீ ஈமைவரை பூட்டபாட்டை
உயிர் தந்து உரம் தந்து ஊன் உணவும் ஊட்டிவிட்டு
எங்களுக்காய் நீபட்ட கஷ்டத்துக்கு ஏழு பிறப்பும் உனை மறவோம்
பேரர்களும் பூட்டர்களும் நாம்.

மஞ்சத்தடி, இணுவில். உன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்:
(98715) குடும்பத்தினர்.





### உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 650 திகதி 24-05-2010

வெற்றி எண்கள்

01 31 43 44 C (ஆங்கில எழுத்து)

ஜக்பொட் பரிசு ரூ. 20,438,080/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 20,438,080/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 02 | 400,000/= | 800,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 14 | 2,000/= | 28,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 344 | 1,000/= | 344,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 550 | 1,000/= | 550,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 14108 | 60/= | 846,480/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6551 | 40/= | 262,040/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 166933 | 20/= | 3,338,660/= |
| | | மொத்தம் | ரூ. 6,169,180/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூ.50,000 வீதம் பணப்பரிசுகளை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| நுவரேலியா | 600040928-6-33 |
| மாத்தறை | 600042058-6-01 |
| காலி | 600053734-6-34 |
| அம்பாந்தோட்டை | 600042627-6-31 |
| கேகாலை | 600050439-6-42 |
| திருகோணமலை | 600054468-6-32 |
| பொலன்னறுவை | 600045075-6-43 |
| கொழும்பு | 600050738-6-48 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 6,569,180/=

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்

ரூ. 20,888,590/=

மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2010 மே 31 ஆம் திகதி திங்கட் கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.

வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்


## குளத்தில் மூழ்கிய இளைஞன் ஒரு வாரத்தின் பின் மரணம்

யாழ்ப்பாணம்,மே26

குளத்தில் மூழ்கி மயங்கிய நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த இளைஞன் சிகிச்சை பயனின்றி கடந்த சனிக்கிழமை மரணமானார்.

கடந்த வாரம் மீசாலைப் பகுதிக் குளத்தில் குளிக்கச் சென்றபோது நீரில் மூழ்கிய போது அவரது நண்பர்களால் காப்பாற்றப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

ஒரு வாரத்தின் பின்னர் சிகிச்சை பயனின்றி மரணமானதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மீசாலை தெற்கைச் சேர்ந்த செல்வராசா நோயல் ரொகான் (வயது 22) என்னும் இளைஞரே மரணமானவராவார். (1-207)

## பேக்கரி பணியாளர்களுக்கு விசேட பயிற்சி

யாழ்ப்பாணம், மே 26

யாழ். மாவட்ட பேக்கறிகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு தரமிகு உணவுப் பொருள்கள் தயாரித்தல் தொடர்பான பயிற்சி வகுப்புகள் விரைவில் நடத்தப்படவுள்ளன.

பயிற்சி வகுப்பில் பங்குபற்ற விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் யாழ். செயலகத்தினால் கோரப்பட்டுள்ளன.

சுற்றுலாத்துறை அமைச்சினால் நடத்தப்படவுள்ள இப்பயிற்சி நெறியில் பங்குபற்ற விரும்புவோர் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தினை இன்று புதன்கிழமை தத்தமது பிரதேச செயலகத்தில் கையளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (1-207)

## செயலகங்களுக்கிடையிலான சுற்றுப்போட்டி ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மே 26

யாழ். மாவட்ட செயலகங்களுக்கு இடையில் நாளை வியாழக்கிழமை ஆரம்பமாகவிருந்த உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி பிற்போடப்பட்டுள்ளது.

சென்.ஜோன்ஸ் கல்லூரியில் நாளை ஆரம்பமாகவுள்ள ஐக்கியப்படுத்தல் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் கலந்து கொள்ளவுள்ள வீரர்களின் நன்மைகருதி இந்தச் சுற்றுப்போட்டி பிற்போடப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட விளையாட்டுத் துறை அதிகாரி திருமதி றூபசிங்கம் தெரிவித்துள்ளார். (1-23)

## நுச்சியாத்திலிருந்து....

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

இறுதி வரைக்குமாவது தரப்பட்டால்தான் பட்டினி நிலையைத் தவிர்த்து தம்மால் நிமிர முடியும் என்று அந்த மக்களும் கூறுகிறார்கள்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு சென்ற போது அங்குள்ள ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயிலில் திருவிழா நடைபெற்றுக் கொண்டிருந்தது. சிறிலங்கா காவல் துறையின் பாதுகாப்புடன் நூற்றுக்கணக்கான மக்கள் அதில் கலந்து கொண்டிருந்தனர்.

எத்தனை இடர்களுக்கு மத்தியிலும் மீளக்குடியமர்ந்து தமது வாழ்க்கையை தொடங்கும் கடும் முயற்சிகளில் வன்னித் தமிழ் மக்கள் ஈடுபட்டிருக்கிறார்கள்.

இன்னும் ஒரு வருட காலத்திற்குள் உங்கள் வாழ்க்கை நிலையில் கணிசமான உயர்வைக் கொண்டுவருவதற்கான முயற்சிகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஈடுபடும். ஒரு வருடத்திற்குள் பெரிய மாற்றம் வரும். நம்பிக்கையுடன் இருங்கள். நாங்கள் உங்களை ஒருபோதும் கைவிடமாட்டோம் - என அந்த மக்களுக்கு உறுதி அளித்தனர் சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள். (வளரும்)

## தவறிவிட்டது

ஊறணி, காங்கேசன்துறை என்னும் முகவரியிட்ட 921303033 V என்னும் இலக்கம் கொண்ட ஞா.அன்ரனி தர்சிக் என்பவருடைய தேசிய அடையாள அட்டை Science hall வளாகத்தில் தொலைந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ் வரும் தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளவும்.

0776845404

## வேலையாள் தேவை

வடமராட்சியில் அமைந்துள்ள கடைக்கு விற்பனையாளர் உடன் தேவை. பெண் [illegible]

தொடர்பு: 0778806952 (98617)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பரமேஷ்வரி ஜோண்



பலாலி தெற்கு, வயாவிளானைப் பிறப்பிடமாகவும், இல.349,2ஆம் குறுக்குத்தெரு, கூமாங்குளம், வவுனியாவை வசிப்பிடமாகவும் (தற்காலிகம்) கொண்ட பரமேஷ்வரி 22.05.2010 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான யாக்கோபு - அரியமுத்து தம்பதியினரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான திருச்செல்வம் - ஆரோக்கியம் தம்பதியினரின் நேசமிகு மருமகளும், காலஞ்சென்ற ஜோணின் அருமை மனைவியும், காலஞ்சென்ற சாந்தம்மா மற்றும் இராஜேஸ்வரி (ராசம்), கிறிஸ்துராசா (லண்டன்), யோகராணி (கனடா), அருட்சகோதரி·தவராணி (செபமாலை தாசர் சபை, மன்னார்), செலின் (கொழும்பு), பற்றிமா (வைத்தியசாலை, மன்னார்), சந்திரவதனி (ஆசிரியர், காமினி மகாவித்தியாலயம், வவுனியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், அனற்றா ஆன்சலா (சுவிஸ்), எவரெல்டா (வனஜா - கூமாங்குளம்) ஜெராட் கிங்ஸ்லி(கூமாங்குளம்), கனிஸ்டா, வினோதினி(சுவிஸ்), ரெசிற்றா பாமினி (கூமாங்குளம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், யேசுராஜா (சுவிஸ்), ஜெயசீலன் (கூமாங்குளம்), அனஸ்ரா (செட்டிகுளம்), அஜிதன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ஸ்ரெபான், ஜெசிக்கா, லவுரா, லக்ஷா, சுமிர்தா, நிரோசினி ஆகியோரின் அன்புமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.05.2010) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 1.30 மணிக்கு திருப்பலிக்காக கூமாங்குளம் புனித அந்தோனியார் ஆலயத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு நெளுக்குளம் சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.349, 2ஆம் குறுக்குத்தெரு, கூமாங்குளம், வவுனியா (98649)

தகவல் : கிங்ஸ்லி (மகன்) T.P. - 0770409995

### திருமதி நடராஜா அன்னபூரணம்



'அன்னவாசம்', பத்தானை வீதி, தாவடி தெற்கு, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் தற்போது கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா அன்னபூரணம் (24.05.2010) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராஜாவின் (MO, நீர்ப்பாசனத் திணைக்களம் பரந்தன்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சுந்தரம் - ஆச்சிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா - பாக்கியம் தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான நாகரத்தினம், செல்லத்துரை, சிவஞானம் (முன்னாள் அதிபர், முத்துத்தம்பி பாடசாலை) ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் (PWDஓவசியர்) மற்றும் பார்வதி (கனடா), மகேஸ்வரி (முன்னாள் ஆசிரியர், கொக்குவில் இந்துக் கல்லூரி - லண்டன்) அன்பு மைத்துனியும், மனோகரி, நவீனராஜ் (வங்கி உத்தியோகத்தர், கனடா), நகுலராஜ் (முன்னாள் தலைவர், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், உடுவில் பிரிவு), நந்தராஜ் ஆகியோரின் அன்புத் தாயாரும், றமணா (பொறியியலாளர்), சாரதா (வைத்தியர்), சிவாஜினி (செரண்டிவ் விமான நிலைய உத்தியோகத்தர்), சுமதி (பிரதேச செயலகம், காரைநகர்) ஆகியோரின் அன்பு மாமியாரும், துஸ்யந்தி (பல்கலைக்கழக மாணவி, கனடா), நிஷா, நவின்ராஜ், வர்ஷா, திவ்யன், பிரஷாந், கோபிநாத் (பல்கலைக்கழக மாணவர், U.K.) முரளிநாத் (பிரதேச செயலகம், கிளிநொச்சி), கஜநாத் (மாணவர், கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 29.05.2010 சனிக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பத்தானை வீதி, தாவடி தெற்கு, கொக்குவில். தொ.பே. 0213214360 (98708)

தகவல்: சண்முகாதேவி சிவனொளிபாதம் (பெறாமகன்).

### திருமதி நடராசா இரத்தினம் (இராசாத்தி)



கட்டப்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராசா இரத்தினம் நேற்று (25.05.2010) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்வர்களான சுப்பிரமணியம் - பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மகளும், நடராசாவின் பாசமிகு மனைவியும், தங்கரத்தினம், கனகசபை ஆகியோரின் அன்புச் சகோதரியும், பத்மாவதி (கொழும்பு), சோமாவதி (சுவிஸ்), மகேந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், தனபாலசிங்கம் (சுவிஸ்), பரமேஸ்வரன் (சுவிஸ்), இராஜஇராஜேஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும், ஸ்ரீகரன் (ஜேர்மனி), தவநிதி (கொழும்பு), சிந்துஜா (சுவிஸ்), தனுசியா (சுவிஸ்), மதுஷன் (ஜேர்மனி), மிதுனன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.05.2010) புதன்கிழமை காலை 9 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

3 ஆம் கட்டை, கல்வியங்காடு. (98711)

தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ராகுலுக்காக பிரதமர் பதவியை விட்டுக்கொடுப்பதற்குத் தயார்!

## பிரதமர் மன்மோகன் அறிவிப்பு



புதுடில்லி, மே 26

காங்கிரஸ் கட்சி முடிவு செய்தால் ராகுல் காந்திக்காக பிரதமர் பதவியை விட்டுக்கொடுக்க தயாராக இருக்கிறேன் - என்று பிரதமர் மன்மோகன்சிங் கூறினார்.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு 2 ஆவது முறையாக பதவி ஏற்று ஓராண்டு நிறைவுபெற்றதை முன்னிட்டு நேற்றுமுன்தினம் டில்லியில் செய்தியாளர்களுக்கு சிறப்பு பேட்டியளித்தபோதே அவர் இதைத் தெரிவித்தார்.

அப்போது கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளித்து அவர் கூறியவை வருமாறு -

ராகுல்காந்தி மத்திய அமைச்சராவதற்கு எல்லாத் தகுதிகளையும் கொண்டவர். நான் அவரை பலமுறை சந்தித்து அமைச்சரவையில் சேரும்படி கேட்டுக் கொண்டேன். ஆனால் அவர் சாதகமான பதிலை கூறவில்லை.

காங்கிரஸ் கட்சியை இன்னும் வளர்க்க விரும்புகிறார் எனவும், அதனால் இப்போதைக்கு அமைச்சரவையில் சேர விருப்பம் இல்லை என்றும் ராகுல்காந்தி கூறிவிட்டார்.

ஆனால் அவர் எப்போது விரும்பினாலும் அவரை அமைச்சரவையில் சேர்த்துக் கொள்ளத் தயார். அப்போது அவருக்கு உரிய பொறுப்பு வழங்கப்படும்.

எனது பதவிகாலம் 2014 இல் முடிவடைகிறது. எனக்குக் கொடுக்கப்பட்டுள்ள இந்தப் பொறுப்பு (பிரதமர் பதவி) இன்னும் நிறைவேறாமல் பாதியில் இருக்கிறது. இந்தப் பணி முடியும்வரை நான் ஓய்வுபெறும் பேச்சுக்கே இடமில்லை.

அதேசமயம், இந்தப் பொறுப்பை ராகுல் காந்திக்கு விட்டுத்தர தயாரா என்று கேட்கப்படுகிறது. பிரதமர் பொறுப்பை இளைஞர்கள் ஏற்க வேண்டும் என்பது எனது கருத்து.

இதுகுறித்து காங்கிரஸ் கட்சி எப்போது முடிவு செய்தாலும், காங்கிரஸ் கட்சி தேர்வு செய்யும் யாருக்கும் எனது பிரதமர் பதவியை மகிழ்ச்சியுடன் விட்டுத்தர தயாராக இருக்கிறேன்.

சில மத்திய அமைச்சர்கள், சக அமைச்சர்கள் பற்றி வெளியில் கருத்துத் தெரிவிப்பது வருந்தத்தக்கது - என்றார்.

# விலைவாசி உயர்வு, வன்முறையே மத்திய அரசின் ஓராண்டுச் சாதனை

## குற்றச்சாஞ்சாட்டுகிறது பாரதீய ஜனதாக்கட்சி



டில்லி, மே 26

விலைவாசி உயர்வு, அபரிமிதமான லஞ்சம், நக்ஸலைட்டுகளின் வன்முறை ஆகியவையே ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசின் ஓராண்டு கால சாதனை என்று பா.ஜ. கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

காங்கிரஸ் கட்சி தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு 2 ஆவது முறையாக ஆட்சிக்கு வந்து ஓராண்டு நிறைவடைந்துள்ளது. இதுபற்றி செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த பிரதமர் மன்மோகன் சிங் மத்திய அரசின் சாதனைகளை விளக்கி கூறினார்.

ஆனால், ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு எந்தச் சாதனையும் செய்யவில்லை என்று எதிர்க்கட்சியான பா.ஜக. குற்றம் சாட்டியுள்ளது.

விலைவாசி உயர்வு, தீவிரவாதம், நக்ஸலைட் இயக்கம், வேலையில்லா திண்டாட்டம் ஆகியவற்றுக்கு மத்திய அரசின் கொள்கைகளே காரணம் என்றும் அவற்றைக் கண்டித்தும் பா.ஜ.க. டில்லியில் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டம் நடத்தியது.

இதில் கலந்து கொண்டு பேசுகையில், நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ் கூறியவை வருமாறு -

2ஆவது முறையாக ஆட்சி நடத்தும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு, கடந்த ஓராண்டில் சாமானிய மக்களுக்கு ஏமாற்றமும், நம்பிக்கைத் துரோக மும்தான் செய்து இருக்கிறது. கடுமையான விலைவாசி உயர்வு, மத்திய அரசிலும், அதி காரிகள் மட்டத்திலும் நிர்வாகத்தில் மலிந்து விட்ட அபரிமிதமான ஊழல், நக்ஸலைட் டுகளின் மனிதாபிமானமற்ற வன்முறை ஆகியவைதான் அவர்களின் சாதனை.

எதற்காக இந்தக் கொண்டாட்டம் என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. நக் ஸலைட்டுகளின் வன்முறையால் பொது மக்கள் கொல்லப்பட்டதை கொண்டாடு கிறீர்களா? எதற்காக விழா கொண்டாடுகிறீர்கள்?

உண்மையைச் சொல்லப்போனால், ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசின் ஓராண்டு காலத்தையும் கறுப்பு ஆண்டு என்றுதான் குறிப்பிட வேண்டும்-என்றார்.

# எம்.ஜி.ஆர்., சிவாஜி, ரஜினி, கமல் நடித்த படங்களை டி.வி.டியாக வெளியிடத் தடை

## டில்லி நிறுவனத்துக்கு உயர்நீதிமன்று உத்தரவு



சென்னை, மே 26

எம்.ஜி.ஆர், சிவாஜி, ரஜினி காந்த், கமல் ஹாசன் நடித்த 70 சினிமா படங்களை டி.வி.டி., வி.சி.டிகளாக வெளியிடுவதற்கு டில்லி நிறுவனத்துக்கு சென்னை உயர்நீதிமன்று தடை விதித்து உத்தரவிட்டுள்ளது.

சென்னை உயர்நீதிமன்றில் மாடர்ன் டிஜிடெக் மீடியா நிறுவனத்தின் தலைவர் எஸ்.ஜெகநாதன் தாக்கல் செய்த மனுவில் தெரி விக்கப்பட்டிருப் பவை வருமாறு -

பல சினிமா படங்களுக்கு காப்புரிமை பெற்று அவற்றை சி.டி.யாக தயாரித்து வெளியிடுகிறோம். இதனடிப்படையில் எம்.ஜி.ஆர்., சிவாஜி, ரஜினிகாந்த், கமல் ஹாசன், விஜயகாந்த், சிவகுமார், சத்தியராஜ், பாக்கியராஜ், பிரபு, முரளி, தியாகரா ஜன், ஜெய்சங்கர் ஆகியோர் நடித்து வெளியான 70 சினிமா படங்களுக்கான காப்புரிமை எங்களிடம் உள்ளது.

ஆனால் புதிதாக நிறுவப்பட்டுள்ள டில்லியைச் சேர்ந்த மோசர்பியர் இந்தியா லிமிடெட் என்ற நிறுவனம், நாங்கள் உரிமம் பெற்றுள்ள படங்களை டி.வி.டி., வி.சி.டிகளாக தயாரித்து வெளியிடுகின்றனர். எனவே நாங்கள் காப்புரிமை பெற்ற சினிமாக்களை வெளியிட அந்த நிறுவனத்துக்குத் தடை விதிக்க வேண்டும் - என்றுள்ளது.

இந்த மனுவை விசாரித்த நீதிபதி டி.எஸ்.சிவஞானம், ஏற்கனவே ஜெகநாதன் காப்புரிமை பெற்றுள்ள 70 தமிழ் சினிமாப் படங்களை வி.சி.டி, டி.வி.டி.களாக வெளியிடு வதற்கு மோசர்பியர் நிறுவனத்துக்கு இடைக்காலத் தடை விதித்து உத்தரவிட்டார்.

# இந்தியச் செய்திகள்

# தமிழகத்தில் இலங்கைத் தமிழ் அகதிகள் உயர் கல்வியில் வஞ்சிக்கப்படும் நிலை

## கவனத்தில் கொள்வாரா கருணாநிதி? ஈழ உறவுகள் எதிர்பார்ப்பு



சென்னை, மே 26

இலங்கைத் தமிழ் அகதிகளின் வாரிசுகள், தமிழகத்தில் பள்ளிப் படிப்பை தொடர அனுமதி வழங்கப்படும்போது, நல்ல மதிப்பெண் எடுக்கும் மாணவர்கள் அரசு ஒதுக்கீட்டு இடங்களில் பொறியியல் கல்லூரிகளில் சேர அனுமதி மறுக் கப்படுவது ஏன் என்ற கேள்வி எழுந்துள்ளது.

தமிழக முதல்வர் இந்த விடயத்தில் உடனடியாக தலையிட்டு, இலங்கைத் தமிழ் அகதிகளின் திறமையுள்ள வாரிசுகளின் உயர் கல்விக்கு வாய்ப்பை ஏற்படுத் தித் தர வேண்டும் என்ற எதிர்பார்ப்பு எழுந் துள்ளது.

தமிழகத்திலேயே படித்த இலங்கைத் தமிழ் அகதிகளின் வாரிசுகள், 191 நிர்ணய மதிப்பெண் எடுத்தும் பொறியியல் கவுன் சிலில் கலந்துகொண்டு அரசு ஒதுக்கீட்டில் உள்ள இடங்களைத் தேர்வு செய்ய அனுமதி மறுக்கப்படுகிறது.

இலங்கையைச் சேர்ந்த தமிழ் அகதி தேவசந்திரலிங்கம் - ரஜினி. இவர்களுக்கு, ஹோபாசினி, வினோத், பகீர் என மூன்று குழந்தைகள் உள்ளனர். 1996 ஆம் ஆண்டு, தேவசந்திரலிங்கம் - ரஜினி தம்பதியினர், இலங்கையிலிருந்து இந்தியா வந்து அகதிகளாக குடியேறினர். இவர்களின் கடைசி மகன் பகீர், யூ.கே.ஜி. முதல் பிளஸ் 2 வரை தமிழகத்திலேயே படித்துள்ளார்.

சென்னை திருவான்யூரில் உள்ள ஒரு பாடசாலையில் படித்து பிளஸ் 2 பொதுத் தேர்வு எழுதிய பகீர், 1,200 இற்கு 1,116 மதிப்பெண்கள் எடுத்துள்ளார்.

தாய் மொழிப்பாடத்தில் 183, ஆங்கிலத்தில் 180, இயற்பியலில் 192, வேதியியலில் 177, கணினி விஞ்ஞானம் 187, கணிதத்தில் 197 மதிப்பெண்கள் பெற்றுள்ளார். பொறியியல் படிப்பில் சேர்வதற்கு, 190.75 நிர்ணய மதிப்பெண் பெற்றுள்ளார். இந்த மதிப்பெண்ணிற்கு முன்னணி பொறியியல் கல்லூரியில் இடம் கிடைக்க வாய்ப்புள்ளது. ஆனால், இலங்கைத் தமிழ் அகதிகள் பொறியியல் கவுன்சிலிங்கில் கலந்துகொள்ள அனுமதி மறுக்கப்படுவதால், இம்மாணவர் முன்னணி பொறியியல் கல்லூரியில் சேர முடியாத நிலை உள்ளது.

பகீரின் தாய் ரஜினி கூறியவை வருமாறு -

கடந்த 2002ஆம் ஆண்டுவரை இலங்கை அகதிகளுக்கு மருத்துவப் படிப்பில் 20 இடங்களும், பொறியியல் படிப்பில் 40 இடங்களும் ஒதுக்கப்பட்டன. ஆனால், தற்போது இட ஒதுக்கீடு நிறுத்தப்பட்டுள்ளது. தொழில்நுட்பக் கல்வி இயக்குநரகத்தில் சென்று கேட்டபோது, தனியார் கல் லூரியில் நிர்வாக ஒதுக்கீட்டில் சேருமாறு கூறுகின்றனர். நிர்வாக ஒதுக்கீட்டில் சேர்வதாக இருந்தால், அதிகளவில் பணம் செலவாகும்.

எனது மகன் பகீரைப் போல, தமிழகம் முழுவதும் பல இலங்கைத் தமிழர் மாணவர்கள் பிளஸ் 2 பொதுத் தேர்வில் நல்ல மதிப்பெண் எடுத்துள்ளனர். ஆனாலும், பொறியியல் கவுன் சிலிங்கில் கலந்து கொண்டு, நல்ல கல்லூரி மற்றும் பாடப் பிரிவை தேர்வு செய்து படிக்க முடியாத நிலை உள்ளது - என்றார்.

# செம்மொழி மாநாட்டுப் பணிகளை விரைந்து முடிக்க முதல்வர் உத்தரவு

கோவை, மே 26

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டையொட்டி கோவையில் நடைபெற்று வரும் பணிகளை முதல்வர் கருணாநிதி கடந்த திங்கட்கிழமை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பணிகளை விரைந்து முடிக்குமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

மாநாட்டின் தொடக்க விழா ஊர்வலத்தில் 40 அலங்கார ஊர்திகள் இடம்பெறுகின்றன. 'இனியவை நாற்பது' என்ற தலைப்பில் தமிழ் மொழி மற்றும் இலக்கியங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 40 கருப் பொருள்களில் அலங்கார ஊர்திகள் வடிவமைக்கப்படுகின்றன. வ.உ.சி. பூங்கா மைதானத்தில் நடைபெறும் அலங்கார ஊர்தி வடிவமைக்கும் பணியை முதல்வர் கருணாநிதி பார்வையிட்டார். பணியின் தற்போதைய நிலை குறித்து ஊர்வலக் குழுத் தலைவர் கே.என்.நேரு விளக்கம் அளித்தார்.

ஊர்வலம் செல்லும் அவிநாசி வீதியில் முக்கிய விருந்தினர்களுக்காக 5 இடங்களிலும், கட்டுரையாளர்களுக்காக ஒரு இடத்திலும் தனி மேடை அமைக்கப்படுகிறது. இதற்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ள இடத்தையும் முதல்வர் பார்வையிட்டார்.

கொடிசியா தொழிற்காட்சி வளாகத்தின் முன்பகுதியில் கண்காட்சி அரங்கம் 12 ஏக்கரில் அமைக்கப்படுகிறது.

தமிழர்களின் கட்டடக் கலையை வெளிப்படுத்தும் வகையில் அரங்கின் வெளிப் பகுதி வடிவமைக்கப்படுகிறது.

மாநாட்டுப் பந்தல் அமைப்பு, மேடை அமைப்பு குறித்து அரங்க அமைப்புக் குழுத் தலைவர் வீரபாண்டி ஆறுமுகம், வரவேற்புக் குழுத் துணைத் தலைவர் துரைமுருகன், ஆய்வரங்க குழுச் செயலர் கனிமொழி ஆகியோர் விளக்கம் அளித்தனர்.

தலா 120 பேர் அமரும் வகையில் 21 அரங்குகள் அமைக்கப்படுகின்றன. இதைத் தவிர 500 பேர் அமரக்கூடிய ஆய்வரங்கம், 5 ஆயிரம் பேர் அமரும் பொழிவரங்கம் அமைக்கப்படுகிறது. இவற்றுக்கு தமிழ்ப் புலவர்களின் பெயர்கள் சூட்டப்படுகின்றன.

120 பேர் அமரக்கூடிய அரங்குகளில் ஒன்றான 'ஔவையார்' அரங்கை முதல்வர் பார்வையிட்டார்.

# திருமலையில் ஜெயலலிதா




திருப்பதி, மே 26

தமிழக முன்னாள் முதல்வரும் அ.தி.மு.க. பொதுச்செயலருமான ஜெயலலிதா நேற்றுமுன்தினம் ஹெலிகாப்டர் மூலம் திருப்பதிக்கு காலை 8 மணிக்கு வந்தார். திருப்பதி வெங்கடேச பெருமாளை தரிசிக்க, திருப்பதியில் இருந்து கார் மூலம் அவர் திருமலைக்குச் சென்றார்.

காலை 9 மணிக்கு, திருமலைக்கு வந்த ஜெயலலிதா பிரதான வாயில் வழியாக திருமலை கோவிலுக்குச் சென்று வழிபாட்டில் ஈடுபட்டார்.

ஜெயலலிதா திடீரென திருமலைக்கு வந்து சுவாமி தரிசனம் செய்ததற்கான காரணம் குறித்து, எந்தத் தகவலையும் அக்கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தில்லையம்பதியாள் துணை

# சீர்மேவு யாழ்ப்பாணம் கோண்டாவில் தில்லையம்பதி
# அருள் மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில்
# இரதோற்சவ விழா சிறப்பு மலர்


**26.05.2010**

## மஹோற்சவ பிரதம குருவின் ஆசியுரை



மஹோற்சவத்தின் பெருமை பஞ்ச கிருத்தியம் என்று சொல்லப்படுகின்ற படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற வகையிலே இறைவனுடைய பஞ்ச கிருத்தியங்களை குறிக்கின்ற விழாவாகவும் மஹோற்சவம் விளங்குகின்றது. இவ்விழாக்களில் இரத உற்சவம் ஆன்மாக்களின் மல நிவாரணம் என்று சொல்லப்படுகின்ற ஆணவம், கன்மம், மாயையை ஒடுக்கி ஆன்மாவை இறைவனிடம் இணைத்து திருவருளைப் பெறுவதற்கு உரிய விழாவாக இடம்பெறுகின்றது. இவ்விழாவில் கலந்து கொள்கின்ற அனைத்து தில்லையம்பதி வாழ் மக்கள் அனைவரும் சுபீட்சமாகவும் நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமாகவும் வாழ்வாங்கு வாழ வேண்டும் என்று இத் தருணத்தில் தில்லையம்பதி ஸ்ரீ சிவகாம சுந்தரியின் திருவடிகளை போற்றித் துதித்து நல்லாசி கூறி அமைகின்றேன்.

சிவஸ்ரீ குமார சரவணபவக் குருக்கள்
(பிரதமகுரு தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில்)



ஆக்கம் : அருட்கவி
செம்மல் பிரம்மஸ்ரீ
ந.வீரமணி ஐயர்
பாடியவர் : கலைமாமணி
ரி.எம். சௌந்தரராஜன்.

இராகம் - காமாஸ்
தாளம் - ஆதி

ஊர் கூடி வடம்பிடித்தே உளம் உருகச் -சித்திரத்
தேர் ஏறி வலம் வந்தாள் தேவி சிவகாமி
(ஊர் கூடி)

அநுபல்லவி
வாரகி வைஷ்ணவி வளம் திகழ் கோண்டாவில்
சீர்மேவு தில்லைப்பதி சிவகாமசுந்தரி
(ஊர் கூடி)

சரணம்
தேரின் திருத்தொங்கல் வாகுமாலை சூட
நாதஸ்வர கானம் நாதத் தவில் ஒலிக்க
பேரின்ப பக்தர் வழிபெருகிக் கண்ணீர் சொரிய
ஊரின்புறக் கோண்டாவில் உல்லாசி பவனி வந்தாள்
(ஊர்கூடி)

புன்னகை புரிந்தாருள் பொலிவுறத் தந்தனள்
அன்னவள் வரதமும் அபயமும் காட்டினாள்
என்னகுறை எமக்கு எங்கள் தாய் இருக்கும் போது
இன்னமுதத் தாயன்பால் என்றும் எமைக் காத்திடுவாள்
(ஊர் கூடி)

## பரிபாலனசபைத் தலைவரின் ஆசியுரை



அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகி அகிலத்தை காத்திடும் தில்லையம்பதி தேவி சிவகாமசுந்தரி இரதத்தில் ஆரோகணித்து வலம்வந்து சகல மக்களும் நாட்டில் சாந்தி, சமாதானம் கிடைத்து நல்வாழ்வு அளிப்பாயாக பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், சி.ஆனந்தராஜா,
திருக்கோயில் பரிபாலனசபை,மத்திய
கிராம முன்னேற்ற சங்கம்,
மத்திய சனசமூக நிலையம்.

1910 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இவ்வாலயத்திற்கென குதிரை வாகனம் ஒன்று செய்யப்பட்டு இவ்வருடம் (2010) 100 ஆவது ஆண்டை நிறைவு செய்கின்றமை சிறப்புக்குரியதாகும். இந்த வாகனமானது மானம்பூ திருவிழாவுக்கும் மஹோற்சவ வேட்டைத் திருவிழாவுக்கும் வலம் வருவது குறிப்பிடத்தக்கது.



# ஆலய வரலாறு

அன்று சிவபூமி என்று திருமூலர் அழைத்த மணி நாடாம் இலங்கை மண்ணின் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆலயங்களுள் ஒன்றாக விளங்கும் இத்திருக்கோயிலும் ஒன்றாகும். ஆரம்பத்தில் பேச்சியம்மன் எனும் திருநாமத்துடன் அன்னை சிவகாமி 1850 ஆம் ஆண்டுகளுக்கு முன் சூளைகள் சூழ மாமர நிழலில் முன்னைய பெரியார்களால் பராமரிக்கப்பட்டு வந்தாலும் வேலன் என்னும் பெரியவராலேயே அம்பிகையின் ஆலயம் தோற்றம் பெற்றது எனலாம்.

1855 ஆம் ஆண்டு தொடக்கம் ஆசார சீலரான வேலன் என்பவர் அன்னையின் ஆலயத்திற்கு விளக்கு வைத்து வழிபடத் தொடங்கினார். இது ஆலய வழிபாட்டின் மறுமலர்ச்சிக்காலம் எனலாம். அத்துடன் கருங்கல்லினாலான அம்பிகையின் திருவுருவ விக்கிரகம் கோயிலில் வைக்கப்பட்டது.

1910 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இவ் ஆலயம் நான்கு பக்கமும் சுண்ணாம்புக் கற்களால் கட்டப்பட்டு கூரை ஓட்டினால் வேயப்பட்டு 15 அடி விஸ்தீரணம் கொண்ட ஆலயமாக உருப்பெற்றது. பஞ்ச மணியும், சேமக்கலமும், சந்தனக்கிண்ணம் மற்றும் பூசை மணியும் இன்றுவரை பேணிப்பாதுகாத்து வருதல் குறிப்பிடத்தக்கது.

சைவ ஆசாரத்தைப் பேணும் சைவப் பெரியார் சபாபதி மார்க்கண்டேயர் அவர்கள் பூசைக்காக நியமிக்கப்பட்டார். இக்காலத்திலேயேதான் வைகாசி விசாக பட்சத்தில் ஆடு,கோழி போன்ற உயிர்ப்பலி இடுதலும், மடைபோடுதலும் வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது. தொடர்ந்து 1958 வரை இவரது தொண்டு சென்றது. 1959 ஆம் ஆண்டு ஆரம்பப் பகுதியில் முத்தன் இராசன், பொன்னன் சுந்தரலிங்கம் இவ்வூரைச் சேர்ந்த வீரகத்தி தம்பி ஐயா ஆகியோரின் பெருமனதினால் தர்மபரிபாலன சபை உருவாக்கப்பட்டு இச்சபையினால் இவ் ஆலயம் பொறுப்பேற்கப்பட்டு இரண்டு காலப் பூசைக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

நித்தியபூசகராக அன்று முதல் வீ.தம்பிஐயா நியமிக்கப்பட்டார். இவர்களது முயற்சியால் ஆலயத்தில் நடைபெற்று வந்த வைகாசி விசாகப் பொங்கலில் இடம் பெற்ற பலியிடுதல், மடை போடுதல் போன்ற முறைமைகள் மாற்றப்பட்டு ஆலயத்தின் புறச்சூழலில் அமைந்திருந்த சூளைமேடுகள் அகற்றப்பட்டு ஆலயத்திற்கென ஒரு விஸ்தீரணம் கொண்ட இடம் ஒதுக்கப்பட்டது.

1962 ஆம் ஆண்டு அன்னையின் அருட்கடாட்சத்தினால் ஒன்று கூடிய மக்கள் ஆலயத்தை சிறப்பான திருப்பெரும் கோயிலாக அமைப்பதற்கு பாலஸ்தாபனம் செய்தனர். 1965 ஆம் ஆண்டு யாழ்.மாவட்ட முன்னாள் நீதிபதி சோ. தனபாலசிங்கம் அவர்களும் யாழ்.பொலிஸ் சுப்பிறிண்டர் வான்சண்ட் அவர்களும் வடமாகாண அரசாங்க அதிபர் ஜவான் சமரசிங்க அவர்களும் அத்திவாரக்கல் நாட்டு விழாவில் முன்னின்று செய்தனர்.

1965 ஆம் ஆண்டு ஆனி மாதம் 17 ஆம் திகதி வியாழக்கிழமை உத்தரட்டாதி நட்சத்திரத்தில் சுப முகூர்த்தத்த நன்னாளில் பிரம்ம ஸ்ரீ குமாரசுவாமி குருக்கள் அவர்களால் பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. அன்றிலிருந்து சிவகாமி அம்பாள் என்ற திருநாமம் சூட்டப்பட்டது. 1966 ஆம்ஆண்டு வைகாசி விசாகத்தை முன்னிட்டு 10 தினங்கள் அலங்கார உற்சவம் நடைபெற திருவருள் பாலித்தது.

09.07.1971 ஆம்ஆண்டு தேர்த் திருப்பணி அங்குரார்ப்பண நிகழ்வு நடைபெற்றது. தொடர்ந்து ரிஷபம், பலிபீடம், கொடித்தம்பம், வசந்த மண்டபம், மணிக்கோபுரம், திருமஞ்சனக் கிணறு முதலான திருப்பணி வேலைகள் நிறைவேற்றப்பட்டு 1976 ஆம் ஆண்டு தேர் வெள்ளோட்டமும் இடம்பெற்றது.

1977 ஆம் ஆண்டு அம்பாள் திருவூஞ்சல் காப்பு சுட்டிபுரத்தில் இசைமணி சீர்காழி கோவிந்தராஜன் அவர்களால் பாடப்பட்ட சிறப்புமுடையது. திருக்கோயில் வாயிலில் தல விருட்சமாகக் காணப்படும் ஆலும் அரசும் ஒன்றிணைந்த அருள்மிகு பொந்தினூடாக அம்பாளின் விமானத்தில் கலசத்தினைக் காணக்கூடியதாகவுள்ளது. இது அற்புதமான ஒன்றாகும்.

மீண்டும் 1982 இல் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு உலக இந்து மகாசபை இலங்கை இணைப் பிரதித்தலைவராக இருந்த அரச அதிபர் யோகேந்திரா துரைச்சாமி அவர்களால் தைப்பூசத்தினத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டு திருப்பணி வேலைகள் தொடங்கப்பட்டன.

1989 ஆம் ஆண்டு சிவஸ்ரீ க.குகதாஸக்குருக்கள் தலைமையில் பங்குனி உத்தர பௌர்ணமி நிறைநாளில் மஹாகும்பாபிஷேகம் அம்பாளின் அருட் கடாட்சத்தில் சிறப்புற நடைபெற்றது.

1990 இல் திருக்கோவில் வருடாந்த சங்காபிஷேக தினத்தன்று காசியிலிருந்து காசி விஸ்வநாதர் இங்கு வரவழைக்கப்பட்டது. 1994 ஆம் ஆண்டு நடைபெற்ற பங்குனி உத்தர சங்காபிஷேகத்தின்போது அம்பாளின் கடாட்சத்தினாலும் அடியார்களின் பெரும் காணிக்கையினாலும் அம்பாளுக்குப் பொன்முடியும் திருகோரணம் சூட்டும் விழாவும் கொண்டாடப்பட்டது.

கவிமாமணி வீரமணி ஐயர் அவர்களால் ஆக்கப்பெற்று தென்னிந்திய பக்திப்பாடகர் கலைமாமணி ரி.எம்.சௌந்தரராஜன் அவர்களால் பாடப்பட்ட திருவூஞ்சல் ஒலிப்பதிவு நாடா வெளியீட்டுவிழா 1994 இல் இடம்பெற்ற வைகாசி வசந்த உற்சவத்தன்று ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பராமாச்சாரிய சுவாமிகள் ஆசியுடன் வெளியிடப்பட்டது. அத்தோடு 1997 ஆம் ஆண்டு இரண்டாவது பக்திப் பாமாலை ஒலிப்பதிவு நாடாவும் வெளியீடு செய்யப்பட்டது.

இந்தியாவில் இருந்து கொண்டு வரப்பட்ட ஸ்ரீசக்கரம் 1998 இல் இடம்பெற்ற பங்குனி உத்தர தினத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. 2000 ஆம் ஆண்டு 25 ஆவது கொடியேற்றத்தை முன்னிட்டு அடியார்களின் பெரும் காணிக்கையினால் அம்பாளுக்குத் தங்கக் குடை சூட்டும் விழாவும் இராஜகோபுரம் அமைப்பதற்கான அங்குரார்ப்பண வைபவமும் நடைபெற்றன.

இதைத் தொடர்ந்து 2002 ஆம் ஆண்டு (மஹோற்சவ காலப் பகுதியில்) பிரம்மஸ்ரீ ந.வீரமணி ஐயர் அவர்களால் இயற்றப்பட்ட தில்லையம்பதியாள் கீர்த்தனைகள் தென்னிந்தியக் கலைஞர்களான கலைமாமணி டாக்டர் சீர்காழி ஜி.சிவசிதம்பரம் மற்றும் ரி.எம்.எஸ்.செல்வக்குமார் ஆகியோரால் பாடப்பட்டது.

2003 ஆம் ஆண்டு மஹோற்சவப் பெருநாள் நிறைவுற்ற கையோடு பாலஸ்தாபனம் ஆரம்பிக்கப்பட்டு நவக்கிரகமும் புதிதாக அமைக்கப்பட்டு அம்பாளுக்கு செங்களனித் தடாகமும் அமைக்கப்பட்டது. அத்துடன் வசந்த மண்டபத் தெற்கு வாசல் திறக்கப்பட்டது.

இந்தியாவின் கும்பகோணத்திலிருந்து தருவிக்கப்பட்ட நடராஜப்பெருமான், மாணிக்க வாசகர், நவக்கிரக மூர்த்திகள் என்பன பிரதிஷ்டை செய்யப்பட்டதுடன் தமிழகத்தின் கும்பகோண நவகன்னிகை எனப் போற்றப்படும் மஹாமாசிமா தீர்த்தங்கள் கொண்டு 2004 ஆம் ஆண்டு சுபானு வருடம் பங்குனி உத்தரத்தினத்தன்று சிவஸ்ரீ சதா. மகாலிங்க சிவக்குருக்கள் தலைமையில் மஹாகும்பாபிஷேகம் நடைபெற்றது.

அத்தோடு அருட்கவி செம்மல் பிரம்மஸ்ரீ ந.வீரமணி ஐயர், இரா.இராஜேஸ்வரன் ஆகியோரால் இயற்றப்பட்டு தென்னிந்தியப் பாடகர்களான ரி.எம்.எஸ்.செல்வகுமார், கலைமாமணி டாக்டர் சீர்காழி ஜி.சிவசிதம்பரம் ஆகியோரால் பாடப்பெற்ற தில்லையம்பதியாள் கும்பாபிஷேக கீர்த்தனைகள் பாகம் - 4 வெளியீடு செய்யப்பட்டது.

ஆலயத்திற்கு ஒரு இராஜகோபுரம் அமைக்க வேண்டும் என்ற அடியார்களின் அவாவினை பூர்த்தி செய்யும் வகையில் அன்னையின் அளப்பரிய அருளினால் நவகோண வடிவில் ஐந்து தளங்களை உள்ளடங்கிய இராஜகோபுரத்திருப்பணி வேலைகள் தென்னிந்திய சிற்பவல்லுனர்களால் ஆரம்பிக்கப்பட்டது.

பின்னர் ஈழத்துச் சிற்பவல்லுனர்களாலும் திருப்பணி வேலைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டது. வெளிநாடுகளில் வாழும் அன்னையின் அடியவர்களினாலும் எங்கள் கிராமத்து அடியவர்களின் நிதியினாலும் அவர்களின் உழைப்பினாலும் நிர்மாணிக்கப்பட்ட இராஜகோபுரம் வானுயர்ந்து காட்சி தந்து எமக்கு அருளாட்சி வழங்குகின்றது.

இந்த இராஜகோபுரத்திற்குரிய துவார பாலகிகள் இரண்டும் தென்னிந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்டுள்ளது. அத்தோடு இராஜகோபுரத்திற்குரிய கண்டாமணியும் தென்னிந்தியாவில் உருவாக்கப்பட்டு கொண்டு வரப்பட்டுள்ளது. அம்பாளின் அருளினால் இராஜகோபுரத் திருப்பணிகள் யாவும் பூர்த்தியடைந்த நிலையில் மகாகும்பாபிஷேகம் 18.03.2010 அன்று நடைபெற்றது.

அத்தோடு மஹாவித்துவான் பிரம்மஸ்ரீ ந.வீரமணிஐயர், இரா.இராஜேஸ்வரன், சி.கணேசலிங்கம், கு.உதயரூபன் ஆகியோரால் இயற்றப்பட்டு தென்னிந்தியப் பாடகர்களான வீரமணிராஜ், தீபன் சக்கரவர்த்தி, கிருஸ்ணராஜ், முருகேஷ் ஆகியோரால் பாடப்பெற்ற ''கோபுர தரிசனம்'' கீர்த்தனைகள் பாகம் - 5 வெளியீடு செய்யப்பட்டது.

அத்துடன் இவ்வருடம் மஹோற்சவமானது 12 தினங்களாக உற்சவம் நடைபெற அம்பிகையின் திருவருள் கிடைக்கப்பெற்று இன்று இரதோற்சவம் நிகழ்கின்றது.

''தில்லையம்பதியாளே!
சிவகாமசுந்தரியே!! சரணம்!!!

**விஜய் சில்க்ஸ்**
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

**செல்வா எலெற்றிக்கல்ஸ்**
43/1, பலாலி வீதி, திருநெல்வேலி.

**பாலா வீடியோ**
தில்லையம்பதி, கோண்டாவில்.

**காருசன் தையலகம்**
தில்லையம்பதி, கோண்டாவில்.

**சிவகாமி எலற்றோனிக்**
பலாலி வீதி, திருநெல்வேலி.

**செல்லப்பா சற்குணம் குடும்பத்தினர்.**
தில்லையம்பதி, கோண்டாவில்.

**செந்தூரன் அலங்காரப்பந்தல்**
அரசடி வீதி, கோண்டாவில்.

**முத்தொளி வீடியோ**
தில்லையம்பதி, கோண்டாவில்.

**புலவர் வீடியோ**
தில்லையம்பதி, கோண்டாவில்.

**சிவகாமி போட்டோ**
தில்லையம்பதி, கோண்டாவில்.

**செல்லையா தயாளன்**
பிரான்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை முதல்

# 3 தினங்கள் யாழ். மத்திய கல்லூரியில் 'உள்ளூர் உற்பத்தியால் உயர்வோம்' கண்காட்சி

யாழ்ப்பாணம், மே 26

''உள்ளூர் உற்பத்தியால் உயர்வோம்'' என்ற தொனிப்பொருளில் வடமாகாண பிரதேசங்களில் கிராம மட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் உற்பத்தி பொருள்களின் மாகாணமட்ட கண்காட்சி நாளை மறுதினம் 28 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை - மூன்று தினங்கள் -யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கண்காட்சியில் பாரம்பரிய சிறுகைத்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கைத்தொழில் வர்த்தகத்துறை அமைச்சர் ரிசாட் பதியுதீன், வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி ஆகியோர் அதிதிகளாகக் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களமும் மாகாண தொழில்துறை திணைக்களமும் இணைந்து ஒழுங்கு செய்துள்ள இக்கண்காட்சிக்கு வட மாகாண உள்ளூராட்சி அமைச்சு அனுசரணை வழங்குவதுடன் மாகாணத்தின் வாழ்வாதார செயற்பாடுகளில் ஈடுபடும் விவசாயத் திணைக்களம், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், கூட்டுறவுத் திணைக்களம், சமூக சேவைகள் திணைக்களம், உள்ளூராட்சித் திணைக்களம், சுதேச வைத்தியத்துறை திணைக்கம், பனை அபிவிருத்திச் சபை ஆகிய அரச திணைக்களங்களும் ஏனைய உள்ளூர் கிராம மட்ட அமைப்புகளும் பங்களிப்புச் செய்கின்றன.

இந்தக் கண்காட்சியின் முக்கியத்துவம் குறித்து ஏற்பாட்டாளர்கள் குறிப்பிட்டுள்ளதாவது:-

இக்கண்காட்சியின் மூலம் உள்ளூர் உற்பத்தி பொருள்களுக்கான சந்தை வாய்ப்பானது தேசிய மட்டம்வரை கொண்டு செல்லப்படுவதே முக்கிய நோக்கமாகும். மேலும் தேசிய சந்தையின் கேள்விக்கேற்ப உள்ளூர் உற்பத்தியின் தரத்தை மேம்படுத்துவது தொடர்பான விழிப்புணர்வாகவும் கண்காட்சி அமையவுள்ளதுடன் இதனூடாக உள்ளூர் உற்பத்தியாளர்களின் உற்பத்தி முயற்சி தூண்டப்பட்டு அதற்கான ஆதரவும், விளம்பரமும் ஏற்படுத்தப்படவுள்ளன. அதுமட்டுமன்றி இது தரமான பொருள்களின் உற்பத்தியைத் தூண்டுவதுடன் மாகாணத்தின் வெவ்வேறு மாவட்ட உள்ளூர் உற்பத்தியாளர்களிடையே முன்னேற்றகரமான தொழில்நுட்ப பரிமாற்றத்துக்கு வழிவகுக்கும்.

கண்காட்சியில் காட்சிப்படுத்தப்படும் உற்பத்தி பொருள்கள் தேசிய அருங்கலைகள் பேரவையினால் தெரிவுசெய்யப்பட்டு கொழும்பில் நடத்தப்படவுள்ள தேசிய கண்காட்சியில் இணைத்துகொள்ளப்பட்டு அங்குதேசிய மட்டத்தில் தெரிவுசெய்யப்படுபவைகளுக்கு விருதுகளும் சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளன. அத்துடன் இக்கண்காட்சியின் போது உள்ளூர் மட்ட உற்பத்தி பொருள்களின் விற்பனையும் நடைபெறவுள்ளது. (ஒ)

## உரும்பிராயில் நேற்று முஸ்லிம் வியாபாரி விபத்தில் பலி!

யாழ்ப்பாணம், மே 26

உரும்பிராய் விளாத்தி வீதிப் பகுதியில் நேற்று மதியம் இடம்பெற்ற டிராக்டர் - மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த முஸ்லிம் வியாபாரி ஒருவர் பலியாகியுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது:-

வியாபார நடவடிக்கைகளுக்காக தமது உறவினருடன் மோட்டார் சைக்கிளில் உரும்பிராய் வீதி வழியாகப் பயணம் செய்துகொண்டிருந்தவேளை எதிரே வந்த டிராக்டருடன் மோதியதில் பிரஸ்தாப வியாபாரி அந்த இடத்திலேயே மரணமானார்.

யாழ். முஸ்லிம் வீதியைச் சேர்ந்த ஜுனைத் அனிஸ் (வயது - 42) என்பவரே உயி ரிழந்தவராவார்.

இவருடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த எம்.முகமட் மாயித் (வயது - 17) என்பவர் காயங்களுடன் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ஒ- 16)

## மாகாண தமிழ்த்தினப் போட்டிகள்; பதிவுகளும் சனியன்று காலையே நடக்கும்

யாழ்ப்பாணம், மே 26

வடக்கு மாகாண தமிழ் மொழித் தினப் போட்டிகளில் கலந்துகொள்ளும் மாணவர்களை யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்கு பதிவு செய்து கொள்ளுமாறும் நிகழ்வுகள் முற்பகல் 11 மணி தொடக்கம் குறித்த ஒழுங்கில் நடைபெறும் என்றும் வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் வீ. இராசையா அறிவித்துள்ளார்.

வடக்கு மாகாண தமிழ் மொழித் தினப் போட்டி தொடர்பாக மாகாணக் கல்விப் பணிப்பாளர் மேலும் தகவல் தெரிவிக்கையில் -

முன்னர் அறிவிக்கப்பட்ட பிரகாரம் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை போட்டிகளில் கலந்துகொள்ளும் மாணவர்கள், ஆசிரியர்களை பதிவுசெய்யும் செயற்பாடுகள் தவிர்க்க முடியாத காரணங்களினால் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

போட்டிகளில் கலந்துகொள்ளும் சகல மாணவர்களது பதிவுகளும் 29 ஆம் திகதி காலை 8 மணிக்கு மேற்கொள்ளப்பட இருப்பதால் குறித்த நேரத்துக்குப் பதிவுகளை மேற்கொள்ளுமாறும்:

முற்பகல் 11 மணிக்கு போட்டிகள் ஆரம்பமாகி குறித்த ஒழுங்கு முறையில் போட்டிகள் நடைபெற இருப்பதால் உரிய நேரத்துக்கு போட்டிகளில் கலந்துகொண்டு போட்டிகள் சிறப்பாக நடைபெற ஒத்துழைப்பு வழங்கும்படி கேட்டுள்ளார். (ஒ-11-10)

## இடம்பெயர்ந்த ஊறணி மக்களின் எதிர்காலம் குறித்து கலந்துரையாடல்

### இளவாலை முகாமில் வெள்ளியன்று

ஆனைக்கோட்டை, மே 26

கடந்த 20 வருடங்களாக இடம்பெயர்ந்து, மீளவும் தமது சொந்த இடத்திற்குத் திரும்பமுடியாது அவதியுறும் வலி.வடக்கின் காங்கேசன்துறை ஊறணி வாழ் மக்களுக்கான கலந்துரையாடல், நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு, இளவாலை சீந்திப்பந்தலிலுள்ள ஊறணி இடம்பெயர்ந்தோர் முகாமில் நடைபெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

கடந்த இரண்டாம் திகதி நடைபெற்ற கலந்துரையாடலின் பிரகாரம் - ஊறணியில் குடியிருக்க அனுமதி கோரி புனித பாப்பரசரின் பிரதிநிதியிடம் மகஜர் கையளித்தமை, எதிர்வரும் ஆனிமாதம் 27ஆம் திகதி ஊறணியில் புனித அந்தோனியார் ஆலயத்தில் திருநாள் திருப்பலி நடத்த அனுமதி பெறப்பட்டமை மற்றும் ஊறணி இடம்பெயந்தோரின் எதிர்காலம் குறித்த கருத்துக்கள் பரிமாறல்கள் போன்றவை இடம்பெறவிருப்பதால் இக்கலந்துரையாடலில் ஊறணி வாழ் மக்களின் குடும்பத்திலிருந்து ஒருவரேனும் அவசியம் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டா ளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (ஒ-1-20)

## மட்டுவில் சந்திரபுரத்தில் மெய்வன்மைப் போட்டிகள்

மட்டுவில் சந்திரபுரம் கிராம அலுவலர் பிரிவு சமூக மட்ட அமைப்புக்கள் ''வேள்ட் விஷன்'' நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்தும் மெய்வன்மைப் போட்டிகள் எதிர்வரும் 30ஆம் திகதி பிற்பகல் 1.30 மணிக்கு மட்டுவில் கந்தபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெறும்.

சந்திரபுரம் கமக்கார அமைப்பின் தலைவர் வ. தர்மலிங்கம் தலைமையில் நடைபெறும் போட்டிகளுக்குப் பிரதம விருந்தினராகத் தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசனும், சிறப்பு விருந்தினர்களாக மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலய அதிபர் புலவர் மு. பாலசுப்பிரமணியம், ''வேள்ட் விஷன்'' இணைப்பாளர் ரி.எம். வசந்தநாயகம் ஆகியோரும் கலந்துகொள்வர். (ஒ-207)




''காணாமற் போனோரைத் தேடிக் கண்டறியும் குழு'' நேற்றுமுன்தினம் வவுனியா பஸ் நிலையம் முன்பாக அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தியவேளை எடுக்கப்பட்ட படங்கள். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் காணாமற்போனோரின் படங்கள் மற்றும் சுவரொட்டிகளுடன் காணப்பட்டனர். (ஒ)

## இன்றைய தேர்த்திருவிழாக்கள்

யாழ்ப்பாணம், மே 26

திருநெல்வேலி பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான பெருந்திருவிழாவில் இன்று தேர்த்திருவிழா இடம்பெறுகிறது.

காலை 7.30 மணிக்கு வசந்தமண்டபப் பூசை இடம்பெற்று 9 மணிக்கு அம்பாள் சித்திரத்தேரில் ஆரோகணித்து அருட்பாலிப்பார்.

நாளை காலை 7.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று தொடர்ந்து தீர்த்த உற்சவம் நடைபெறும். (ஒ-1)

(சிறப்பிதழ் 12ஆம் 13ஆம் பக்கங்களில்)

* * *

திருநெல்வேலி வடக்கு இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலய பெருந்திருவிழாவில் இன்று தேர்த்திருவிழா இடம்பெறும்.

காலை வசந்தமண்டபப் பூசை இடம்பெற்று அம்பாள் தேரில் ஆரோகணித்து அருட்காட்சி அளிப்பார்.

நாளை காலை தீர்த்தத் திருவிழா இடம்பெறும். (ஒ-1)

(சிறப்பிதழ் 8ஆம் பக்கத்தில்)

* * *

கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமிகள் கோயில் பெருந்திருவிழாவில் இன்று தேர்த்திருவிழா இடம்பெறுகிறது.

காலை 7 மணிக்கு வசந்தமண்டபப் பூசை இடம்பெற்று சுப்பிரமணியர் காலை 9 மணிக்கு தேரில் ஆரோகணித்து அருட்காட்சியளிப்பார். (ஒ-1)

(சிறப்பிதழ் 18ஆம் பக்கத்தில்)

* * *

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் ஆலயப் பெருந்திருவிழாவில் இன்று தேர்த்திருவிழா சிறப்பாக நடைபெறுகிறது.

காலை 8.30 மணிக்கு வசந்தமண்டபப் பூசை இடம்பெற்று, முற்பகல் 10 மணிக்கு விநாயகர் தேரில் ஆரோகணிப்பார்.

நாளை முற்பகல் 10 மணிக்கு தீர்தத் திருவிழா இடம்பெறும். (1)

(சிறப்பிதழ் 16ஆம் பக்கத்தில்)

* * *

கோண்டாவில் தில்லையம்பதி ஸ்ரீ சிவகாமி அம்பாள் ஆலயப் பெருந்திரு விழாவில் இன்று தேர்த்திருவிழா இடம்பெறவுள்ளது.

காலை 9 மணிக்கு வசந்தமண்டபப் பூசை இடம்பெற்று 10 மணிக்கு அம்பாள் தேரில் வலம் வந்து அருட்காட்சி அளிப்பார்.

நாளை காலை தீர்த்தத்திருவிழா நடைபெறும். (ஒ-1)

(சிறப்பிதழ் 22ஆம் பக்கத்தில்)

# சரத் பொன்சேகாவை விடுவிக்கக் கோரி 50 எம்.பிக்கள் ஜனாதிபதிக்குக் கடிதம்

கொழும்பு, மே 26

ஜெனரல் சரத் பொன்சேகாவை விடுதலை செய்யுமாறு கோரி எதிர்க் கட்சி எம்.பிக்கள் 50பேர் கையெழுத்திட்டு ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளனர்.

ஜனநாயக தேசிய முன்னணியின் செயலாளரும் எம்.பியுமான விஜித ஹேரத்தே இதைத் தெரிவித்தார். அக்கட்சியின் கொழும்பு அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

இராணுவ வாரம் அறிவிக்கப்பட்டு அவ்வாரத்தில் பல நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. ஆனால், இராணுவ வெற்றிக்குக் காரணமான ஜெனரல் பொன்சேகா தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இராணுவ வாரத்தையொட்டி அரசால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வுகளில் பொன்சேகாவின் பெயரைப் பயன்படுத்துவது தடை செய்யப்பட்டிருந்தது. அவருக்கு எதிராக எதையெல்லாம் செய்ய முடியுமோ அவை அனைத்தையும் அரசு செய்துவருகிறது.

யுத்த வெற்றி தொடர்பான வீடியோக் காட்சிகள் தொலைக்காட்சியில் ஒளிபரப்புகின்றபோது அந்த வெற்றிக்குக் காரணமான பொன்சேகாவின் படம் திட்டமிட்டுத் தவிர்க்கப்படுகிறது. அரசின் அழுத்தமே இதற்குக் காரணம்.

அரசின் இந்தப் பழிவாங்கல் செயற்பாட்டைச் சிறிதளவேனும் கணக்கெடுக்காது நாம் பொன்சேகாவின் விடுதலைக்காகப் பாடுபடுகின்றோம்.

பொன்சேகாவை உடனடியாக விடுதலை செய்யுமாறு கோரி எதிர்க்கட்சி எம். பிக்கள் 50பேர் கையெழுத்திட்டு ஜனாதிபதியிடம் மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளோம்.

பொன்சேகாவை அரசு பழிவாங்கியது போதும். இனியும் தாமதிக்காது அவரை விடுதலை செய்யவேண்டும் என்பதே இந்நாட்டு மக்களின் விருப்பம். - என்றார்.

## பனை முறிந்து வீழ்ந்தது; மயிரிழையில் காயத்துடன் தப்பினார் இளைஞர்!

பனை மரம் முறிந்து வீழ்ந்ததில் இளைஞன் ஒருவர் மயிரிழையில் தப்பினார். காயமடைந்த அவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அச்செழுப் பகுதியில் உள்ள வீட்டில் உள்ள கிணற்றில் நீர் இறைத்துக்கொண்டிருந்த பா. கஜந்தன் (வயது - 24) என்ற இளைஞர், கடும் காற்றின் காரணமாக அருகில் இருந்த பனை மரம் முறிந்து வீழ்ந்ததில் காலில் காயமடைந்துள்ளார்.

இவர் சிகிச்சைக்காக நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஒ- 16)

## ஐ.தே. கட்சியின் கூட்டங்களை பகிஷ்கரிக்கிறார் ரங்க பண்டார

கொழும்பு, மே 26

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இடம்பெறுகின்ற நிகழ்வுகள் மற்றும் கூட்டங்களைப் பகிஷ்கரிப்பதற்குத் தாம் தீர்மானித்திருக்கின்றார் என அந்தக் கட்சியின் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்க பண்டார தெரிவித்துள்ளார்.

எனினும், கட்சியிலிருந்து விலகுவது தொடர்பில் தான் தீர்மானம் எதுவும் எடுக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

சிலாபத்தில் கடந்த ஏப்ரல் மாதம் 10ஆம் திகதி இடம்பெற்றிருந்த கூட்டத்தின் போது, பாலித ரங்க பண்டார தாக்கப்பட்டு, கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றிருந்தார்.

இந்நிலையிலேயே, தான் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினரான சாந்த அபயசேகரவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று பாலித ரங்க பண்டார தெரிவித்தார்.

சாந்த அபயசேகர மீது நடவடிக்கை எடுக்கத் தமது கட்சி தவறிவிட்டது என்று கூறியே, கட்சியின் நடவடிக்கைகளை அவர் பகிஷ்கரிக்கிறாராம். (ஒ- சி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வில்பத்துப் பூங்கா பாதுகாவலர் மீது தாக்கு; சிவில் பாதுகாப்புப் படையினர் 8 பேர் கைது!

கொழும்பு, மே 26

வில்பத்து தேசிய பூங்காவின் பாதுகாவலர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக சிவில் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த எட்டு பேர் நொச்சியாகம பொலிஸாரார் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் உல்லாசப் பயணத்துறை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டனர். அவர்களை பிணையில் விடுவிக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

வில்பத்து தேசிய பூங்காவுக்கான சுற்றுலாவை மேற்கொண்டிருந்த சிவில் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த 15பேர் அங்குள்ள பூங்கா பாதுகாவலர் இருவரையும், சாரதிகள் இருவரையும் தாக்கியுள்ளனர். அத்துடன், இரண்டு வாகனங்களையும் மேற்படி சுற்றுலாப் பயணிகள் அடித்து சேதமாக்கியிருந்தனர். (சி)

# இஸ்ரேலியத் தூதரை வெளியேற்றுவோம் ஆஸி.வெளிவிவகார அமைச்சு அறிவிப்பு

மெல்போர்ன், மே 26

ஆஸ்திரேலியாவின் கடவுச்சீட்டுகளை இஸ்ரேல் போலியாகத் தயாரித்து அவற்றை பயன்படுத்தி துபாயில் தங்கியிருந்த ஹமாஸ் தலைவர் ஒருவரை கொலை செய்துள்ளது. இதனால் அந்த நாட்டுடன் ஆஸ்திரேலிய உறவு பாதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஆஸ்திரேலிய வெளிநாட்டு அமைச்சர் ஸ்டீபன் ஸ்மித் வெளியிட்டுள்ள அறிக்கையில், ''ஒரு நாட்டின் கடவுச்சீட்டுகளை இன்னொரு நாடு தவறாகப் பயன்படுத்துவதை யாராலும் தாங்கிக்கொள்ள முடியாது. நாங்கள் இஸ்ரேலின் நண்பர்கள். ஆனால் நண்பர்களாக இருக்கும் ஒரு நாட்டின் கடவுச் சீட்டை தவறாக பயன்படுத்துவது எப்படி நட்புச் செயலாக இருக்க முடியும்?'' எனக் கேட்டுள்ளார்.

''இஸ்ரேல் நடந்துகொண்ட விதம் வருத்தத்துக்குரியதாகும். இதைக் கண்டிக்கும் வகையில் நாங்கள் இஸ்ரேல் தூதர் ஒருவரை வெளியேற்றுவோம்'' என்றும் அதில் ஸ்டீபன் ஸ்மித் குறிப்பிட்டிருக்கிறார்.

பலஸ்தீனத்தின் தீவிரவாத இயக்கமான ஹமாஸ் தலைவர்களில் ஒருவர் மக்மூத் அல்-மபூக் துபாயில் இஸ்ரேல் உளவுப்படை முகவர்களால் கொல்லப்பட்டார். இந்தச் சம்பவம் கடந்த ஜனவரி மாதம் 20 ஆம் திகதி நடந்தது.

# உலகில் மிகச்சிறிய டிரான்சிஸ்டர்: விஞ்ஞானிகள் புதிய சாதனை!

வாஷிங்டன், மே 26

உலகில் மிகச் சிறிய டிரான்சிஸ்டரை சர்வதேச விஞ்ஞானிகள் குழுவினர் உருவாக்கியுள்ளனர்.

இதன் உதவியுடன் இப்போது இருப்பதை விட மிகச் சிறிய அளவிலும், அதிவேகமாகவும் செயற்படும் சூப்பர் ஃபாஸ்ட் கணினிகளை உருவாக்குவது சாத்தியமாகும்.

இந்த புதிய டிரான்சிஸ்டர், ஒரு மீற்றரில் 400 கோடி ஒரு பங்கு நீளமுடையது. மிக மிகச் சிறியதாக இருந்தாலும் இது சாதாரண டிரான்சிஸ்டர்கள் போலவே செயற்படும்.

இதனை மைக்ரோஸ்கோப் கொண்டே சரியாகப் பார்க்க முடியும். இது மிக அற்புதமான கண்டுபிடிப்பு. விஞ்ஞான வளர்ச்சியில் இது ஒரு மைல்க்கல்.

சிலிக்கானைப் பயன்படுத்தி இது உருவாக்கப்பட்டுள்ளது. பரிசோதனை முறையில் இந்த டிரான்சிஸ்டர் சிறப்பாக செயற்பட்டுள்ளது என்று விஞ்ஞானிகள் குழுவில் இடம்பெற்றுள்ள மைக்கேல் சைமன்ஸ் கூறியுள்ளார்.

# தென் சீனாவில் கடும் புயல் - மழை; 115 பேர் உயிரிழப்பு; 21 பேர் மாயம்!

பீஜிங், மே 26

புயலோடு கூடிய கடும் மழை, வெள்ளப்பெருக்கு ஆகியவற்றின் அனர்த்தங்களுக்கு தென்சீனாவில் 115 பேர் பலியாகியுள்ளனர். 21 பேர் காணாமற் போயுள்ளனர்.

கடும் மழையால் தென் சீனாவின் பல்வேறு பகுதிகள் வெள்ளத்தில் அமிழ்ந்துள்ளன. தாழ்ந்த பிரதேசங்களைச் சேர்ந்த 6,85,000 பேர் உடனடியாக வெளியேறுமாறு பணிக்கப்பட்டுள்ளார்கள் என அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வெள்ள அனர்த்தங்கள் விளைந்துள்ள பகுதிகளுக்கு அவசரகால மீட்புக் குழுக்கள் அனுப்பப்பட்டுள்ளன. கோடிக்கணக்கான பெறுமதியான உடைமைகள் அழிக்கப்பட்டும், சேதமாக்கப்பட்டும் உள்ளன என சிவில் விவகார அமைச்சு குறிப்பிட்டது.

''கடும் மழை கொட்டுகிறது. காலநிலையில் மாற்றமில்லை. மழை நீடிக்கலாம்'' என ஹுனான் நீர்த்துறை பணியகத் தகவல் தொடர்பு அதிகாரி சென் அறிவித்துள்ளார்.

## வெசாக்கை முன்னிட்டு விசேட ரயில், பஸ் சேவை

கொழும்பு, மே 26

வெசாக் பண்டிகையை முன்னிட்டு புறக்கோட்டையிலிருந்து பல பகுதிகளுக்கும் விசேட பஸ் சேவைகளை நடத்த இலங்கைப் போக்குவரத்துச் சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

நாளைக் காலை 8 மணி முதல் இந்த பஸ் சேவைகள் சேருவில, சோமாவதி, சித்துல் பௌவ, அநுராதபுரம் மற்றும் நயினாதீவு போன்ற பிரசித்திபெற்ற பௌத்த வழிபாட்டுத் தலங்களுக்கு இந்த பஸ் சேவைகள் நடத்தப்படவுள்ளன.

வழிபாட்டுத் தலங்களுக்குச் சென்று கொழும்பு திரும்பும் மக்களின் வசதி கருதி எதிர்வரும் 28 ஆம் திகதி காலை 8 மணிக்குப் புறக்கோட்டையை வந்தடையக் கூடிய வகையில் இந்த பஸ் சேவைகள் மீண்டும் நடத்தப்படவுள்ளன.

இதேவேளை, விசேட ரயில் சேவையை நடத்துவதற்கு ரயில்வே திணைக்களம் திட்டமிட்டுள்ளது என்றும் கூறப்படுகிறது. (சி)

## உள்நாட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயர் நீதித் தராதரங்களைப் பின்பற்றி ஆணைக்குழு உறுப்பினர்கள் தமது விசாரணைகளை முன்னெடுப்பர்.

இதன் காரணமாக ஆணைக்குழுவின் திறமை குறித்து சந்தேகப்பட வேண்டிய அவசியமில்லை - என்றும் அமைச்சர் பீரிஸ் எடுத்துரைத்தார். (அ-சி)

## நல்லிணக்கத்தை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறையில் மஹிந்த ராஜபக்ஷ அரசு பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தம் நிறைவடைந்து ஓராண்டு கழிந்துள்ள நிலையிலும் எதிர்பார்த்தளவு மாற்றம் இலங்கையில் ஏற்படவில்லை என சர்வதேச சமூகம் சுட்டிக்காட்டி வருகின்றது. (அ-சி)

## தாண்டிக்குளத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வல்கள் தெரிவித்தன. எனினும் ஊர்ஜிதம் செய்யமுடியவில்லை.

காயமடைந்தவர்கள் வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். அவர்களில் மூன்றரை வயதுக் குழந்தை ஒன்று மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டது. இந்த விபத்து தொடர்பாக வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பிரிட்டிஷ் இராணியின் மருமகள் ரூ.9 கோடி லஞ்சம் கோரினாராம்

லண்டன், மே 26

பிரிட்டிஷ் இராணி எலிசபெத்தின் 2 ஆவது புதல்வர் இளவரசர் ஆன்ட்ரூ. இவரது மனைவி சாரா பர்கூசன். 'திஸ் ஒவ் தி வேர்ல்ட்' பத்திரிகையின் நிருபர் ஒருவர் இவரை சந்தித்தார்.

அப்போது நிருபர் தன்னை இந்தியத் தொழிலதிபர் என்று அறிமுகப்படுத்திக் கொண்டார். பிரிட்டனுடன் வர்த்தக உறவு வைத்துக்கொள்ளதான் விரும்புகிறார் என்றும் தான் இதுதொடர்பாக ஆன்ட்ரூவை சந்திக்க விரும்புகிறார் என்றும் அவர் சாராவை கேட்டுக்கொண்டார்.

ஆன்ட்ரூவை சந்திக்க ஏற்பாடு செய்ய வேண்டுமானால் தனக்கு ரூ. 9 கோடி இலஞ்சம் தரவேண்டும் என்று சாரா கேட்டுக்கொண்டார். இதற்கு சம்மதித்த நிருபர் முதல் கட்டமாக ரூ. 84 இலட்சத்தை சாராவிடம் கொடுத்தார்.

அதை அவர் வீடியோவாக படம் எடுத்த போதுதான் தன்னிடம் பணம் கொடுத்தவர் நிருபர் என்று சாராவுக்கு தெரிந்தது.

உடனே சாரா அந்த பணத்தை திருப்பி கொடுத்ததுடன், மன்னிப்பும் கேட்டுக் கொண்டார்.

# பங்களாதேஷ் பத்திரிகையாளர் எவரெஸ்ட் சிகரத்தில் ஏறிச் சாதனை!

டாக்கா, மே 26

உலகிலேயே உயரமான எவரெஸ்ட் சிகரத்தில் (8,848 அடி உயரம்) ஏறி பங்களாதேஷைச் சேர்ந்த பத்திரிகையாளர் முஸா இப்ராஹிம் சாதனை புரிந்துள்ளார்.

இதன் மூலம் எவரெஸ்ட் சிகரத்தில் ஏறிய முதல் பங்களாதேஷி என்ற பெருமையையும் அவர் அடைந்துள்ளார்.

பங்களாதேஷ் பத்திரிகையாளர் முஸா இப்ராஹிமுடன் நேபாளத்தைச் சேர்ந்த 14 பேரும், பிரிட்டனைச் சேர்ந்த 6 பேரும், அமெரிக்காவைச் சேர்ந்த ஒருவரும், செர்பியாவைச் சேர்ந்தவரும் எவரெஸ்ட் சிகரத்தில் ஏறியுள்ளனர் என்று அந்நாட்டு பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

எவரெஸ்ட் சிகரத்தின் மீது ஏறிய முதல் பங்களாதேஷி முஸா இப்ராஹிம்தான் என்பது இன்னும் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படவில்லை. இதற்காக இப்ராஹிம் காத்திருக்கிறார்.

அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியிடப்பட்டுவிட்டால் அந்தத் தகவல் இப்ராஹிமுக்கு மட்டுமல்லாது பங்களாதேஷ் மக்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியை ஏற்படுத்தும் என்றும் அந்த பத்திரிகை கூறியுள்ளது.

எவரெஸ்ட் சிகரத்தில் ஏறுவதென்பது முதலில் மாபெரும் சாதனையாக இருந்தது. ஆனால், சமீபகாலமாக இது வழக்கமான ஒன்றாகிவிட்டது. கடந்த 50 ஆண்டுகளில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 1,200 பேர் இதுவரை எவரெஸ்ட் சிகரத்தின் உச்சியை அடைந்து சாதனை படைத்துள்ளனர்.

## மத்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றுக்கு ஐ.நா வழங்கியுள்ள அங்கீகாரமாகவே இது கருதப்படுவதாக இராணுவம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-சி)

## இந்திய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய மீனவர்கள் இலங்கை கரையோரப் பாதுகாப்புப் படையினரால் தொடர்ந்தும் கைது செய்யப்படுவதை தடுப்பதற்கும் இந்திய கடல் எல்லைக்குச் செல்லும் இலங்கை மீன்வர்கள் இந்திய படையினரால் கைதாவது அடிக்கடி இடம்பெறுவதால் இது தொடர்பில் நிரந்தர தீர்வு காண உள்ளதாக மீன்பிடி அமைச்சு உயரதிகாரி ஒருவர் கூறினார்.இது தொடர்பாக இந்தியாவுடன் பேச்சு நடத்த இலங்கை உயர்மட்டக் குழுவொன்று விரைவில் இந்தியா செல்ல உள்ளதாகவும் அவர் கூறினார். (ஒ-11)

## யுத்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லியா நான்காவது இடத்திலும் உள்ளன.

இஸ்லாமிய போராளிகளின் ஆதிக்கம் பெரிய அளவில் உள்ள பிலிப் பைன்ஸ் 5 ஆவது இடத்தில் உள்ளது. ஆறாவது இடத்தில் கொலம்பியா வரிசைப்படுத்தப்பட்டுள்ளது.

சர்வதேச ரீதியாக அதிகரித்துவரும் யுத்தங்கள் மற்றும் உள்நாட்டு மோதல்கள் காரணமாக 2 கோடியே 70 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்த நிலையில் நீண்டகாலமாக வாழ்கின்றனர் என ஐக்கிய நாடுகள் சபையால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ-சி)

## அகதியாக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்ட மலேசிய அரசு, பிறகு ஏற்க மறுத்ததால் கப்பலை விட்டு இறங்காமல் தொடர்ந்து இரண்டு நாள்களாக பழுதடைந்த கப்பலிலேயே இருந்தனர். அததையும் மீறி தங்களை இறக்க முயற்சி செய்தால் கடலில் குதித்து தற்கொலை செய்து கொள்வோம் என்றும் அறிவித்தனர்.

இதனையடுத்து, பினாங்கு துணை முதல்வர் ராமசாமி இவர்களின் உயிரை காப்பாற்ற வேண்டும் என்பதற்காக சமாதானம் செய்து கரைக்கு அழைத்துச் சென்றார்.

அதன்பின்னர் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என தனித்தனி முகாம்களில் அடைக்கப்பட்டனர். இதுகுறித்து பல்வேறு அமைப்புகளிடம் கோரிக்கை விடுத்தும் முகாம்களைவிட்டுவெளியே அனுப்பவில்லை என்றுமுகாமில்உள்ளவர்கள் கூறினர்.

இந்நிலையில் தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தி மேற்படி ஆண்கள் 67 பேர் மாத்திரம் நேற்று முதல் உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளனர். (அ-சி)

A/L தமிழ் கருத்தரங்கு
27, 28 வியாழன் வெள்ளி 10
யாழ். - கொழும்பு எதிர்பார்ப்பு விடைகள்
கட்டணம் 300/= கையேட்டுடன்
நாக.தமிழிந்திரன்
T.E.C
ஸ்ரான்லி வீதி.

## யுத்தக்குற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிபுணர்கள் குழுவொன்றை அமைக்கும் முயற்சியில் நான் இன்னமும் ஈடுபட்டுள்ளேன்.

இலங்கை அரசு உறுதியளித்தபடி மனித உரிமை விடயங்களில் பொறுப்புக்கூறச் செய்வது தொடர்பாக சர்வதேச தராதரங்கள் மற்றும் சர்வதேச அனுபவங்கள் குறித்தும் அவர்கள் ஆலோசனை வழங்குவர்.

இலங்கை அரசு தனது ஆணைக்குழு குறித்து அறிவித்தவை பற்றி உங்களுக்குத் தெரியும்.

இந்த ஆணைக்குழுவின் பணி மற்றும் விவரங்கள் குறித்தும் நிபுணர்கள் குழு எனக்கு அறிவுறுத்தும்.

இலங்கை வெளிவிவகார அமைச்சருடனான சந்திப்பின்போது இடம் பெயர்ந்த மக்களின் நிலைமையில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவது குறித்து வலியுறுத்துவேன்.

இந்த விடயத்தில் அவர்கள் சில முன்னேற்றங்களைக் கண்டுள்ளனர்.

மேலும் தேசிய நல்லிணக்கத்தை ஊக்குவிப்பது, பல்வேறு சமூகங்களைச் சேர்ந்தவர்களுக்கு நேசக்கரம் நீட்டுவது குறித்தும் பேசுவேன்.

இலங்கையில் சர்வதேச மனிதாபிமானச் சட்டங்கள் மீறப்பட்ட விடயத்தில் ஐ.நாவுக்கு தொடர்புள்ளது என சர்வதேச நெருக்கடிக் குழு முன்வைத்திருக்கும் குற்றச்சாட்டுக்களை நான் முழுமையாக நிராகரிக்கிறேன்.

இதேவேளை,சர்வதேச நெருக்கடிக் குழுவின் முயற்சிகளை நாங்கள் பாராட்டுகிறோம்.

அவர்களது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள பரிந்துரைகள் பலவற்றை உற்றுநோக்கியுள்ளோம்.

ஆலோசனைகள், பரிந்துரைகள் தொடர்பாக நாங்கள் ஒருங்கிணைந்து செயற்படுவோம். அவற்றை கவனத்தில் எடுப்போம்'' - என்றார். (அ-சி)

வீடு வாடகைக்கு தேவை
தனியார் நிறுவனமொன்றிற்கு விசாலமான வீடொன்று பலாலி வீதி, கே.கே. எஸ். வீதி, நாவலர் வீதி ஆகிய வீதிகளுக்கு அண்மையில் வாடகைக்குத் தேவைப்படுகிறது.
தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்
077 6622981, 071 8571746

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.05.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Midea Electro Mart

Authorized Dealer for Abans Ltd.



| COMPACQ CQ3014 DESKTOP.PC | |
|---|---|
| PROCESSOR | Intel gore 2 Due 2.8Ghz E7400 |
| MEMORY | 2GB DDR2 |
| HARD DISK | 310GB 30Gb/s Hard Disk |
| DISK DRIVE | DVD Writer |
| MONITOR | 19th L.G.LCD |
| UPS | Toyostar. 650 VA |
| SPEAKER | 900W |
| MOUSE | Compacq |
| KEYBOARD | Compacq |

81,900

| LAPTOPS | COMPACQ 610 | PROLING MINI |
|---|---|---|
| PROCESSOR | Intel Core 2 Duo 2.2Ghz E7400 | Atom Intel 1.6Ghz |
| MEMORY | 2GB DDR2 | IGB |
| HARD DISK | 500GB HDD | 160GB |
| DISK DRIVE | DVD Writer | Nill |
| CAMERA | Web Camera | WebCamera |
| MONITOR | 14.6' | 9" |
| OTHERS | WIFI Blue Tooth | WIFI Blue Tooth |
| | 79,900 | 49,900 |

| PERSONAL PC SYSTEM | INTEL ATOMPC SYSTEM | INTEL DUAI CORE PC SYSTEM | INTEL CORE 2 DUO PC SYSTEM |
|---|---|---|---|
| PROCESSOR | Intel Atom 1.6 GHZ | Intel Dual core 2.7 GHZ | Intel core 2 Duo 2.93 GHZ |
| MOTHER BOARD | Intel 945 GNL Main Board | Intel Chipset G31 Main Board | Intel Chipset G31 Main Board |
| MEMORY | IGB DDR - II, 800MHZ | IGB DDR - II, 800MHZ | IGB DDR - II, 800MHZ |
| HARD DISK | 250GB SATA -7200RPM | 250GB SATA - 7200RPM | 250GB SATA - 7200RPM |
| DISK DRIVE | LG DVD Writer | LG DVD Writer | LG DVD Writer |
| CASING | ATX 500W Ccivo | ATX 500W Ccivo | ATX 500W Ccivo |
| MONITOR | 16" LCD AOC | 16"LG LCD | 19" LG LCD |
| KEYBOARD | Multimedia ps/2 | Multimedia ps/2 | Multimedia ps/2 |
| MOUSE | Optical USB/Ps2 | Optical USB/Ps2 | Optical USB / ps2 |
| SPEAKER | Genius Multimedia 900W | Genius Multimedia 900W | Genius Multimedia 900W |
| UPS | Toyostar 650 VA | Toyostar 650 VA | Toyostar 650 VA |
| | 44,500 | 49,900 | 59,900 |

**SCANNER**
CANON LIDE 100 - 6900
HP G2410 - 9900

**PRINTER**
HP 1005 Laserjet - 16500
HP deskjet 3920 - 6500







*Abans உத்தரவாதத்துடன் இலவச விநியோகத்தைப் பெற்றிடலாம்.
* Computers - Three Years Warranty
* Fridge and washing machine - Five Years Warranty
No: 1-I, 1-H, STANLEY ROAD, JAFFNA, SRILANKA.
TEL: 021 222 4566, FAX: 021 222 1646, E.mail: midea21@gmail.com

# குழந்தைகள் அம்மாவைத் தேடுவது ஏன்?

குழந்தைகள் தாயிடம் அதிக பாசம் காட்டுவதை நீங்கள் பார்த்திருக்கலாம். சில குழந்தைகள் அழுவதை யாராலும் கட்டுப்படுத்த முடியாது. ஆனால் அம்மாவைப் பார்த்தாலே உடனே அழுகையை நிறுத்திவிடும்.



பிறந்து சில மாதங்களில் ஆள்களைப் பார்த்து இனம் காணத் தெரியாத பொழுதே தன் தாயினை குழந்தை நன்றாக அடையாளம் தெரிந்து வைத்திருக்கும். தாயின் அரவணைப் பிற்குப் பிறகே சமாதானம் அடையும். இல்லாவிட் டால் காரணமே இல்லாமல் அழுவதை நாம் பார்க்கலாம்.

ஆனால் இதுபோன்ற பாசத்தை தந்தையுடன் குழந்தை வெளிப்படுத்துவது கிடையாது. தாய்-குழந்தைக்கு மட்டும் அப்படி என்ன பிணைப்பிருக்கிறது? என்று விஞ்ஞானிகள் ஆராய்ந்து வந்தனர். அதற்கான விடை



கிடைத்துவிட்டது. நியூயோர்க் மாகாணத்தைச் சேர்ந்த மவுன்ட் சினாய் மருத்துவ மைய ஆய்வாளர்கள் இதை கண்டுபிடித்துள்ளனர்.

'ஆக்சிடாக்சின் என்னும் ஒருவித ஓமோன்கள் பெண்களின் உடலில் காணப்படுகின்றன. இவைதான் தாய்- குழந்தையின் பிணைப்பைத் தூண்டுகிறது. அதுமட்டுமல்லாமல் வேறு சில பணிகளிலும் இந்த ஓமோன்கள் பணியாற்றுகிறது. தாய்க்கு, பாலூட்டும் உணர்ச்சியை அதிகமாக்குவது, உடல் உழைப்பைத் தூண்டுவது, குழந்தைகளைத் தாயின் அருகாமையை எதிர்பார்த்து காத்திருக்க வைப்பது போன்ற பணிகளில் ஆக்சிடாக்சின் பங்கேற்கிறது. ★★★

கொமர்ஷல் வங்கியின்
பொற் கடன்
அடகுச் சேவை



அதிகூடிய முதல்
குறைந்த வட்டி

- தங்க ஆபரணத்திற்கு எதிராக வங்கி மேலதிகப் பற்று வசதி
- தங்க ஆபரணத்திற்கு அதிகூடிய முதல்
- உயர்ந்த இரகசியத் தன்மை
- தங்க ஆபரணத்திற்கு பாதுகாப்பு உறுதி
- குறைந்த வட்டி விதம்

தற்போது தெரிவு செய்யப்பட்ட கொமர்ஷல் வங்கிக் கிளைகளில் அடகுச் சேவை வசதிகளை பெற்றுக்கொள்ள முடியும்.

COMMERCIAL BANK
www.combank.lk

OgilvyAction

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு சில வேட்பாளர்களின் வழிகாட்டலாலேயே நாடாளுமன்ற பிரதிநிதியை இழந்தது சம்மாந்துறை

## ஐ.தே.கவின் அமைப்பாளர் தெரிவிப்பு

அம்பாறை,மே26

"தேர்தல் காலங்களில் ஒரு சில வேட்பாளர்களின் தவறான வழிகாட்டலால் ஆயிரக்கணக்கான வாக்குகளை அள்ளி வழங்கியும் ஒரு நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் இல்லாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். சம்மாந்துறை மக்கள் தவிப்பதைப் பார்க்கும் போது வேதனை அளிக்கிறது."

- இவ்வாறு ஐ.தே.கவின் சம்மாந்துறைத் தொகுதி அமைப்பாளர் எம்.ரி. ஹசன் அலி தெரிவித்தார்.

அவரது இல்லத்தில் இடம்பெற்ற ஒன்றுகூடலின்போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இலங்கையின் சுதந்திரத்துக்குப் பின்னரான அரசியல் வரலாற்றில் - சிறுபான்மையினரைப் பொறுத்தவரையில் மிகவும் முக்கியமான காலகட்டம் இது. இன்று நாட்டிலே உறுதியான நாடாளுமன்றம் இருக்கிறது. இந்த பலமான நாடாளுமன்ற காலத்தில் தேர்தல் தொகுதிகளுக்கான எல்லை நிர்ணயம், கிராமசேவையாளர் பிரிவுகளுக்கான எல்லை நிர்ணயம், பிரதேச செயலகப் பிரிவு எல்லை நிர்ணயம், இனப்பிரச்சினைக்கான நிலையானத் தீர்வுத் திட்டம் என்பன போன்ற மிகவும் முக்கியமான நிகழ்வுகள், எதிர்கால சந்ததியின் அரசியல் உரிமைகள் போன்றவற்றைத் தீர்மானிக்க இருக்கிறது. இந்த வேளையில், சம்மாந்துறை மக்களுக்கு அரசியல் பிரதிநிதித்துவம் இல்லாமலிருப்பது பெரும் கவலை அளிக்கிறது.

அம்பாறை மாவட்டத்தில் வாக்காளர்கள் அதிகமாகக் கொண்ட ஊர் மட்டுமல்லாது, சம்மாந்துறை கல்வி கற்றோரையும், கல்விகற்ற இளைஞர் - யுவதிகளையும் தன்னுள் அடக்கிய சனத்தொகை செறிவான ஊர். இருப்பினும், அரசியல் சானக்கியமற்ற வேட்பாளர்களின் தவறான வழிகாட்டலினால் ஆயிரக்கணக்கான வாக்குகள் வீண்விரயமக்கப்பட்டன. அது மட்டுமின்றி, பிரதிநிதித்துவத்தையும் இழந்து விட்டோம் - என்றார். (ளி)

# கிழக்கு மாகாண சபையின் வெற்றிடமான மு.காவின் உறுப்பினர் பதவி சுழற்சி முறையில்

மட்டக்களப்பு,மே26

வெற்றிடமாகவுள்ள கிழக்கு மாகாண சபையின் மட்டக்களப்பு மாவட்டத்திற்கான முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர் பதவி சுழற்சி முறையில் பகிரப்படவுள்ளது என கட்சியின் செயலாளர் நாயகம் ஹசன் அலி தெரிவித்துள்ளார்.




இதன் அடிப்படையில் முதல் பதினைந்து மாதங்களுக்கு வாழைச்சேனையைச் சேர்ந்த இஸ்மாயில் ஹாஜியாரும், அடுத்த பதினைந்து மாதங்களுக்கு மீராவோடை புர் கானும் நியமிக்கப்படவுள்ளார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

முஸ்லிம் காங்கிரஸின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களுடனான கூட்டத்தின் போதே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும், இக்கூட்டத்தில் கிழக்கு மாகாண சபையை பிரநிதிநிதித்துவப்படுத்தும் அனைத்து உறுப்பினர்கள், கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம், செயலாளர் ஹசன் அலி மற்றும் தவிசாளர் பஷீர் சேகுதாவூத் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர். எனினும், வெற்றிடமாகவுள்ள கிழக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு இதுவரை எவரும் நியமிக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ளி)

# சங்குமண் கண்டி பிள்ளையார் ஆலயத்துக்கு மின் இணைப்பு வழங்க நடவடிக்கை

அம்பாறை,மே26

பிரசித்திபெற்ற பழம்பெரும் ஆலயமான சங்குமண் கண்டி காட்டுப்பிள்ளையார் ஆலயத்திற்கு மின்னொளி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தின் தென்கோடியில் அக்கரைப்பற்று - பொத்துவில் ஏ- 4 பிரதான நெடுஞ்சாலையில் திருக்கோவிலையடுத்து சங்குமண் கண்டி கிராமம் அமைந்துள்ளது.

பிரதான வீதியிலும் பிள்ளையார் ஆலயம் ஒன்றுள்ளது. அது வழிப்பிள்ளையாராக அவ் வீதியால் செல்வோர் இறங்கி முறிகண்டிப் பிள்ளையார் அல்லது களுதாவளைப் பிள்ளையார் ஆலயம் போல் தரிசித்துச் செல்வது வழமை.

பிரதான வீதியிலிருந்து மேற்கே சுமார் ஒரு கிலோ மீற்றர் காட்டுக்குள் சென்றதும் இக்காட்டுப்பிள்ளையார் ஆலயம் வரும். முற்றிலும் பாரிய மரங்களால் சூழப்பட்டுள்ள இந்த ஆலயம் அண்மையில் சங்காபிஷேகம் கண்டது.

அங்கு இதுவரை மின்சாரமில்லாதது பெருங் குறையாக இருந்து வந்தது. கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சீனித்தம்பி செல்வராசா தனது நிதியொதுக்கீட்டில் 8 லட்சம் ரூபாவை இதற்காக ஒதுக்கியிருந்தார். (ளி)

# கிழக்கில் சுற்றுலாத்துறையை மேம்படுத்த விசேட நடவடிக்கை

மட்டக்களப்பு,மே26

கிழக்கு மாகாணத்தில் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஹோட்டல் முகாமைத்துவப் பயிற்சியை நிறைவு செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் அண்மையில் ஆரையம்பதி நந்தகோபன் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வு ஹோட்டல் முகாமைத்துவப் பணிப்பாளர் சுரங்க சில்வா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சுற்றுலாத்துறை ஹோட்டல் முகாமைத்துவப் பயிற்சியை நிறைவு செய்த 50 பேருக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இவ்வைபவத்தில் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன், கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பூ. பிரசாந்தன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ளி)

# இறக்குவானை தோட்டக்குடியிருப்புமீது குண்டுவீச்சு: சந்தேகத்தின்பேரில் சகோதரர்கள் இருவர் கைது

## காதல் விவகாரமே காரணமாம்

நுவரெலியா,மே26

இறக்குவனை - ஹெதரலியவத்தை தோட்டக்குடியிருப்பு ஒன்றின்மீது மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதல் தொடர்பாக சகோதரர்கள் இருவர் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சந்தேகநபர்களின் சகோதரியுடன் அந்தப்பகுதியைச் சேர்ந்த ஒருவர் காதல் தொடர்பு வைத்திருந்ததால் ஏற்பட்ட தகராறு முற்றியதையடுத்தே குண்டுத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்ற இக்குண்டுவீச்சு சம்பவத்தில் இறக்குவானை டெல்பின் தோட்டத்தைச் சேர்ந்த 11 பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்களில் மூவர் மாணவர்கள், இருவர் பெண்கள்.




காயமடைந்த அனைவரும் உடனடியாக இறக்குவானை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் நால்வர் மேலதிக சிகிச்சைக்காக இரத்தினபுரி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர். திருமகன் குமுதன் என்ற பாடசாலை மாணவன் ஆபத்தான நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்டார்.

இரத்தினபுரி மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நேற்றுமுன்தினம் காலை சம்பவ இடத்திற்கு நேரில் சென்று அப்பகுதி மக்களுடன் உரையாடினார். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று மக்களிடம் உறுதியளித்த அவர், அந்தப் பகுதியின் பாதுகாப்புக்காக பொலிஸாரைக் கடமையில் ஈடுபடுத்தியிருந்தார்.

இந்தக் குண்டுவீச்சு சம்பவம் தொடர்பாக இறக்குவானை, காவத்தை, கொடக்கவல ஆகிய மூன்று பொலிஸ் நிலையங்களையும் சேர்ந்த பொலிஸார் கூட்டாக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, மேற்படி குண்டுவீச்சு சம்பவத்தைக் கண்டித்தும் - தமக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்படவேண்டும் என வலியுறுத்தியும் இறக்குவனை கொடக்கவல தோட்டத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் நேற்றுமுன்தினம் அடையாள வேலை நிறுத்தத்தில் குதித்தனர். (ளி)

# அரசமைப்பு மாற்றங்கள் தொடர்பாக மலையகம் சிந்தித்துச் செயற்படவேண்டும்

## ஜ.தொ.காவின் தலவாக்கலை அமைப்பாளர் வலியுறுத்து

நுவரெலியா,மே25

இலங்கையில் அண்மைக்கால தேர்தல்களின் பின்பு அரசியல்துறையில் பல்வேறு மாற்றங்கள் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. அரசு மக்களின் தேவை கருதியும், அரசியல் சிவிலமைப்புகளின் வேண்டுகோளுக்கிணங்கவும் அரசியல்துறையில் பிரதானமாக இரண்டு மாற்றங்களைக் கொண்டுவர உள்ளதாக அறிய முடிகின்றது. என ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸின் தலவாக்கலை - பூண்டுலோய பிரதேச அமைப்பாளர் பீ. இராஜேந்திரன் தெரிவித்தார்.

பூண்டுலோயப் பிரதேசத்தைச் சேர்ந்த சீன் தோட்டத்தில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியவை வருமாறு:-

ஒன்று அசரமைப்பு சீர்திருத்தம் குறிப்பாக தேர்தல் முறைமைகளில் மாற்றங்களை அறிமுகப்படுத்தல். இரண்டாவது பிரதேச செயலக எல்லை, கிராமசேவையாளர் பிரிவு எல்லை ஆகியவற்றை மீள்நிர்ணயம் செய்தல் அல்லது புதிதாக அமைத்தல்.

இந்த இரு விடயங்களிலும் மலையக இந்திய வம்சாவளித் தமிழர்கள், முஸ்லிம்கள், வடக்கு - கிழக்குத் தமிழர்களுக்குச் சாதகமாகவோ, பாதகமாகவோ அமையலாம். குறிப்பாக மலையக மக்கள் சம்பந்தமாக அவர் களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகள், சிவிலமைப்புகள், தொழிற்சங்கங்கள், கல்வி நிறுவனங்கள் கவனமெடுப்பதுடன் மக்களிடையே விழிப்புணர்வையும் ஏற்படுத்த வேண்டும்.

மலையக மக்களைப் பொறுத்தவரையில், தேர்தல் முறைமைகளில் மாற்றங்களை கொண்டுவருவதென்பது முக்கிய விடயமாகும். ஏனெனில், தற்போதைய நடைமுறையிலிருக்கும் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைப்படி குறிப்பிட்ட மாவட்டங்களில் சிறுபான்மையின வாக்காளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் அதிகமான பிரதிநிதிகளைத் தெரிவு செய்யக்கூடிய வாய்ப்புகள் காணப்படுகின்றன.

எனவே, விகிதாசாரப் பிரதிநிதித்துவம் சனத்தொகை அடிப்படையில் சிறுபான்மையினராகக் காணப்படுகின்ற குழுக்களின் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கு வாய்ப்புடையதாக அமைகின்றது.

எனவே, இவ்விடயத்தில் மலையக புத்திஜீவிகளும், அரசியல் வாதிகளும் சிந்தித்துச் செயற்படவேண்டும் - என்றார். (ளி)

# மவுசாகலை நீர்த்தேக்கத்தில் இருக்கும் புராதனச் சின்னங்களைப் பாதுகாக்குக!

## மஸ்கெலியா இந்துமாமன்றச் செயலர் வலியுறுத்து

நுவரெலியா,மே26

மவுசாகலை நீர்த்தேக்கத்தில் அமிழ்ந்து கிடந்து தற்போது வெளித்தெரியும் ஸ்ரீ சண்முகநாதர் ஆலயத்திலுள்ள பல்வேறு தொல்பொருள்கள் விசமிகளால் எடுத்துச் செல்லப்படும் சாத்தியக்கூறுகள் நிலவுகின்றன எனச் சுட்டிக்காட்டியிருக்கும் மஸ்கெலியா இந்துமாமன்றச் செயலாளர் செ.தி.பெருமாள், இதனைத் தடுப்பதற்கு இலங்கை மின்சாரசபை உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இலங்கையின் மிகப்பெரிய நீர்த்தேக்கமான மவுசாகலை நீர்த்தேக்கம் 93 ஆயிரம் ஏக்கர் பரப்பளவைக் கொண்டதாகும். 1969 ஆம் ஆண்டு முதல் இங்கு மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது.

இந்த நீர்த்தேக்கத்திலிருந்து கென்யோன், லக்சபான, பொல்பிட்டிய ஆகிய மூன்று மின் நிலையங்களுக்கு நீர்கொண்டு செல்லப்பட்டு மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகின்றது.

பாரிய பரப்பளவைக் கொண்ட இந்த நீர்த்தேக்கத்திற்கு [illegible] ஓயா, காட்மோர், [illegible] மஸ்கெலியா ஆகிய பகுதிகளிலிருந்து வரும் ஆறுகள் மூலம் தண்ணீர் வந்து சேர்கின்றது.

எனினும், கடந்த 40 ஆண்டுகளாக இந்த நீர்தேக்கத்தில் உள்ள வண்டல் மண், மணல் மற்றும் குப்பைகள் அகற்றப்படவில்லை.

இவ்வாறு குப்பைகள் தேங்குவதனால் நீர்தேக்கத்தின் நீரின் கொள்ளளவு குறைந்து கொண்டே போகின்றது.

கடந்த மாதங்களில் நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் 69 அடியாகக் குறைந்து காணப்பட்ட போதாவது இலங்கை மின்சார சபை அந்தக் குப்பைகளை அகற்றியிருக்கலாம்.

மேலும் பாதுகாக்கப்பட வேண்டிய ஸ்ரீ சண்முக நாதர் ஆலயம் நீரில் மூழ்கியுள்ளது. இந்த ஆலயம் 40 ஆண்டுகள் நீரில் மூழ்கடிக் கப்பட்டிருந்தாலும் அது இன்னும் கம்பீரமான தோற்றத்துடன் உள்ளமை குறிப்பிடத்தக்கது. அந்த ஆலயத்தில் பல கோடி பெருமதியான வெட்டுக் கற்கள் உள்ளன. மேலும் அந்த ஆலயம் 1917 ஆம் ஆண்டு தனி கருங்கற்களினால் கட்டப்பட்டது. அதில் உள்ள தூண்களின் சிற்பங்கள் பாதுகாக்க வேண்டியவையாகும்.

எனவே, உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள இந்தப் புனித பொருட்களை விசமிகள் எடுத்துச்செல்ல அனுமதி வழங்கக்கூடாது. சம்பந்தப்பட்ட மின்சார சபை உடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org